Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3210)

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 09 செவ்வாய்க்கிழமை (24.12.2013) பக்கங்கள் 20 ஓசை – 084

10



வியாபாரியள் தானே?

11



முதலிடம்

## தேர்தல் ஆணையாளருக்கு அதிக அதிகாரங்கள்

### ஆலோசனை முன்வைப்பு

தேர்தல் ஆணையாளருக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென ட்ரான்ஸ்பெரன்சி இன்டர்நெசனல் நிறுவனம் கோரியுள்ளது.

தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைகள் மற்றும் குற்றச் செயல்களை தடுத்து நிறுத்தக் கூடிய வகையில் தேர்தல் ஆணையாளருக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. தேர்தல் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்கு தேர்தல் நீதவான் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கோரியுள்ளது.

தேர்தல் சட்ட மீறல்களை தடுத்து நிறுத்த தேர்தல் நீதவான் ஒருவரை நியமிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

## ஜனாதிபதியுடன் கூட்டமைப்பு அடுத்த வாரம் சந்திப்பு?

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இந்த வாரம் இடம்பெறும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமாகாண சபையின் செயற்பாடுகள, மற்றும் வடமாகாண ஆளுநருடனான முரண்பாடுகளும் மாற்றங்களும் உள்ளிட்ட பல விடயங்கள் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடமாகாணத்தை அபிவிருத்தி செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வீதி விபத்தில் வயோதிபர் பலி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் இலங்கை போக்குவரத்து சபை பேருந்து மோதியதில் வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம், வெள்ளாம் போக்கடியைச் சேர்ந்த சின்னம்பு அருளம்பு (வயது -73) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

நேற்றுக் காலை சாவகச்சேரி சந்தையில் பொருட்களை வாங்கிக்கொண்டு வீட்டிற்கு சென்றுகொண்டிருந்த குறித்த வயோதிபரை பின்னால் வந்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்து மோதியதிலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவரின் சடலம் தற்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன நல்லிணக்கத்தை உருவாக்க தென்னாபிரிக்கா மத்தியஸ்தம்



(கொழும்பு)

யுத்தத்துக்குப் பிந்திய இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு தென்னாபிரிக்கா மத்தியஸ்த பேச்சுக்களை ஆரம்பிக்கவிருக்கிறது.

இலங்கை அரசின் கோரிக்கையைத் தொடர்ந்து மேற்படி முயற்சிகளில் அடுத்த மாதம் தாம் முழுமையாக இறங்கவுள்ளதாக இந்தியா மற்றும் இலங்கைக்கான தென்னாபிரிக்காவின் உயர்ஸ்தானிகர் ஜியோப் டொய்ட்ஜ் தெரிவித்தார்.

முதற்கட்டமாக இந்த விவகாரத்தில் நேரடியாக சம்பந்தப்பட்டிருக்கும் முக்கிய மூன்று தரப்புக்களுடன் தாம் பேச்சுக்களை ஆரம்பிக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே இலங்கையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் நல்லிணக்க முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவை. எனினும் அதற்காக இலங்கையின் நல்லிணக்கம் தொடர்பில் வித்தை காட்டும் பதில்களை தம்மால் வழங்க முடியாதுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

நல்லிணக்க நடவடிக்கைகள் தொடர்பில் இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பணிகள் சிறந்தவை. எனினும் இன்னும் உண்மை மற்றும் நல்லிணக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இந்தியா மற்றும் இலங்கைக்கான தென்னாபிரிக்காவின் உயர்ஸ்தானிகர் ஜியோப் டொய்ட்ஜ் குறிப்பிட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் தலைவர் நெல்சன் மண்டேலாவின் வழியை பின்பற்றுவதே இலங்கைக்கு உரிய தீர்வை பெற்றுத்தரும் என்று

(19) ஆம் பக்கம் பார்க்க

## மாணவர்கள் மத்தியில் போதைவஸ்து பாவனை

### வெளியாகியது அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனையாளர்களில் அதிகமானவர்கள் பாடசாலை மாணவர்கள்தான் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

உங்கள் பிள்ளைகளை போதைப் பொருள் பழக்கத்திலிருந்து காத்திடுங்கள். பாடசாலை மாணவர்களிடம் போதைப்பொருள் பழக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் திரைமறைவில் மேற்கொள்ளப்படுவதாக போதைப் பொருள் கட்டுப்பாட்டு சபை தெரிவித்துள்ளது. சாதாரண தர மற்றும் உயர் தர மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ளதாக

(19) ஆம் பக்கம் பார்க்க


## போராட்டத்துக்கு முற்றுப்புள்ளி; அமைச்சரின் உறுதிமொழியை ஏற்றனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிவரும் சுகாதாரத் தொண்டர்களால் முன்னெடுக்கப்பட்டு வந்த தொடர் பணிப் புறக்கணிப்பு போராட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய வாக்குறுதியை அடுத்து நேற்று முடிவுக்கு வந்துள்ளது.

போதனா வைத்தியசாலைக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர், அங்கு பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் கலந்து கொண்ட தொண்டர்களுடன் நேரில் கலந்துரையாடி நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தறிந்து

(19) ஆம் பக்கம் பார்க்க



## மன்னார் மனிதப் புதைகுழியில் அதிகளவு எலும்புக்கூடுகள்

### 24 மணிநேர பாதுகாப்புக்கு பணிப்பு




(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் இதுவரை 10 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று மாலை மன்னார் மாவட்ட நீதவான் ஆனந்தி கனகரட்ணம் மூன்றாவது நாளாக குறித்த மனிதப் புதைகுழி உள்ள இடத்திற்குச் சென்று பார்வையிட்டதோடு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை அப்பகுதியில் மேலும் தோண்டி மனித எலும்புக்கூடுகளை மீட்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(19) ஆம் பக்கம் பார்க்க

## காணி உரிமைப் பிரச்சினை யுத்தத்துக்குப் பின் அதிகரிப்பு

### தீர்வுக்கு அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட காணித்தகராறுகள் பதிவாகியுள்ளன. இவற்றுக்கு மிகவிரைவில் தீர்வுகாண்பதற்கு காணி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் இவ்வாறான காணிப் பிரச்சினைகளுக்கு, அடுத்த ஒரு வருடத்திற்குள் தீர்வு வழங்கப்படும் என காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

2014 ஆம் ஆண்டுக்குள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணிப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படும் என அமைச்சின் செயலாளர் அசோக பீரிஸ் தெரிவித்தார்.

வடக்கு, மாகாணங்களின் காணி பிரச்சினைகள் தொடர்பில் இதுவரை ஒரு இலட்சத்து 32 ஆயிரம் முறைப்பாடுகள்

(19) ஆம் பக்கம் பார்க்க

உறுதிமொழி வழங்கப்பட்டதை அடுத்து

# குடும்பநல உத்தியோகத்தர்களின் பணிப் பகிஷ்கரிப்பு நிறைவடைந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உறுதிமொழியை அடுத்து தாம் பணிப்பகிஷ்கரிப்பை நிறுத்திக்கொண்டுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தொண்டர்களாக கடமையாற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில தினங்களாக யாழ்.மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில், தொண்டர்களாக கடமையாற்றிவரும் குடும் பநல உத்தியோகத்தர்கள் தாம் பல வருடங்களாக குறைந்த வேதனத்துடன் கடமையாற்றி வருவதாகத் தெரிவித்து தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவித்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு முன்பாக பணிப்புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டுவந்ததுடன், தமது போராட்டம் குறித்து பல்வேறு தரப்புக்களிடம் தெரியப்படுத்தியிருந்தனர்.

இந் நிலையில் நேற்று வழமை போல போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அவர்களில் ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்தும் இருவர் வீதம் பேச்சுக்கு வருமாறு அழைத்து கலந்துரையாடிய யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இனிவரும் வெற்றிடங்களுக்கு உங்களில் இருந்து நிரப்ப நடவடிக்கை எடுப்பதுடன். வெளியில் இருந்து எவரும் இந்த வெற்றிடங்களுக்கு நிரப்பப்பட மாட்டார்கள் எனவும் உங்களுக்கு அமைச்சர் மட்ட சந்திப்பு ஒன்றை தாம் ஏற்பாடு செய்து தருவதாகவும் உறுதி மொழி வழங்கியயதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து தமது போராட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்த தொண்டர் பணியாளர்கள் அவ்வாறு தமக்கு வழங்கப்பட்ட உறுதி மொழிகள் நிறைவேற்றப்படாதவிடத்து மீண்டும் தமது நிரந்தரநியமனத்தை வெளிப்படுத்தி போராட்டத்தை நடத்துவோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மருத்துவ மனைகள் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் நடைபெற்றுவரும் தொண்டர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக யாழ்.வைத்தியசாலை வீதியில் நேற்றும் பொலிஸார் மேலதிகமாக பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பா)

# சமுர்த்தி வங்கிக்கிளைகள் கண்காணிப்புக்குழுவால் சோதனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி வங்கிகளிற்கு தேசிய மட்ட வங்கி கண்காணிப்புக்குழு உத்தியோகத்தர்கள் கடந்த வாரம் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

கொழும்பு சமுர்த்தி அதிகார சபையில் இருந்து வருகை தந்திருந்த வங்கி கண்காணிப்பு குழுவினர் கிளி.மாவட்டத்தில் உள்ள 7 சமுர்த்தி வங்கிகளிற்கும் சென்று வங்கி நிதி நடவடிக்கைகள் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டதுடன், மகாசங்கங்களின் செயற்பாடு தொடர்பிலும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் 7 வங்கிகளில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட சமுர்த்தி வங்கியே சிறப்பாக செயற்பட்டுவருவதாகவும், அதிகளவானவர்களிற்கு கடன் வழங்கியிருப்பதாகவும் பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (130)



சுன்னாகம் கிழக்கு மகாமாரி அம்மன் ஆலய பிரதம குரு மயிலணி பிரம்மஸ்ரீ சண்முகானந்தக் குருக்கள் தம்பதியினரின் சஷ்டியத்த பூர்த்தி விழா ஆலயத்தில் இடம்பெற்றபோது சிவஸ்ரீ சபாபதிக்குருக்கள் வாழ்த்துரை வழங்கினார். பரிபாலன சபையினர் கௌரவம் வழங்கினர். இந்நிகழ்வின் நிழற்பதிவைக் காணலாம்.

# உடையார்கட்டுப் பகுதியில் திருட்டுச்சம்பவங்கள் அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள உடையார் கட்டு கிராமத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்..

இக்கிராமத்தில் மக்கள் மீள் குடியேறி வாழ்வாதார ரீதியாக மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்துவரும் நிலையில் திருடர்களின் தொல்லையால் தாம் மேலும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக இக்கிராமத்தில் கால்நடைகள், தேங்காய் என்பன களவாடப்படுவதாகவும், வீடுகளின் வெளியில் வைக்கப்படும் பொருட்களும் களவாடப்படுவதாகவும் இதனால் தாம் அச்சத்துடன் இருக்க வேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறித்த கிராமம் மற்றும் அதனை அண்டிய கிராமங்கள் உள்ளடக்கும் வகையில் உடையார்கட்டு கிராமத்தில் பொலிஸ் நிலையம் அமைக்கப்படும் இடத்து இவ்வாறான திருட்டுச்சம்பவங்கள் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுக்கமுடியும் எனவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர். (கே)

# இந்த மாதத்தில் இதுவரை 50 பேருக்கு டெங்குத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் இந்த மாதத்தின் நேற்றுவரையான காலப்பகுதியில், டெங்கு நோய்த்தொற்றுக்கு இலக்காகிய சுமார் 50 வரையானவர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நேற்று இவ்வாறு சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலிருந்து ஒருவர் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும், அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதங்களைவிட இந்த மாதத்திலேயே அதிகமானவர்கள் டெங்கு நோய்க்கு சிகிச்சை பெற்றதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். எனவே வரும் நாட்களிலும் இந்த நோயின் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# உண்டியல் உடைப்பு

(வரணி)

வடவரணி கந்தப்பெருமான் ஆலய உண்டியல் அண்மையில் திருடர்களால் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

வழமைபோல் காலைப் பூசைக்காக பூசகர் ஆலயத்திற்கு வந்தபின்பே நிலைமை தெரியவந்தது.

ஏற்கனவே இவ்வாலயத்தில் ஒருதடவை உண்டியல் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஒளிவிழா நிகழ்வு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் எதிர் வரும் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஒளிவிழா நிகழ்வு நடைபெறவுள்ளது. (21)

# இளைஞர் மீதான தாக்குதல்; கண்டித்து கவனயீர்ப்பு போர்



யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இளைஞர்கள் மீதான படுகொலைகள், பாலியல் வன்முறைகள், போதைப்பொருள் பாவனை, இலஞ்ச ஊழல் போன்றவற்றைக் கண்டித்தும் அண்மையில் திருடர்களின் தாக்குதலில் மரணமடைந்த யாழ். இந்துக் கல்லூரியின் மாணவன் ஜதுஷனின் கொலை தொடர்பாக நீதியான விசாரணை நடாத்தக் கோரியும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

கச்சேரி கிழக்கு ஒழுங்கைப் பகுதியிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்டக் காரியாலயத்திற்கு முன்பாக நேற்றைய தினம் இடம்பெற்ற இக்கவனயீர்ப்புப் போராட்டத்தில் நூற்றிற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டனர்.

இவர்கள் 'இளைஞர்களே எதிர்காலத் தூண்கள் அவர்களை அழிக்காதீர்கள்', 'வன்முறைகளூடாக இளைஞர்களின் எதிர்காலத்தை நசுக்காதே', 'இளைஞர்கள் மீதான வன்முறையினை நிறுத்து', 'வருங்கால விருட்சங்களை கருக்காதே' போன்ற சுலோகங்களைத் தாங்கி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக பேரணியொன்று நடாத்தப்படவிருந்தாலும் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமைக் காரியாலயம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் அனுமதியின்மை காரணமாகவே கவனயீர்ப்புப் போராட்டமாக நடாத்தப்பட்டதாக தெரிகின்றது.

இக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் மாவட்ட இளைஞர் கழக சம்மேளன நிர்வாக சபை உறுப்பினர்கள், பிரதேச இளைஞர் கழக சம்மேளனங்களின் பிரதிநிதிகள், தேசிய சம்மேளனப் பிரதிநிதிகள், இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சியாக இது சம்பந்தமான மகஜர்கள் இளைஞர் விவகார திறன்கள் அபிவிருத்தி அமைச்சரூடாக ஜனாதிபதிக்கும், வடமாகாண சபை முதலமைச்சருக்கும், வடமாகாண இளைஞர் விவகார அமைச்சருக்கும், இளைஞர்கள் தொடர்பான அதிகாரிகளுக்கும் வழங்கப்படவுள்ளது. (48)

## "கலாபூஷணம்" வழங்கி கௌரவிப்பு

(வட்டுக்கோட்டை)



வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கவிஞர் வல்லிபுரம் யோகானந்தசிவம் அவர்களுக்கு அண்மையில் அரசினால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

# குரங்குகளின் தொல்லை; வீட்டுத்தோட்ட செய்கை பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் குரங்குகளால் வாழ்வெழுச்சி திட்டப்பணிகள் பாதிப்படைவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

வாழ்வெழுச்சி திட்டம் மூலம் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் 50 குடும்பங்களை தெரிவு செய்து வீட்டுத்தோட்டம் செய்யுமாறு பழமரக்கன்றுகள், மரக்கறி விதைகள் வழங்கப்பட்டன. அவைகள் பெரும்பாலான இடங்களில் பயன்தரும் நிலையில் உள்ளதாகவும் அதனை குரங்குகள் கூட்டமாக வந்து அழித்து விடுவதாகவும் கவலையுடன் தெரிவிக்கின்றனர். மீசாலை, அல்லாரை, வேம்பிராய், மந்துவில், கொடிகாமம், மிருசுவில், வரணி போன்ற இடங்களில் குரங்குகளின் தொல்லை அதிகமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் வீடுகள், கோயில்கள், பாடசாலைகள், பொது மண்டபங்கள் முதலானவற்றையும் சேதப்படுத்துவதாகவும், பயன்தரு மரங்களான மா, கொய்யா, வாழை போன்றவற்றையும் சேதப்படுத்தி விவசாயிகளை நட்டமடையச் செய்வதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே வன ஜீவராசிகள் அமைச்சு உடன் கவனமெடுத்து குரங்குகளின் தொல்லையினை குறைத்து வறிய மக்களின் வாழ்வெழுச்சித்திட்டம் வெற்றியடைய நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)




"ஓம் நமசிவாய ஆன்மீக வங்கி"

இந்துக்களே உங்களுடைய தார்மீக கடமையாக ஓம் நமசிவாய மந்திரத்தினை 1008 முறை எழுதி அருகில் உள்ள ஆலயங்களில் சமர்ப்பித்து எமதுசமயத்தினையும் சமயவிழுமியங்களையும் எம்மக்களையும் காத்திட

அர்ப்பணிப்புடன் ஐந்தெழுத்துமந்திரம் முதலீடு செய்வீர்களாக!

# கிராம மட்ட அமைப்புக்கள் பொறுப்புணர்ந்து செயற்படவேண்டும்

## தென்மராட்சி பிரதேச செயலர் தெரிவிப்பு

(கொடிகாமம்)

கிராமத்தின் அபிவிருத்திக்கு அக்கிராமத்திலுள்ள கிராமமட்ட பொது அமைப்புக்கள் சிறப்பாக செயற்படவேண்டும். அதனூடாகவே கிராமத்தினை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லலாம் என தென்மராட்சிப் பிரதேச செயலர் தெரிவித்தார்.

தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கிராம மட்ட அமைப்புக்கள் தமது கடமைகளையும், பொறுப்புக்களையும் உணர்ந்து கிராம அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கினால் கிராமம் எழுச்சிபெறும் இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

கிராமத்திற்கு சேவை செய்யக்கூடிய பொறுப்புணர்வுள்ளவர்கள் அமைப்புக்களை முன்நின்று நடாத்தவேண்டும் கிராமத்தின் தேவைகளை இனங்காணும் பட்சத்தில் அதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுடன் தொடர்புகொண்டு உரிய தீர்வினைப் பெற்று கிராமத்தினை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் செல்லலாம் என்றார். (130)

# நீர்வேலிப் பகுதிகளில் தொடரும் வெங்காயத்திருட்டு

(அச்சுவேலி)

நீர்வேலி மந்திரிமலை எனும் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீடொன்றில் வைக்கப்பட்டிருந்த 10 அந்தருக்கு மேற்பட்ட வெங்காயம் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

நள்ளிரவு வேளையில் வீட்டுக் காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் வீட்டுக்குள் நுழைந்தவர்கள் தமது கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ளனர்.

விடியற்காலையில் எழுந்து பார்த்த வேளையிலேயே தமது வெங்காயம் திருடப்பட்டுள்ளதை அறிந்த வீட்டுக்காரர்கள் கவலையுடன் ஏனையோருக்கு இதனைத் தெரிவித்தனர்.

எனினும் திருட்டுப்போன வெங்காயத்தின் பெறுமதி 70 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்டதாகவும் கூறும் இவர்கள் வெங்காயச் செய்கையினை மேற்கொள்ளும் காலம் நெருங்கும் வேளையில் இத்தகைய சம்பவங்கள் தற்போது அதிகரித்துக் காணப்படுவதாகவும் கூறுகின்றனர்.

கடந்த பல நாட்களாக இப்பகுதியில் வேறு திருட்டுச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகக் கூறும் அதேநேரம் மூன்று நான்கு பேர் சேர்ந்தே குழுவாக இணைந்து இத்தகைய செயல்களில் ஈடுபட்டு வருவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (85)

# கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் இரண்டு நூல்கள் வெளியீடு




(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் இரண்டு நூல்களின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் காலை செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் ச.சிவசிறீ தலைமையில் இடம்பெற்றது.


வரவேற்புரையை கலாசார உத்தியோகத்தர் அ. சிவஞானசீலன் நிகழ்த்தினார்.

ந.மயூரரூபனின் சொற்குவியம் த.அஜந்தகுமாரின் படைப்பின் கதவுகள் என்ற இரண்டு நூல்களுக்குமான வெளியீட்டுரையை வடமாகாண கல்வி அமைச்சுச் செயலாளர் சி. சத்தியசீலன் நிகழ்த்தினார்.

அறிமுக உரைகளை கை. சரவணன், சி.திருச்செந்தூரன் ஆகியோரும் மதிப்பீட்டுரைகளை தி.செல்வமனோகரன், இ.இராஜேஸ் கண்ணன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

ஏற்புரைகளை நூலாசிரியர்களும் நன்றியுரையை கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. ரூபகுமாரும் நிகழ்த்தினர். (90,18)

# நான் பாதி நீ பாதி அல்லது எனக்கு நீ தம்பி உனக்கு நான் தம்பி




பாராளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு வரச் சொல்லி தமிழ்க் கூட்டமைப்புக்கு மீண்டும் அழைப்பு விடுத்திருக்கிறது அரசாங்கம்.

20.12.2013 வெள்ளிக்கிழமை வரவு–செலவுத் திட்டத்தின் இறுதி வாக்கெடுப்பின் போது பாராளுமன்றத்தில் இந்த அழைப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்தார்.

அப்போது கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உட்பட அவரது அணியினர் அனைவரும் அங்கே சமூகமளித்திருந்தனர்.

யாரும் வாய் திறக்கவில்லை. ஆனால், இவர்களுக்குத் தெரியும் தாங்கள் தெரிவுக் குழுவுக்கு போகப்போவதில்லை என்று.

என்றாலும், ஒரு பயல்கூட அதைப்பற்றி பேச விரும்பவில்லை.

இரவு சபாநாயகர் மாளிகையில் விருந்தல்லவா! ஆகவே, எல்லோரும் "மூச்...!"

இங்கே வாயைத் திறந்தால் அங்கே விருந்து இல்லை. அங்கே வாயைத் திறக்க வேண்டும் என்றால் இங்கே வாயை மூட வேண்டும்.

இரவு விருந்தில் சம்பந்தனைக் கட்டித் தழுவினார் மகிந்த ராஜபக்ஷ, மகிந்த ராஜபக்ஷவை கொஞ்சிக் குலவினார் சம்பந்தன்.

சந்தோசம் என்றால் அப்படியொரு சந்தோசம். சிரிப்பு என்றால் அப்படி ஒரு சிரிப்பு!

அடுத்தநாள் கூட்டமைப்பு விட்டது ஒரு அறிவித்தலை.

அரசாங்கத்தின் கோரிக்கையை பரிசீலிப்பதற்கு தயார். ஆனால் தமிழ்க் கூட்டமைப்பின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்க வேண்டும்.

கூட்டமைப்பின் இந்த அறிவித்தலைப் பார்த்த பெரும்பாலான தமிழர்கள் புல்லரித்துப் போனார்கள்.

"என்ன இருந்தாலும் எங்கட ஆக்கள் விடமாட்டாங்கள். பார்த்தியளா அரசாங்கத்தை லொக்கில மாட்டீட்டாங்கள்" என்று பேசிக் கொண்டனர்.

அரசாங்கத்திற்குத் தெரியும், அரசியல் தீர்வொன்றுக்கு ஒருபோதும் கூட்டமைப்பு வரவே வராது என்று.

அதைப்போல தமிழ்க் கூட்டமைப்புக்கும் தெரியும், தான் ஒருபோதும் அரசியல் தீர்வுக்கு ஒத்துழைக்கப்போவதில்லை என்று.

ஆனால், இப்படி ஒரு Game–ஐ இரண்டு தரப்பும் சேர்ந்து விளையாடுகின்றன.

இதையெல்லாம் இன்னும் விளங்காமல் வாயைத் திறந்து கொண்டிருக்கின்றார்கள் இலங்கை வாழ் பெருங்குடி மக்கள்.

இந்த வெங்காயத் தலைகள் இருக்கும் வரை இந்த மாதிரி "பஞ்ச்" வசனங்களுக்கு பஞ்சமே இல்லை.

நான் அடிக்கிற மாதிரி அடிக்கிறேன் நீ அழுவதைப் போல் அழு என்ற மாதிரி படங்காட்ட வேண்டியதுதான்.

உலகத்திலேயே மிக நீண்ட நாட்கள் ஓடிச் சாதனை புரியும் சினிமாவாக இலங்கை இனப்பிரச்சினை கின்னஸில் இடம்பெறப் போகிறது.

அந்த மாதிரியான சண்டைக் காட்சிகள், சமாதானப் பேச்சுவார்த்தைகள், நல்லிணக்க உறவுகள், கூடிக் குலாவுகைகள், அக்கப்போர், எதிர்ப்போர், உடைவுகள், சரிவுகள், நகைச் சுவைக் காட்சிகள் என்று இந்தச் சினிமாவில் ஏராளம் காட்சிகள்.

இதில் கதாநாயகர்கள், வில்லன்கள், துணை நடிகர்கள், குணச் சித்திரப் பாத்திரங்கள், நகைச்சுவை நடிகர்கள், துணை இயக்குநர்கள், இயக்குநர்கள் என ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு.

இந்தச் சினிமாவை வைத்து நிறையப்பேர் நன்றாக உழைக்கிறார்கள்.

சிலர் தலைமுறை தலைமுறையாக உழைக்கிறார்கள்.

கோடி கோடியாக கொட்டிக் கொடுக்கிற சீதேவியாக இனப்பிரச்சினை பலருக்கு இருக்கிறது.

வாழ வைக்கும் இந்த தெய்வத்தை இவர்கள் எல்லாம் லேசில் கைவிடுவார்களா?

ஆகவே, எனக்கு நீ தம்பி உனக்கு நான் தம்பி என்ற மாதிரி ஆளுக்காள் முதுகைத் தடவிக்கொள்ள வேண்டியதுதான்.

வியாபாரத்தில் ஏட்டிக்குப் போட்டியான நிலைமை வெளிப்படையாகத் தெரியும்.

ஆனால், உள்ளே எல்லா வியாபாரிகளும் ஒருவருக்கொருவர் உள் உடன்படிக்கையில் ஒன்றாகவே இருப்பார்கள்

இலங்கையின் அரசியல்வாதிகளில் பலரும் பல கட்சிகளும் இப்படித்தான். 'நீ பாதி நான் பாதி என்ற மாதிரி.

வெங்காயத்தலைகள் இருக்கு மட்டும் இந்த அரசியல் வியாபாரிகளுக்குக் கொண்டாட்டமே.

நம்பிக்கையுடன் இருக்கும்போது எந்தக் காரியமும் கடினமாகத் தெரிவதில்லை. - ஜோன்ரேட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## என்ன தீர்வு? எப்போது வரும்?

மீண்டும் ஒருமுறை மார்ச் மாத ஜெனீவா நம்பிக்கையை ஞாபகப்படுத்த இது தருணம் என்று தோன்றுகிறது. தலைவர்களும் தமிழ் ஊடகங்களும் அறுதியாக அளித்துவரும் நம்பிக்கை, தமிழ்மக்கள் தேர்தலில் ஏக ஒற்றுமையைக் காட்டிய தன் பலனை இந்தமுறை எப்படியும் ஜெனீவாவில் அறுவடை செய்துகொள்ளும்படியாக இருக்கும் என்பதுதான்.

ஜெனீவா அறுவடை என்பது வேறொன்றுமல்ல, இலங்கை அரசை சர்வதேச விசாரணைக்கு முகங்கொடுக்க வைப்பதுதான். அதன்பிறகு என்ன நடக்கும்? இதனால் தமிழ் மக்களுக்கு என்ன கிடைக்கும்? என்ற கேள்விகளுக்கு யாரும் பதில் சொல்வதில்லை–சொன்னதில்லை.

டேவிட் கமரூன் உறுதியாகச் சொல்லியிருக்கிறார், நவநீதம் பிள்ளை கோபத்தோடு போயிருக்கிறார், பான் கீ மூன் பார்த்துக் கொள்வதாகச் சொல்லிவிட்டார், அமெரிக்கா ஆராய்ந்து வருகிறது, இந்தியா ஏப்ரலில் நடக்கப்போகும் தேர்தலுக்காக இம்முறை வலுகடுமை காட்டியாக வேண்டும்... எனவே இம்முறை இலங்கை தப்ப முடியாது. இதுதான் 2014 மார்ச்சுக்கான நம்பிக்கையூட்டல்கள்.

2012 மற்றும் 2013 மார்ச்சுகளுக்கும் நம்பிக்கையூட்டல்கள் நடந்தன. இப்போதுள்ளதைவிட சிற்சில வேறுபாடுகள் அப்போது இருந்தன அவ்வளவுதான். மற்றபடி இலங்கை அரசின் மீது சர்வதேச விசாரணையைக் கொண்டுவருவதுதான், தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்தும் தீர்வதற்கான ஒரே மார்க்கம் என்பதே கடந்த மூன்று வருடங்களாக தமிழ்த் தலைவர்களின், ஊடகங்களின் பேச்சுக்கள் எழுத்துக்களிலிருந்து நாம் விளங்கிக்கொள்ளும்படி இருப்பது.

இந்த நாட்டிலுள்ள தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைக்கு இலங்கை அரசுடன் பேசித்தான் தீர்வு வரவேண்டும், இந்த நாட்டு மக்களது பெரும்பான்மை ஆதரவை அது பெறவேண்டும், ஆகவே யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு நடைமுறைச் சாத்தியமான கோரிக்கைகளாக நமது தீர்வு வரைபை நாம் முன்வைக்க வேண்டும், அதற்கு இப்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே சிறந்த இடம் என்பதெல்லாம் இந்தப் பத்தியில் அடிக்கடி குறிப்பிட்டு வரும் விடயங்கள்தான்.

மாறாக, சர்வதேச அழுத்தம் எல்லாவற்றையும் சாதிக்கும் என்று சொல்லி தொடர்ந்து நம்பிக்கையளித்து வருபவர்களிடம், 2014 மார்ச்சுக்குப் பிறகாவது நாம், “அடுத்து என்ன?” என்ற கேள்வியை எழுப்ப வேண்டும். எல்லாக் கஷ்டங்களையும் பல்லைக் கடித்துக்கொண்டு ஜெனீவா மாநாடு வரை பொறுத்திருங்கள் என்றவர்களிடம், “சர்வதேச விசாரணைக்குப் பிறகு என்ன?” என்று கேட்க நமக்கு உரிமை உண்டு.

ஒருவேளை சர்வதேச விசாரணையே எடுபடாமல் இந்த மாநாட்டிலும் சறுக்கிவிட்டால், “2015 மார்ச் வரை இன்னுங் கொஞ்சம் ஊண்டிப் பல்லை கடிச்சுக்கொண்டிருங்கள்” என்று அவர்கள் கூசாமல் சொல்லவும் கூடும். அப்போது, நாம் பல்லைக் கடித்தபடியே, “அதற்கிடையில் அரசுடனும் பேசுவதை ஒரு முயற்சியாகச் செய்தால் என்ன?” என்பதைத் தலைவர்களுக்குச் சொல்லியாக வேண்டும்.

இல்லையேல், சர்வதேச அழுத்தம் வரும்வரை நமது பெரும்பான்மைத் தமிழ் மக்கள் மாறாத தமது சொந்த அழுத்தங்களுடனேயேதான் வாழவேண்டி வரும். எங்களது அழுத்தங்களைக் குறைப்பதற்கு, தாங்கள் எடுத்துவைத்திருக்கும் மாகாண சபையாலும் முடியாது என்பவர்கள், குறைந்தபட்சம் என்ன தீர்வு? எப்போது வரும்? என்பதையாவது சொல்ல வேண்டும்.

கணிசமான புலம்பெயர் தமிழர்களின், தனிநாட்டுக் கனவுதான் இவர்களதும் காத்திருப்பு என்றால் அதையாவது நாணயமாக உரைத்துவிட வேண்டும். - ஆசிரியர்.

# ஐக்கிய தேசியக் கட்சி கைப்பாவையாக மாறியுள்ளது

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க

ஐக்கிய தேசியக் கட்சி பல் தேசிய சக்திகளின் கைப்பாவையாக மாறியுள்ளது. நாட்டை பிரிதாவது ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும் என்ற முயற்சியில் அந்தக் கட்சி ஈடுபட்டுள்ளது. என ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடந்த போது, சிங்களவருக்கும், பௌத்தர்களுக்கும் எதிராக குரல் கொடுக்கும் அடிப்படைவாத குழுக்களை இணைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி கண்காட்சிகளை நடத்தியது.

இப்படியான கூட்டணிகளை ஏற்படுத்தி வடக்கில் சம்பந்தனின் வாக்குகளையும் கிழக்கின் அடிப்படைவாதிகளின் வாக்குகளையும் மலையகத்தின் அடிப்படைவாதிகளின் வாக்குகளையும் கொழும்பு அடிப்படைவாதிகளின் வாக்குகளையும் பெற்று சிங்களவர்களை பிளவுபடுத்தி மீண்டும் ஆட்சியை பிடிக்கலாம் என ஐக்கிய தேசியக் கட்சி கனவு காண்கின்றது. எனினும் அந்தக் கனவு ஈடேறப் போவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கனவே வடக்கில் சிங்களவர்களின் உரிமைகளை மீறி வருகிறது. வடக்கில் தனியான அரசியல் நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தும் பின்னணியை கட்டியெழுப்பி வருகின்றனர்.

1971 ஆம் ஆண்டு 20 ஆயிரம் சிங்களவர்கள் வாழ்ந்து வந்தனர். இன்று அந்த மக்களை அங்கு மீள்குடியேற விக்னேஸ்வரன் அனுமதிப்பதில்லை. அவர் கொழும்பு பம்பலப்பிட்டியில் வசித்து வருகிறார்.

ஆனால் சிங்களவர்களுக்கு வடக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. சிங்களவர்களுக்கு மத சுதந்திரம் இல்லை. விரும்பிய இடத்தில் குடியேறும் தேசிய சுதந்திரமில்லை.

நாட்டை பிளவுபடுத்துவதற்கு எதிராகவும் நாட்டை காப்பதற்கும், போதைப் பொருள் விற்பனைக்கு எதிராகவும் ஜாதிக ஹெல உறுமய தொடர்ந்தும் போராடும் என்றார்.

# கல்முனை மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் ஒத்திவைப்பு

கல்முனை மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என கல்முனை மேயர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். கல்முனை மாநகர சபையின் 2014 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்றுப் பி.ப 2.30 மணிக்கு மேயர் நிசாம் காரியப்பரினால் சமர்ப்பிக்கப்படவிருந்தது.

இந்த நிலையிலேயே மாநகர சபையின் கூட்டம் 31 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் மேயர் நிசாம் காரியப்பர் அறிவித்திருந்தார்.

கல்முனை மேயராக நிசாம் காரியப்பர் நியமிக்கப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கப்படவுள்ள முதலாவது வரவு-செலவுத் திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, கல்முனை மாநகர சபையின் வரவு-செலவுத் திட்டத்திற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர்கள் எதிர்த்து வாக்களிப்பர் என அறிவிக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள காரைதீவு மற்றும் நாவிதன்வெளி ஆகிய பிரதேச சபைகளின் வரவு-செலவுத் திட்டங்களிற்கு எதிராக குறித்த பிரதேச சபைகளிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிராக வாக்களித்திருந்தமையே இதற்குக் காரணம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, கல்முனை மேயர் நிசாம் காரியப்பர் மற்றும் பிரதி மேயர் சிராஸ் மீராசாஹிப்பிற்கும் இடையிலான இழுபறி தொடர்ந்து காணப்படுகின்றது.

கல்முனை மாநகர சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்களின் கூட்டம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பிரதி மேயர் சிராஸ் மீராசாஹிப் உட்பட நான்கு உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை. இவர்கள் இந்த வரவு - செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக தகவல் கிடைக்கப்பட்டதை அடுத்தே, வரவு - செலவுத் திட்டம் பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# வளர்ச்சியை நோக்கிப் பயணிக்க தயாராகவுள்ளது இலங்கை

### பாதுகாப்புச் செயலர்

இலங்கை தற்பொழுது கடந்த காலங்களில் எதிர்கொண்ட பிரச்சினைகளை சமாளித்து விரைவான மற்றும் சமமான வளர்ச்சியை நோக்கி செல்ல தயாராக உள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அறிவுசார்ந்த தொழிலாளர்கள் மற்றும் ஏனைய தொழில்சார் நிபுணத்துவம் பெற்றவர்கள் இலங்கையில் வசிக்கவும் தொழில்களை மேற்கொள்ளவும் தேவையான உகந்த சூழலை அரசாங்கம் உருவாக்க ஆர்வமாக உள்ளது.

1980 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரை நாட்டில் காணப்பட்ட நிச்சயமற்ற நிலைமை காரணமாக சிறந்த மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை அடைய வேண்டும் என்பதற்காக பல திறமைசாலிகள் நாட்டை பிற நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர்.

மோதல்கள் காரணமாகவும் உயர்கல்விக்காகவும் சிறந்த இலாபகரமான தொழிலை பெறவும் சிறந்த தரமான வாழ்க்கையை அனுபவிப்பதற்காகவும் இவர்கள் நாட்டை விட்டு சென்றமை நாட்டுக்கு ஒரு பேரிழப்பாகும்.

நாட்டில் இருந்து வெளியேறிய சகல சமூகத்தினரும் தமது தாய் நாட்டுக்கு திரும்பக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளதால், தாய்நாட்டுக்கு திரும்புவது குறித்து இவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

# மன்னாரில் காணி மோசடி

மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் ஓலைத்தொடுவாய் கிராம சேவகர் பிரிவில் 510 ஏக்கர் காணி தனி நபர் ஒருவரினால் அபகரிக்கப்பட்டு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சபையின் உப-தலைவர் அந்தோனி சகாயம் தெரிவித்துள்ளார்.

ஓலைத்தொடுவாயில் உள்ள உவரி, தாழங்காடு, கூருப்பன் குடியிருப்பு ஆகிய மூன்று கிராமங்களையும் உள்ளடக்கிய வகையிலேயே 510 ஏக்கர் காணி அபகரிக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த ஒருவரினால் அபகரிக்கப்பட்ட இந்தக் காணியானது போலி ஆவணங்கள் ஊடாக கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.


இந்த நிலையில் குறித்த 510 ஏக்கர் காணியில் தமது காணிகளும் உள்ளடங்குவதாக உரிமை கோரி சுமார் 20 இற்கும் மேற்பட்டவர்கள் மன்னார் பிரதேச சபைக்கு வந்து என்னிடம் முறையிட்டுள்ளனர்.

காணியை சட்டவிரோதமாக விற்பனை செய்த புதுக்குடியிருப்பைச் சேர்ந்த குறித்த நபரையும், அதனை வாங்கிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரையும் அழைத்து பேச்சுவார்த்தைகள் தற்போது நடைபெறுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

**2014இல்** பெப்ரவரிக்கு முன் போர்க்குற்றங்கள் மனிதஉரிமை மீறல்களை சுதந்திரமாகவும், நம்பகமாகவும் விசாரிக்கத் தவறினால் ஐ.நா.மனித உரிமைகள் பேரவைகள் மூலம் சர்வதேச விசாரணைகளுக்கு அழுத்தங்களைக் கொடுப்போம் என்று டேவிட் கமரூன்:


**ஜெனீவா விவகாரங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் இலங்கை ஆழமாகச் சிந்தித்து வருகிறது. இதன் வெளிப்பாடாக தமிழ்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களில் சிலரை இரகசியமாக சந்தித்துள்ள ஆட்சியாளர்கள் ஜெனிவாப் பொறிமுறைக்கு முன்னர் இலங்கைக்கு கைகொடுக்கவேண்டுமென கேட்டுள்ளனர். இதற்கு சம்மதித்துள்ள கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்கள் இந்த நகர்வை மேற்கொள்வதற்கு தென்னாபிரிக்காவின் உதவியைப் பெறமுடியுமென்றும், தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்துடன் நாங்கள் இருதரப்பும் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்தால் மேற்குலகம் இலங்கைக்கு அழுத்தம் போடமுடியாத நிலைமை உருவாகும் என்றும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.**





# 2014இல் மேற்குலகின் பொறியில் மாட்டுமா இலங்கை?





**நியூயோர்க்கில் இடம்பெற்ற இந்த சந்திப்புக் குறித்து இருதரப்பும் மௌனம் காத்தே வருகின்றன. இந்த சந்திப்புக் குறித்து இன்ரசிற்றி பிறஸ் மின்அஞ்சல் மூலம் கேள்வி எழுப்பிய போது ஐ.நா பிரதிப் பொதுச்செயலருக்கும், கோத்தாபய ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு தொடர்பான விபரங்களை வெளியிட அவர் மறுத்ததுடன் உறுப்பு நாடுகளுக்கு இடையிலான வழக்கமான கலந்துரையாடலில் ஒரு பகுதி இது என்றும் ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளரினால் பதில் அளிக்கப்பட்டிருந்தது.**

## வே.அர்ச்சுணன்

இந்த இரண்டு தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்த இலங்கை தவறியுள்ள நிலையில் சர்வதேச சமூகத்திற்கு சர்வதேச விசாரணை என்ற ஒரே தெரிவு மட்டுமே எஞ்சியுள்ளதாக ஆய் வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஜெனிவா தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்த தவறினால் இந்த வழி முறையை நோக்கி நகர்வது தவிர்க்க முடியாதது என்று அமெரிக்க இராஜாங்கதிணைக்கள அதிகாரிகள் ஏற்கனவே பல முறை எச்சரித்துவிட்டனர். இப்போது பிரித்தானியாவும் இதையே வலியுறுத்த ஆரம்பித்துள்ளது. இலங்கைக்கு சார்பாக சீனா, ரஷ்யா, கியூபா, சவுதி அரேபியா, வியட்நாம், அல்ஜீரியா போன்ற நாடுகள் ஆதரவாக உள்ள நிலையில் ஏனைய நாடுகளின் பலத்தையும், மேற்குலகின் பொறிமுறையையும் உள்நாட்டு விசாரணைகளில் நம்பிக்கை இல்லையெனவும் இதுவரை நவநீதம் பிள்ளை மட்டுமே கூறிவந்தார். இப்போது டேவிட் கமரூனும் இதேநிலைப்பாட்டிற்கு வந்துள்ளார். நவநீதம் பிள்ளையின் கருத்தை டேவிட் கமரூன் பலமடையச் செய்துள்ளார்.

இதுவரை அமெரிக்கா இந்தளவிற்கு கடுமையான கருத்தை வெளியிடவில்லை. சமீபகாலமாக அமெரிக்கா மௌனமாக இருந்து வந்தாலும், போர்க்குற்றங்கள் குறித்து உறுதியான ஆதாரங்களை சேகரிக்கும் முயற்சியில் அது ஈடுபட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கருத்து வெளியிடுகின்றனர். ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவரும் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான புதிய உதவி ராஜாங்க செயலர் நிஷா தேசாய் பிஸ்வாலும் அமெரிக்க ராஜாங்க திணைக்கள அதிகாரிகளும் அடுத்த மார்ச் அமர்வில் இலங்கைக்கு கடி

இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். பிரித்தானியாவின் இந்த எச்சரிக்கை சாதாரணமானதோ? அல்லது வெறும் தேர்தல் பிரசாரங்களுக்கு உரியதோ அல்ல. இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராக இதுவரை அமெரிக்கா எந்தளவிற்கு கடுமையான போக்கை கடைப்பிடித்ததோ அதற்கு கூடுதலான நிலைப்பாட்டை பிரித்தானியா எடுத்துள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை டேவிட்கமரூனின் எச்சரிக்கையை காலக்கெடுவில் ஏற்கமுடியாதென்று ஜனாதிபதியின் அமைச்சர்களும் நிராகரித்துள்ளனர். ஆனால் அவற்றை எல்லாம் கவனத்தில் எடுக்கும் வலிமை ஐ.நாவுக்கு இருக்கிறதா என்பது கேள்விக்குறியானதுதான். ஏற்கனவே இரண்டு தீர்மானங்கள் இலங்கைக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட நிலையில் சாதாரண்மாக எண்ணிவிடவும் முடியாது.

இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணைப் பொறிமுறையை ஏற்க முடியாது என்று திடமாகக் கூறிவரும் நிலையில் ஐ.நா அமைப்பு ஒன்றில் தீர்மானத்தை முன்னெடுக்கும் போது இலங்கையின் விருப்பு வெறுப்புக்கள் எல்லாம் ஒரு கட்டத்தில் கருத்தில் எடுக்கப்படாமல் போய்விடலாம்.

வாளம் போடும் முயற்சிகளில் களம் இறங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் ஜெனீவா விவகாரங்களை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் இலங்கை ஆழமாகச் சிந்தித்து வருகிறது. இதன் வெளிப்பாடாக தமிழ்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களில் சிலரை இரகசியமாக சந்தித்துள்ள ஆட்சியாளர்கள் ஜெனிவாப் பொறிமுறைக்கு முன்னர் இலங்கைக்கு கைகொடுக்கவேண்டுமென கேட்டுள்ளனர். இதற்கு சம்மதித்துள்ள கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்கள் இந்த நகர்வைமேற்கொள்வதற்கு தென்னாபிரிக்காவின் உதவியைப் பெறமுடியுமென்றும், தென்னாபிரிக்காவின் மத்தியஸ்தத்துடன் நாங்கள் இருதரப்பும் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்தால் மேற்குலகம் இலங்கைக்கு அழுத்தம் போடமுடியாத நிலைமை உருவாகும் என்றும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

குறிப்பாக நாங்கள் உங்களுக்கு உதவுவதற்கு இதைவிட வேறு சந்தர்ப்பங்கள் கிடைக்காது என்றும் இவ்வாறான நகர்வை மேற்கொள்வதன் ஊடாகவே நாங்கள் தமிழ் மக்களிடமும் தப்பிக் கொள்ள முடியும் அல்லது அரசியல் செய்யமுடியும் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

நிலைமை இவ்வாறு நகர்ந்து கொண்டிருந்த வேளையில் தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மறைவைத் தொடர்ந்து இந்த விவகாரம் சற்று அடங்கியுள்ளது என்று குறிப்பிடலாம். எனினும் ஏதோ ஒரு விதத்தில் இலங்கைக்கு கைகொடுக்கும் மறைமுகமான நிகழ்ச்சி நிரலுடன் கூட்டமைப்பின் அரசசார்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரபரப்புடன் காணப்படுவதாக கூறப்படுகிறது.

இதேவேளை இலங்கை இந்த விடயங்களை கையாளும் நோக்குடன் ஐ.நா சபையின் பிரதிப் பொதுச்செயலர் யான் எலியாசனை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ சந்தித்துப் பேச்சு நடத்தினார். நியூயோர்க்கில் இடம்பெற்ற இந்த சந்திப்புக் குறித்து இருதரப்பும் மௌனம் காத்தேவருகின்றன. இந்த சந்திப்புக் குறித்து இன்ர சிற்றி பிறஸ் மின்அஞ்சல் மூலம் கேள்வி எழுப்பிய போது ஐ.நா பிரதிப் பொதுச்செயலருக்கும், கோத்தாபய ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பு தொடர்பான விபரங்களை வெளியிட அவர் மறுத்ததுடன் உறுப்பு நாடுகளுக்கு இடையிலான வழக்கமான கலந்துரையாடலில் ஒரு பகுதி இது என்றும் ஐ.நா பொதுச்செயலரின் பேச்சாளரினால் பதில் அளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை ஐ.நா பொதுச்செயலர் பான்கிமூன் மனித உரிமைகளைப் பேண உலகளாவிய பொறிமுறை ஒன்று உருவாக்கப்பட்டு வருவதாகவும் இந்தப் பொறிமுறை உலகளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார். நியூயோர்க்கில் 2013ஆம் ஆண்டிற்கான இறுதி ஊடகவியலாளர் சந்திப்பை பான்கிமூன் நடத்தியிருந்தார். இதன்போது 2013ஆம் ஆண்டில் உங்களால் முன்னெடுக்கப்பட்ட கொள்கை நகர்வுகளில் ஒன்றான போருக்கு பின்னர் இலங்கையின் முன்னிலைத் திட்டம் குறித்து நீங்களும் பிரதிப்பொதுச்செயலரும் பேசியிருந்தீர்கள். தற்போது இந்தத் திட்டம் செயற்பாட்டில் உள்ளதா? இது ஐ.நாவின் கொள்கையா என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பியபோது இதற்குப் பதில் அளித்த ஐ.நா பொதுச்செயலாளர்,

இந்த உரிமைகள் முன்னிலை நடவடிக்கைத் திட்டம் நாம் இலங்கையின் அண்மைய நிலவரங்களில் இருந்து என்ன கற்றுக்கொண்டோம் என்பதை அடிப்படையாகக் கொண்டது.நானொரு நிபுணர் குழுவை நியமித்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். அந்தக்குழு ஐ.நா எல்லாவற்றையும் நிறைவேற்றியதா, சரியான முறையில் செயற்பட்டதா என்று பார்க்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டது. நாம் ஒரு தீவிரமான உள்ளக ஆய்வை மேற்கொண்டோம். இதன் பெறுபேறாகவே, நாம் மிகவும முக்கியமான செயற்திட்டத்தை உருவாக்கியுள்ளோம். நிச்சயமாக, இந்தச் செயல்திட்டம், குறிப்பிட்ட ஒரு நாட்டையோ அல்லது ஒரு விடயத்தையோ இலக்கு வைத்து உருவாக்கப்பட்டதல்ல. இது எல்லா நாடுகளுக்கும், எல்லா விவகாரங்களுக்கும், எல்லா சூழ்நிலைகளுக்கும் பயன்படும். அதனால்தான், இதனை நான் ஐ.நா பொதுச்சபையில் எனதுபலமான பரிந்துரைகளுடன் சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. ஐ.நா பொதுச்சபைத் தலைவர் உறுப்பு நாடுகளுக்கு அதை விநியோகித்து வருகிறார். எனவே இது ஒரு மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், எந்த விவகாரத்திலும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதைத் தடுக்கவும், இது ஒரு வழி காட்டியாக இருக்கும். இதில் நான் உறுதியாக இருக்கிறேன். இந்த விடயம் தொடர்பாக, நான் எனது மூத்த அதிகாரிகளுடன் கூட கலந்துரையாடியுள்ளேன் என்று பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் பான் கீ மூன் இலங்கை தொடர்பான நிலைப்பாட்டில் மேற்குலகின் பொறிமுறைக்கு ஏற்ப நடப்பாரா? அல்லது சுய முடிவுகளை உலகின் நடப்புக்கு ஏற்ப எடுப்பாரா என்ற கேள்வியும் வலுவாக எழத் தொடங்கியுள்ளது. 2014இல் மேற்குலகின் பொறிக்குள் இலங்கை சிக்குமா? அல்லது தப்பிப் பிழைக்குமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான சட்டங்கள் போதுமானதல்ல

(கொழும்பு)

பயங்கரவாத ஒழிப்பு தொடர்பில் தற்போது காணப்படும் சட்டங்கள் போதுமானதல்ல என பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான பேராசிரியர் ரொஹான் குணரட்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோ அல்லது வேறு தரப்பினரோ பயங்கரவாதத்திற்கு ஆதரவளித்தால் அவர்களை தண்டிக்க வேண்டும்.

பயங்கர வாதிகள் அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதித்தமை அரசாங்கம் விட்ட தவறாகவே கருதப்பட வேண்டும் பயங்கரவாதிகள் மற்றும் அவர்களது உறவினர்கள் தேர்தலில் போட்டியிட அனுமதித்ததன் மூலம் பயங்கரவாத பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பயங்கரவாதத்தை போற்றி புகழ்ந்து ஆற்றும் உரைகளை தடை செய்யக் கூடிய வகையில் நாட்டில் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பயங்கரவாதத்தை போற்றும் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல சில தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தேசியக் கொடி, தேசிய கீதம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தனர்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அரசியல் சாசனத்திற்கு புறம்பான வகையில் செயற்படுவதனை அனுமதிக்க முடியாது. பயங்கரவாதிகளுக்கு புகழாரம் சூட்டும் நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அவ்வாறு மேற்கொள்வதனால் பயங்கரவாதம் மீள உருவாகக் கூடிய சாத்தியங்கள் ஏற்படும்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணும் அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டிக்க வேண்டும். வெளிநாடுகளில் தொடர்ந்தும் விடுதலைப் புலிகள் செயற்பட்டு வருகின்றனர். பல்வேறு வழிகளில் தமிழ் அரசியல்வாதிகளுக்கு அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றனர்.

அமெரிக்கா, இந்தியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் விடுதலைப் புலி ஆதரவு அமைப்புக்களை தடை செய்ததனைப் போன்று இலங்கை அரசாங்கமும் தடை செய்ய வேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் புலிகளும் இணைந்து செயற்படுகின்றனர். அவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



பிரிவினைவாதத்திற்கு எதிராக அரசாங்கம் நிலையான தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் 13 ஆவது திருத்தச் சட்டம் நாட்டுக்கு பொருத்தமற்றது. அதனை இரத்துச் செய்ய வேண்டும்.

மத்திய அரசாங்கத்தின் ஊடாக அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் இதன் மூலம் தமிழ் முஸ்லிம் பிரதமர்களை நியமிக்க முடியும்.

அனைத்து இனங்களை ஒருங்கிணைத்து இலங்கை தேசிய அடையாளத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# சிறைச்சாலைகளின் பாதுகாப்பு பலப்படுத்தல்

சிறைச்சாலைகளின் பாதுகாப்பை மேலும் பலப்படுத்த சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வெலிக்கடை, மேகசின் மற்றும் புதிய சிறைச்சாலையின் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்திரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

சிறைச்சாலைகளில் அதி தொழில்நுட்பம் வாய்ந்த கருவிகள் 4 பொருத்தப்படவுள்ளன. எதிர்வரும் காலங்களில் ஏனைய சிறைச்சாலைகளிலும் அதி தொழிநுட்பம் கொண்ட கருவிகளைப் பொருத்த எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கொழும்பு பெண்கள் சிறைச்சாலைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் துணைவியார் ஷிராந்தி ராஜபக்ஷ விஜயம் மேற்கொண்டார். இதன்போது தாய்மாருடன் சிறையிலுள்ள சிறுவர்கள் தொடர்பாக அவர் கவனம் செலுத்தியுள்ளார்.

# பணத்திற்கு பின்பாக ஓடும் அரசியல்வாதிகள் ஏராளம்

## பிரதி அமைச்சர் சரத்குமார வீர்ரட்ன

(கொழும்பு)

பெரும்பான்மையான அரசியல்வாதிகள் பணத்தை, முன்னிலைப் படுத்துபவர்கள் என மீன்பிடித்துறை பிரதி அமைச்சர் சரத்குமார வீர்ரட்ன தெரிவித்துள்ளார்.

பணத்தின் பின் ஓடும் அரசியல்வாதிகளே அதிகளவில் இன்று அரசாங்கத்தில் உள்ளனர்.பணத்திற்காகவும், பதவிக்காகவும் அரசியலை விற்பனை செய்கின்றவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. இவ்வாறான அரசியல்வாதிகளினால் கட்சிக்கோ, நாட்டுக்கோ நன்மை ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலமாக உள்ளூராட்சி மன்றங்களின் வரவு செலவுத் திட்ட தோல்வி தொடர்பில் நீர்கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# இஸ்லாமிய சட்ட கேள்வி குறித்து விசாரணைகள் நடத்தப்படும்

## பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

நடைபெற்று முடிந்த 2013 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இஸ்லாமிய சட்டம் குறித்து வெளியான கேள்வி தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

க.பொ.த. (சா/த) பரீட்சையின் இறுதி நாளான கடந்த வெள்ளிக்கிழமை விருப்பத்திற்குரிய பாடமாக குடியுரிமை கல்வி மற்றும் சமூக நிர்வாகம் பாடத்திற்கான பரீட்சை நடைபெற்றது. இந்தப் பரீட்சையில் பகுதி-II இல் இஸ்லாமிய சட்டத்தின் இரண்டு பாதகமான மூலாதாரங்களை குறிப்பிடுக? என்ற வினா கேட்கப்பட்டிருந்தது.

இந்த வினா தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் முஸ்லிம் சமூகத்திடம் கவலையினை வெளியிடுவதாக பிரதி பரீட்சைகள் ஆணையாளர் எஸ்.முஹமட் தெரிவித்தார்.

இந்தக் கேள்வி ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் சரியாக இருப்பதாகவும் அந்தக் கேள்வியை தமிழ்மொழிக்கு மொழி மாற்றம் செய்யும் போது அல்லது தட்டச்சு செய்யும் போது தவறு இடம் பெற்றிருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

எனினும், இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் விசாரணைகளை மேற்கொள்ளும் என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் ஆங்கிலம் மற்றும் சிங்களமொழி மூலமான குடியுரிமை கல்வி மற்றும் சமூக நிர்வாகம் வினாத்தாளில் இஸ்லாமிய சட்டத்தின் இரண்டு முக்கியத்துவங்களை குறிப்பிடுக? என்ற வினா கேட்கப்பட்டுள்ளது என பிரதி பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

இந்தத் தவறுக்காக பரீட்சைகள் திணைக்களம் முஸ்லிம் சமூகத்திடம் கவலையினைத் தெரிவித்துக் கொள்வதுடன் விசாரணைகளை மேற்கொள்ளும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, குறித்த கேள்விக்கு விடை எழுதிய மாணவர்களுக்கு சரியான புள்ளி வழங்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்தது.

# நடிகைகளை தேடி அலையும் ஐக்கிய தேசியக் கட்சி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

தேர்தலில் போட்டியிடச் செய்ய நடிகர், நடிகையரைத் தேடுவதனைத் தவிர,ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவிற்கு வேறு வழி கிடையாது என ஜே.வி.பி. பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஹொரணை பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஐக்கிய தேசியக் கட்சி இந்தக் காலத்தில் நடிகர்களையும் நடிகைகளையுமே அதிகளவில் தேடித் திரிகின்றனர். உண்மையில் அதிகளவில் நடிகைகளே தேடப்படுகின்றனர்.

தேர்தல் காலத்தில் யாரையேனும் தேடி தேர்தலை வெற்றி பெறச் செய்து அவர்களை அரசாங்கத்திறகு தாரைவார்ப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் வாடிக்கையாக மாறியுள்ளது. ரணில் விக்ரமசிங்கவிற்கு வேறு வேலை எதுவும் கிடையாது என்றார்.

# கடவுச் சீட்டு தகவலுக்கு தொலைபேசி இலக்கம் 1962




கடவுச்சீட்டு உள்ளிட்ட அதனுடன் தொடர்பான சரியான தகவல்களை வழங்குவதற்காக, குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

1962 என்ற தொலைபேசி இலக்கமே புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி, கடவுச்சீட்டு உள்ளிட்ட அதனுடன் தொடர்பான சரியான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் என குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் சூலானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கடவுச் சீட்டு, வீசா, குடியுரிமை தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டமையினால் இந்த தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1962 என்ற இந்தத் தொலைபேசி இலக்கத்திற்கு வார நாட்களில் காலை 8 மணி முதல் மாலை 4.30 மணி வரை அழைப்பை ஏற்படுத்தி, எந்தவொரு தகவலையும் பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க. தலைமைக்குழுவில் பங்காளியாக விரும்பவில்லை



ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவ குழுவில், தாம் ஒரு பங்காளியாக இருக்க விரும்பவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க, கரு ஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோரைக் கொண்ட குழுவினையே எதிர்பார்க்கின்றேன்.

இதன் காரணமாகவே தலைமைத்துவக்குழு என்ற விடயத்தை எற்றுக்கொள்ளவில்லை.

தலைமைத்துவ குழுவின் தலைவர், இந்த குழுவில் இணைந்து கொள்ளுமாறு கோரியபோதும் அதனை நிராகரித்தேன். எப்போதும் அந்த குழுவின் இணைந்து கொள்ள போவதில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கோட்பாடுடையவர்கள் நாட்டுக்குத் தேவை




வலுவான அரசியல்கொள்கைகள் கோட்பாடுகளைக் கொண்டவர்கள் நாட்டுக்குத் தேவைப்படுவதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ருவான்வல்ல பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ப்ரொய்லர் கோழிகள் சுவையிலும் தரத்திலும் குறைந்தவை அதேபோன்றே இப்போதைய அரசியல்வாதிகளும் புரொய்லர் கோழி போன்றே காணப்படுகின்றனர். சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சியின் பின்னர் தற்போது உலகம் காலணித்துவ ஆட்சி முறைமையை பின்பற்றி வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# போலியான "பேஸ்புக்" 2200 முறைப்பாடுகள் பதிவு

## தனிப்பட்ட விடயங்களை பாதுகாக்க அறிவுறுத்து



இந்த வருடத்தில் பேஸ்புக் என்னும் சமூக வலைத்தளம் தொடர்பில் 2 ஆயிரத்து 200 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அவசர தொழிநுட்ப பதிலளிப்பு பிரிவு தெரிவித்துள்ளது. இவற்றுள் அதிகமானவை போலியான பேஸ்புக் சமூக வலைத்தளம் தொடர்பிலானதாகும்.

இந்த நிலையில், பேஸ்புக் சமூக வலைத்தளம் மற்றும் இணைய முக வரி என்பவற்றை பயன்படுத்தும்போது மிகவும் கவனமாக பயன்படுத்தி தமது தனிப்பட்ட விடயங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தடையற்ற மின்விநியோகத்துக்கு பொதுமக்களும் உதவவேண்டும்

## -பருத்தித்துறை மின் அத்தியட்சகர்-



வடமராட்சிப் பிரதேசத்திற்கு இரு வழியூடாக தடையற்ற மின் விநியோகம் வழங்கப்படுகின்ற போதிலும் சிலவேளைகளில் மின்சாரம் தடைப்பட்டால் பொது மக்கள் மின்சார சபையிடம் தொலை பேசியூடாக தொடர்பு கொண்டு வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுகின்றனர். இவ்வாறான செயற்பாடு தவறானது என பருத்தித்துறை மின்சாரசபை அத்தியட்சகர் எஸ் ராஜேந்திரன் கவலை தெரிவித்துள்ளார். அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில், இலங்கை மின்சார சபையால் வடமராட்சி பிரதேசத்துக்கென 33 ஆயிரம் மின்வலு கிளிநொச்சியிலிருந்து புதுக்காட்டு சந்தியூடாக வடமராட்சிக்கும் சுன்னாகத்திலிருந்து வல்லை வெளியூடாக வடமராட்சிப் பிரதேசத்துக்கு இருவழியூடாக தடையற்ற மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. இதில் உயர் மின்வலுக் கம்பிகளில் உயர்ந்து முட்டும் மரங்கள் மின்சார சபையினால் வெட்டியகற்றப்பட்டுள்ளது.

உள்ளகக் கிராமங்களில் இணைக்கப்பட்டுள்ள தாழ்நிலை மின்வலுக்கம்பிகளில் முட்டும் மரங்களை மின் பாவனையாளர்களால் வெட்டி அகற்றப்படாமல் உள்ளன. இதனால் மரங்கள காற்றுக்கு அசையும் போது உராய்வு ஏற்பட்டு மின் தடைப்படுகின்றது. அதுமட்டுமல்ல தற்காலத்தில் பட்டம் விடும் சீசன் இளம் சமூகத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பட்டம் சில சமயங்களில் மின் வலுக்கம்பத்தில் தொங்கி அதனை இழுக்கும் போதும் கம்பி தொய்வுஏற்பட்டு அறுந்து விழுந்து உயிராபத்தையும் ஏற்படுத்தும் நிலை காணப்படுகின்றது. மின்னிணைப்பு பெற்றுக்கொள்ளமுடியாதவர்கள் திருட்டு மின்சாரம் பெறுவதனாலும் ஏனைய பாவனையாளர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டு மின்சாரம் துண்டிக்கப்படலாம்.

எனவே மின்பாவனையாளர்கள் மின் தடைப்படும் காரணிகளை புரிந்து கொள்ள வேண்டுமே தவிர அவ்வாறு தடைப்படும் மின்சாரத்தை உடனடியாக பார்வையிட முடியாத நெருக்கடி நிலைமைகளை கருத்தில் கொள்ளாமல் தொலைபேசியூடான தவறான வார்த்தை பிரயோகங்களை தவிர்க்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். மேலும் வடமராட்சி பிரதேசத்திலுள்ள 100 மர மின்கம்பங்கள் ஒவ்வொரு வாரமும் அகற்றப்பட்டு சிமெந்து கம்பங்கள் கிரைன்மூலம் மாற்றியமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (116)

# யாழ்.மாநகர சபையின் வருடாந்த ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் ஒளிவிழா நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மாநகரசபை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, சிறப்பு விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் பாசையூர் புனித அந்தோனியார் ஆலய மறைக்கல்வி மாணவர்களின் வரவேற்பு நடனம், தொடர்ந்து வாழ்த்துரையை யாழ்.மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் வழங்கவுள்ளார்.

மேலும் ஒளிவிழாவை முன்னிட்டு நடாத்தப்பட்டகட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் இடம்பெறவுள்ளது.

# கழிவுநீர் வாய்க்காலுக்கு மூடி இடுமாறு கோரிக்கை

கைதடிச் சந்தியிலுள்ள கழிவுநீர்வாய்க்காலுக்கு மூடி இடுமாறு மக்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

கைதடி ப.நோ.கூ சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து ஹற்றன் நசனல் வங்கி வரையான வீதியின் கழிவுநீர் வாய்க்காலுக்கும், இலங்கை வங்கிக்கு அருகில் உள்ள வாய்க்காலுக்கும் மூடி போடவேண்டும் என கோரியுள்ளனர். கழிவுநீர் வாய்க்காலுக்குள் கால்நடைகள் விழுந்து ஆபத்தினை எதிர்நோக்குவதாகவும் சிறுவர்கள், முதியவர்கள் ஆபத்தில் சிக்க வாய்ப்புள்ளதாகவும் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து மேற்படி கழிவுநீர்வாய்க்காலுக்கு மூடி இடவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)

# பாழடைந்த கிணற்றை துப்பரவாக்கும் நடவடிக்கை



யாழ்.சூரியவெளி இராணுவ முகாமைச்சேர்ந்த சிப்பாய்கள் புதிதாக நிர்மாணிக்கப்படவிருக்கும் முன்பள்ளிக் கட்டடத்திற்கான காணியிலுள்ள பாழடைந்த கிணற்றை சிரமதானம் மூலம் துப்பரவு செய்தனர். இணையும்கரங்கள் சனசமூக நிலையத்தின் தலைவர் எம்.ஹஸ்ஸனின் வேண்டுகோளுக்கிணங்க இச்சிரமதானம் நடைபெற்றது.

யாழ்.பொம்மை வெளி நான்காம் குறுக்குத்தெருவில் அமையவிருக்கும் புதிய முன்பள்ளி கட்டடத்திற்கான நிதியினை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. இதற்கான ஆரம்பப்பணி ஜனவரியில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக தலைவர் கூறினார்.(105)

# முரசின் இன்றைய பலன்



(24.12.2013 செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் மார்கழி மாதம் 09 ஆம் திகதி.
பூர நட்சத்திரம் பி.ப. 02.53 வரை. பின் உத்தரம்.
ஸப்தமி/சித்தாமிர்தம்
இராகுகாலம் 03.26 - 04.56 வரை. சுபநேரம் 10.56- 12.26 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** எதிர்கொண்ட சவாலில் வெற்றி பெற்று பாராட்டுப்பெறுதல், சொத்தினால் ஏற்பட்ட சிக்கலில் சுமுகத் தீர்வு ஏற்படல்.

**ரிஷபம்** வியாபாரத்தில் தொல்லை கொடுத்த பங்குதாரரைக் கைவிடல், எதிர்ப்புக்களை மனத்துணிவுடன் எதிர்கொண்டதால் வெற்றிவாகை சூடல்.

**மிதுனம்** சேமிப்பில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்டநாள் எதிர்பார்த்த செய்தி இனிய முடிவினைக் கொண்டு வருதல்.

**கடகம்** நீதிமன்றத்தீர்ப்பு சாதகமாக அமைந்ததால் மகிழ்வு, தொழில் சிறப்புற புதிய யுக்தியைக் கையாளத் தொடங்குதல்.

**சிம்மம்** பணி சிறக்க சக ஊழியர்கள் ஒத்துழைப்பை நல்குதல், இடமாற்றம் தற்காலிகமாக ஒத்திவைத்த செய்தி கேட்டுஆனந்தமடைதல்.

**கன்னி** தொழிலமைக்க குடியமர இடம்தேட முயற்சித்தல், ஒழுக்கத்தைப் பேணியதலால் தவறை விலக்குதல்.

**துலாம்** ஏழரைச்சனி பயணமுயற்சியில் இறங்கத் தயக்கம் ,பிறரை நம்பி அலுவல்களை ஒப்படைத்தாலும் உங்கள் கண்ணோட்டம் செறிந் திருக்க வேண்டும்.

**விருச்சிகம்** தடைப்பட்டிருந்த கடன் பிரச்சினை கைக்கெட்டும் வாய்ப்புக்கு பச்சைக்கொடி, விட்டுக்கொடுத்துப்போவதால் பிரச்சினை சுமுகமாகத் தீர்வுகாணல்.

**தனுசு** பாதுகாப்பில் கரிசனை மேலோங்கியதனால் திருட்டு ஏற்படாமை, குடிநீர் அசுத்தமாவதினால் நோய் ஏற்படும்அவலநிலையினால் பாதிப்பு.

**மகரம்** பிரச்சினை சுமுகமாகத்தீர்வடைய தெய்வ நம்பிக்கையில் மனதை இலயித்தல், கௌரவப் பிரச்சினையினால் அழைக்கப்பட்ட நிகழ்வினைப் புறக்கணித்தல்.

**கும்பம்** சகோதரர் உறவில் முறுகல் நிலை தீரப்பெற்று சுமுகமடைதல், பரீட்சைச்சித்தியினால் பதவி கிட்ட நேர்முகத்தேர்வுக்கு அழைத்தல்.

**மீனம்** பெற்ற பணத்தில் குறைவு இருப்பதைக்கண்டு முறுகல் நிலை ஏற்படல், கௌரவக்குறைவினால் மதியாதவர் தொடர்பினைக் கைவிட்டுவிடல்.

# எண் ஜோதிடப்படி 2014 உங்களுக்கு எப்படி?

## பிறந்த திகதிகள் 5-14-23

புதன் கிரகத்தின் ஆகாரகத்தின் கீழ் உதயமாகிய உங்களை 2014ஆம் ஆண்டில் 3ஆம் எண்ணுக்குரிய வியாழ பகவானே நன்மைப்பலாபலன்களை அளிக்க திருவுளங்கொண்டு நிற்பார்.பிறரை வசியப்படுத்தி ஆணையிடுவதன் மூலம் காரிய ஜெயத்தைத் தக்க வைப்பீர்கள். எப்பாடுபட்டாவது கிடைக்கும் சந்தர்ப்பத்தைக் கைக்கொண்டு முன்னேற்றப்பாதையில் கண் வையுங்கள். பெற்றோரைப் பராமரிக்க சிலர் திருமண பந்தத்தைக் கைவிடுவர்.

தாயகத்தில் தொழில் ஆரம்பிக்க வெளிநாட்டைத்துறந்து வருவார்கள். விபத்துக்கள் ஏற்படினும் மயிரிழையில் உயிர் தப்பிவிடுவர்.இயன்றவரை காசோலைகள் வாங்குவதைத் தவிர்க்கவும். கள்ள நாணயம், போலி நகைகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்.

வியாபாரம் செழிக்க அடிக்கடி புதுப்புது யுக்திகளைக் கையாளுங்கள் குடும்பத்தில் புதிய ஜீவன் உருவாகலாம்.நோய் குணமாக தெய்வ ஸ்தலங்களை நாடுவது நன்மையில் முடியும்.பிள்ளைகளின் நடத்தையில் கண்காணிப்புச் செய்வதினால் வரவிருக்கும் ஆபத்தை முளையிலே கிள்ளிவிடலாம்.திட்டமிட்ட காரியங்கள் இனிது நிறைவேறும் ஆண்டிது. வைரக்கல்லை ஆபரணத்தில் தரிப்பது அதிர்ஷ்டமளிக்கும்.

“ஸேர்க்கன்” எனப்படம் வெள்ளைநீலக்கல்லும் உகந்ததாகும். 5அல்லது 9ஆம் எண்ணில் பெயரினை அமைக்கலாம். கூட்டெண் 8 வரின் 5ஆம் எண்ணே சிறந்தது.

முக்கிய செயல்களை 8,18,27,5,14,23 ஆகிய திகதிகளில் ஆற்றி வாருங்கள்.சாம்பல் நிறமே ஆடைகளில் அதிர்ஷ்டம் தரும். பெயரினை அல்லது கையெழுத்தினை அமைக்கும் பொழுது மனதில் தெய்வ சிந்தனையைத் தேக்கி வையுங்கள் .மனதில் தோன்றும் புதிய எண்ணத்தைக் கற்பனையுடன் நிறுத்தாது விற்பனைக்கு கொண்டு வாருங்கள்.

(தொடரும்)

ஜோதிர் வித்யாரத்னா
வி.ஏ.சிவராசா

# வெற்றிக்கு பக்கபலமாகும் இணைப்பாட்டம்




(ஜோகனஸ்பேர்க்)

எதிர்காலத்தில் புஜாராவுடன் இணைந்து சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியின் வெற்றிக்கு பக்கபலமாகத்திகழ்வேன் என இந்தியஅணி வீரர் ஹோலி தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா,அவுஸ்ரேலியா மற்றும் இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டிகளில் ஆடுவதுசவாலான விடயம். போட்டி சமநிலையில் முடிந்ததில் வருத்தமே. இரண்டு இனிங்ஸிலும் சதம் அடித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இருப்பினும் 96 ஓட்டங்கள் எடுத்ததில் திருப்தியே. 3ஆவது இடத்தில் களமிறங்கும் புஜாரா இந்திய அணியின் மற்றுமொரு சுவர். முதல் இனிங்ஸில் தேவையில்லாமல் அவரை ரன் அவுட்டாக்கி விட்டேன். எதிர்காலத்தில் நாங்கள் இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியின் வெற்றிக்குப் பக்க பலமாகத் திகழ்வோம். போதிய பயிற்சி இல்லை எனினும் சூழல் எங்களுக்கு சாதகமாக இருந்தது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, ஹோலி, புஜாராவின் ஆட்டத்தைப் பார்க்கும் போது சச்சின், ராவிட்டை ஞாபகப் படுத்துவதாக கவாஸ்கர் குறிப்பிட்டுள்ளார்.



# பாகிஸ்தான் அபார வெற்றி

(சார்ஜா)

இலங்கை அணிக்கெதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி அபார வெற்றியீட்டியது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட இத் தொடரின் மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் சார்ஜாவில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதற்கமைய முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி 50 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 326 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஹமட் ஷெசாட் 81, மொகமட் ஹபீஸ் ஆட்டமிழக்காது 140, கப்டன் மிஸ்பா உல் ஹக் 40, சுஹைப் மகூத் 21 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெரேரா இரண்டு, மலிங்க, குலசேகர ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 327 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இலங்கை அணி 44.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் டில்சான் 58, மத்தியூஸ் 44, சண்டிமல் 36 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய அனைத்து வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் உமர் குல் மூன்று, அப்ரிடி, யுனைட்கான், மொகமட் ஹபீஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஹபீஸ் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் பாகிஸ்தான் அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது ஒரு நாள் போட்டி நாளை டுபாயில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறந்த அனுபவம் திருப்தி




(ஜோகனஸ்பேர்க்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நல்ல அனுபவம் கிடைத்திருக்கின்றது. அத்துடன் வீரர்களின் செயற்பாடும் திருப்தி அளிக்கின்றது என இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்துள்ளார்.

இந்த மைதானத்தில் ஒருநாள் ஆட்டத்தில் ஆடிய அனுபவம் இருந்ததால் ஆடுகளம் பரிச்சயமாகி விட்டது. பொதுவாக இந்தியாவுக்கு வெளியே ஒரு சுழற்பந்து வீச்சாளருடன் களமிறங்குவோம் என்பதால், வேகப்பந்து வீச்சாளர்கள் மீது எதிர்பார்ப்பு இருந்தது. பந்து வீச்சுத் துறையை சகீர் முன்னின்று வழிநடத்தினார். பந்து வீச்சாளர்களுக்கு அவர்தான் அறிவுரை வழங்கினார். நான் களத்தடுப்பை ஒழுங்குபடுத்தியதோடு சரி. அடுத்த போட்டியிலும் இது தொடரும். துடுப்பாட்டத்தில் ஹோலி, புஜாரா ஆகியோருடன் புதிய பந்தில் முரளி விஜயும் சிறப்பாக ஆடினர். இந்த டெஸ்டில் நல்ல அனுபவம் கிடைத்துள்ளது திருப்தி அளிக்கின்றது.

இதேவேளை, தென்னாபிரிக்க அணி கப்டன் ஸ்மித் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த 4 நாட்களும் இந்திய அணியின் செயற்பாடு சிறப்பாக இருந்தது. இக்கட்டான கட்டத்தில் எங்கள் அணியின் டு பிளிஸர்ஸ், டி வில்லியர்ஸ் சதம் அடித்து அசத்தினர். கடைசி இரண்டு நாட்கள் கடுமையாக போராடினோம். டு பிளஸ்ஸிஸ் தன் மீதிருந்த விமர்சனத்துக்கு சரியான நேரத்தில் பதிலளித்துள்ளார். அவர் ரன் அவுட் ஆனது துரதிஷ்டவசமானது. பிலாண்டர் ஜொலித்ததும் ஆறுதல் என்றார்.



# சச்சினை சிலிர்க்க வைத்த தனுஷ்

இந்தியாவின் கிரிக்கெட் நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர் திரையுலக நட்சத்திரங்கள் பங்குபெறும் செலிபிரிட்டி கிரிக்கெட் லீக்கின் (சி.சி.எல்.) நான்காம் சீசனை கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்தார். மும்பையின் புறநகர்ப்பகுதியில் உள்ள கிராண்ட் ஹயாத் நட்சத்திர விடுதியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு அவர் தனது மனைவியுடன் வந்திருந்தார். இந்த நிகழ்ச்சிக்கு தமிழ், தெலுங்கு, இந்தி, பெங்காலி, மராத்தி, போஜ்புரி, கன்னடம் மற்றும் மலையாளத் திரையுலகில் இருந்து ஏராளமான திரையுலக நட்சத்திரங்களும் வந்திருந்தனர். தமிழ்த் திரையுலகிலிருந்து வந்திருந்த நடிகர் தனுஷ் சச்சினுக்காக ஒரு பாடலை சமர்ப்பித்து அவரை சிலிர்க்க வைத்தார்.

இதற்காக சச்சின் அவருக்கு நன்றி தெரிவித்தார். பிறரைக் கவரக்கூடிய வகையில் பாடல் வரிகளை எழுதும் திறமை கொண்ட நடிகர் தனுஷ் தனது வை திஸ் கொலை வெறி சூப்பர் ஹிட் பாடலுக்குப் பிறகு சச்சின் கீதம் என்ற தலைப்பில் ஒரு மியூசிக் வீடியோவும் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக இளைஞர் சதுரங்கம் கண்டி மாணவன் டுபாய்க்கு

உலக இளைஞர் அணிகளுக்கிடையிலான சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்பதற்காக கண்டி திருத்துவ கல்லூரியில் நான்காம் தரத்தில் பயிலும் மாணவன் கிருபாகர் ஹரிகிசன் டுபாய் பயணமானார்.

பத்து வயதிற்கு கீழ்ப்பட்ட ஆண்களுக்கான போட்டியிலேயே இவர் பங்கேற்கவுள்ளார். இந்தப் போட்டிகள் டுபாய் அல்ஹயின் பல்கலைக்கழகத்தில் கடந்த 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமானதுடன் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை நடைபெறும்.

இலங்கையில் நடைபெற்ற ஒன்பது வயதிற்கு கீழ்ப்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் போட்டியில் சம்பியன் பட்டத்தை சுவீகரித்துக்கொண்டுள்ள இவர் போலந்து (2010), இந்தியா (2011), மற்றும் ரஷ்யா (2011) ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேச தரத்திலானபோட்டிகளிலும் பங்கேற்று வெற்றியீட்டியுள்ளார்.

இவர், வடமராட்சி உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் கண்டியை வசிப்பிடமாகவும் உடுப்பிட்டி அமெரிக்கமிஷனின் பழைய மாணவருமான குணரத்னம் கிருபாகரன் மற்றும் திகனை மாபேரி தென்ன வித்தியாலயத்தின் ஆசிரியையான காஞ்சனா ஆகியோரின் மகனாவார்.

# 2022 உலக கிண்ண கால்பந்து இந்தியா தகுதி பெறும்

## நம்பிக்கை கொள்ளும் சச்சின்




சச்சினின் கவனம், தற்போது கால்பந்து பக்கம் திரும்பியுள்ளது. வரும் 2022இல் நடைபெறும் உலக கோப்பைக் கால்பந்து தொடருக்கு இந்தியா தகுதி பெறும் என நம்பிக்கை தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள உலக கோப்பைத் தொடருக்கான தங்கக் கோப்பை இந்திய மக்களின் பார்வைக்காக கொல்கத்தாவுக்கு நேற்று முன்தினம் கொண்டு செல்லப்பட்டது. இந் நிகழ்ச்சியில் பங்கேற்ற சச்சின் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 2014இல் நடைபெறள்ள உலக கோப்பைத் தொடருக்கு இந்திய அணி தகுதி பெறவில்லை. 2022இல் விளையாடுவதேஇலக்காக இருக்க வேண்டும். இது, ஒரே இரவில் நடந்து விடாது. படிப்படியாக செயற்படுத்த வேண்டும். இதற்கான அடித்தளத்தை இளம் வீரர்களுக்கு உருவாக்கித் தருவது அவசியம். கடின பயிற்சி, சரியான திட்டமிடல் முக்கியம். இதன்படி செயற்பட்டால், சம்பியனாக உருவாக முடியும். என் ஆதரவு என்றும் இளம் கால்பந்து வீரர்களுக்கு உண்டு. கொல்கத்தா வந்துள்ள பிபா உலக கோப்பையை எல்லா மக்களும் வந்து இரசிப்பர் என நம்புகிறேன். இந்திய கால்பந்து அணி கப்டன் சுனில் செத்ரி மீது மரியாதை உள்ளது.என்னை விட கால்பந்து விளையாட்டை வித்தியாசமான கண்ணோட்டத்துடன் பார்ப்பார் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பங்குபற்றிய இந்திய அணி முன்னாள் கப்டன் கங்குலி கருத்துத் தெரிவிக்கையில், இந்தியாவில் 2017இல் நடைபெறவுள்ள உலக கோப்பை (17 வயதுக்குட்பட்டோர்) தொடர் மிகப் பெரிய ஊக்கம் தரும். இதன் மூலம், கால்பந்து மீது குழந்தைகளுக்கு ஆர்வம் அதிகரிக்கும். தவிர, பிரேசிலில் இந்த விளையாட்டு சிறப்பான வளர்ச்சியைக்கண்டுள்ளது. குறிப்பாக, இந்த அணியின் நெய்மரின் ஆட்டம் நன்றாக உள்ளது. உலக கால்பந்தின் இதயம் பிரேசில் என்றால், இந்திய கால்பந்திற்கு கொல்கத்தா நகரம்தான் முதன்மையானது. தற்போது, கிரிக்கெட் இளம் தலைமுறையினரை கவர்ந்துள்ளது. குறிப்பாக, சச்சின் அல்லது ஹோலி போல வர வேண்டும் என எண்ணுகின்றனர் என்றார்.

# ஒரு நாள் தொடரில் சாதிப்போம்

டெஸ்ட் தொடரில் படுமோசமான தோல்வியைத் தழுவியது வருத்தம் அளிக்கின்றது. இருப்பினும் ஒரு நாள் தொடரில் சாதிப்போம் என மேற்கிந்தியத்தீவுகள் அணியின் கப்டன் டரன் சமி தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து, மே.தீவுகள் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.


இது குறித்து கருத்துத் தெரிவித்த சமி, ஒரு நாள் தொடர் சவாலானதுதான். இருப்பினும் நாங்கள் ஒருங்கிணைந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரை வெல்ல முயற்சிப்போம். சிறந்த வேகப் பந்து, துடுப்பாட்ட வீரர்கள் என பலர் அணியில் இருப்பது வெற்றிக்கு வழி வகுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வதிரி டையமன்ஸ் நூற்றாண்டு கால்பந்து கிண்ணம் வென்றது நாவாந்துறை சென். மேரிஸ்

விளையாட்டு செய்திகள்



படப்பிடிப்பு: யு.நாதன்





வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு விழா வெற்றி கிண்ணத்தை நாவாந்துறை சென். மேரிஸ் அணி கைப்பற்றிக் கொண்டது. வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வடமாகாண கால்பந்து அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் மாலை 4.00 மணிக்கு வதிரி டையமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. அணிக்கு ஏழு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மன்னார் பள்ளிமுனை சென். லூசியா அணியும் மோதின.

வடமாகாணத்தில் இரு அணிகளுமே பலமான அணி என்பதால் இப்போட்டி இரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. கரகோஷ மழையின் மத்தியில் இரு அணிகளும் களமிறங்கின. ஆட்டத்தின் இரண்டாவது நிமிடத்தில் நாவாந்துறை சென் மேரிஸ் வீரர் யூட் அதிரடியான முறையில் முதல் கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தியதுடன் சென். லூசியா அணிக்கு அதிர்ச்சி அளித்தார். பதில் கோல் அடிக்கும் முனைப்புடன் செயற்பட்ட சென். லூசியா அணிக்கு 8ஆவது நிமிடத்தில் கிடைத்த சுயாதீன உதையை சிறப்பாகப் பயன்படுத்தி கோல் ஆக்கியதுடன் நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிப்படுத்தியது. இந்நிலையில் ஆட்டத்தின் வேகம் சூடுபிடிக்கத் தொடங்கியது. இரு அணிகளும் மாறி மாறி பந்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணியின் நட்சத்திர வீரர் யூட் மீண்டுமொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து 23ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் வீரர் நிதர்சன் மேலுமொரு கோலைப் போட்டு அணியின் ஸ்திரத் தன்மையை வலுவாக்கினார். இதற்குப் பதிலடி கொடுக்கும் முனைப்புடன் செயற்பட்ட சென். லூசியா அணி 28ஆவது நிமிடத்தில் எடிசன் ஒரு கோலைப் போட்டு போட்டிக் களத்தைப் பரபரப்புக்கு உள்ளாக்கினார். இந்நிலையில் சென். மேரிஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றவேளை முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் தமது உத்தியில் மாற்றங்களை மேற்கொண்டதுடன் வெற்றிக்காகக் கடுமையாக முட்டி மோதிக் கொண்டன மேலும் சில கோல்களைப் போட்டுக் கொள்ளும் வாய்ப்பு இரு அணிகளுக்கும் ஏற்பட்டது.இருப்பினும் இந்த வாய்ப்புக்களை இரு அணிகளும் கோட்டைவிட்டன. இந்நிலையில் ஆட்டத்தின் 55ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணி வீரர் நிதர்சன் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தினை உரிய முறையில் பயன்படுத்தி அதனைக் கோலாக்கியதுடன் அணியின் வெற்றியையும் உறுதி செய்தார். இறுதியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று நூற்றாண்டு விழா கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக நாவாந்துறை சென். மேரிஸ் அணி வீரர் யூட், தொடர் ஆட்டநாயகனாக பள்ளிமுனை சென். லூசியா அணி வீரர் எடிசன், சிறந்த கோல் காப்பாளராக சென். மேரிஸ் அணி வீரர் சார்ள்ஸ், அதிக கோல் அடித்த வீரராக இளவாலை யங்ஹென்றிஸ் அணி வீரர் ஞானம் ஆகியோருக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அத்துடன் சிறந்த நன்மதிப்புமிக்க அணியாக பொலிகண்டி விண்மீன் தெரிவு செய்யப்பட்டது. இப்போட்டியில் வெற்றி பெற்ற சென். மேரிஸ் அணிக்கு ஐம்பதாயிரம் ரூபா பணப்பரிசும், வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டதோடு, இரண்டாம் இடத்தைப் பெற்ற பள்ளிமுனை சென். லூசியா அணிக்கு 20000 ரூபா பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. முன்னதாக விருந்தினர்கள், வீரர்கள் மேள வாத்திய இசையுடன் வரவேற்கப்பட்டனர். இதன்போது டையமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டை சிறப்பிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்ட கேக்கை பிரதம விருந்தினர் சத்தியசீலன் வெட்டி மகிழ்ந்தார். இறுதிப் போட்டியின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு அமைச்சின் செயலாளர் செ.சத்தியசீலன் கலந்து கொண்டு விருதுகளை வழங்கிக் கௌரவித்தார். இப்போட்டி நிகழ்வில் பெருந்திரளான கால்பந்தாட்ட இரசிகர்கள் போட்டியைக் கண்டுகளித்தமை குறிப்பிடத்தக்கது. (48,12,109)

## ஆலடி சிந்து அபார வெற்றி

(சண்டிலிப்பாய்)

இளைஞர் வெற்றிக் கிண்ண தாச்சிப் போட்டியில் ஆலடி சிந்து அபார வெற்றிபெற்றது.

வலி தெற்கு பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் .யாழ் மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தும் இளைஞர் வெற்றிக்கிண்ண தாச்சிச் சுற்றுப் போட்டியின் அரையிறுதிச் சுற்றுப் போட்டிக்கான தெரிவு ஆட்டங்கள் உடுவில் உதய சூரியன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் உடுவில் ஆலடி சிந்து அணியும் மயிலிட்டி கண்ணகி அணியும் மோதின.

ஆரம்பம் முதலே போட்டியை தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்த உடுவில் ஆலடிச் சிந்து அணி முதல் அரைப்பாதியின் போது 5:3 என்னும் புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையிலிருந்தது.

இரண்டாவது அரைப்பகுதியில் மேலும் 11 புள்ளிகளை ஆலடி சிந்து அணி பெற பதிலுக்கு 1 புள்ளியையே மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணி பெற்றது.

நிறைவில் 16:4 என்னும் புள்ளிகளின் அடிப் படையில் உடுவில் ஆலடிச் சிந்து வெற்றி பெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் இடம்பெறவுள்ள போட்டியில் உடுவில் ஆலடிச் சிந்து அணியும் தையிட்டி வள்ளுவர் மற்றும் தாவடி காளியம்பாள் அணியுடன் இடம்பெறவுள்ள போட்டியில் தோல்வியுறும் அணியும் மோதவுள்ளன.

அதே போல் இப் போட்டியில் வெற்றி பெறும் அணியும் மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. (48,93)

## தைத்திருநாளை முன்னிட்டு இளவாலையில் மாபெரும் கபடி

(இளவாலை)

இளவாலை வருத்தப்படாத இளைஞர் கழகம் தைத் திருநாளை முன்னிட்டு வடமாகாண ரீதியில் மாபெரும் கபடிப் போட்டியை நடாத்தவுள்ளது. இப்போட்டியில் கிண்ணம் வெல்லும் அணிக்கு 10ஆயிரம் ரூபாவும், இரண்டாமிடத்தைப் பிடிக்கும் அணிக்கு 5ஆயிரம் ரூபா பணப் பரிசும் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.


இப்போட்டியில் பங்குகொள்ளவிரும்பும் அணிகள் எதிர்வரும் ஜனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பதிவுகளை மேற்கொள்வோர் 0750416493 அல்லது 0779058543 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (93)

## மென்பந்து கிரிக்கெட்

தெல்லிப்பளை கிழக்கு கலைச்செல்வி இளைஞர்கழகம் ஏற்பாடு செய்து நடாத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றுஇடம்பெறவுள்ளது. அணிக்கு ஆறு பேர் கொண்ட இச்சுற்றுப் போட்டி ஐந்து ஓவர்களைக் கொண்டதாக நடைபெறவுள்ளது.இப்போட்டிகள் இம்மாதம் 28,29,30ஆகிய திகதிகளில் தெல்லிப்பளை கட்டுவன்புலம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இச் சுற்றுப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்பாக 0774646173. 0756362353 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும். வெற்றி பெறும் அணிக்கு பெறுமதியான பரிசில்களும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (48)

## பூநகரி நண்பர்கள் வி.க.வின் வருடாந்த ஒன்றுகூடல்



(முழங்காவில்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல சாதனைகளைப் படைத்த பூநகரி மத்திய நண்பர்கள் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த ஒன்றுகூடல் கடந்த 21ஆம் திகதி பூநகரி பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் ஒன்றுகூடலின்போது கழகத்தின் எதிர்காலச் செயற்பாடுகள், இதுவரை கழகம் செயற்பட்டு வந்த முறை போன்றன குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதேச செயலக நிர்வாக அலுவலர் எஸ். சிவலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக பூநகரி சுகாதார சேவைப் பணிப்பாளர் எஸ். செல்வநாதன், பூநகரி வைத்திய அதிகாரி பு. கோகிலன், பூநகரி பிரதேச சபைத் தலைவர் பொ. ஸ்ரீஸ்கந்தராசா, பூநகரி பிரதேச விளையாட்டு உத்தியோகஸ்தர் எஸ். பிரபாகரன், கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக் தலைவர் ராஜ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (112)

# "நீங்கள் வியாபாரியள் தானே?"

## யாழ்ப்பாணத்துப் பேப்பர் கார எம்பிக்கு நடந்த கதி!?

**- இணையத்தளத்திலிருந்து.**



வணக்கம். எப்பிடி இருக்கிறீங்கள்? நிறையப் புதினங்கள் இருந்தாலும் அடிக்கடி கதைக்கத்தான் மனிசருக்கு நேரமில்லை.. இருந்தாலும் கொஞ்ச நாளா நடக்கிற விக்கினங்களப் பற்றிக் கதைக்காமல் இருக்க முடியேல்ல பாருங்கோ..

இப்ப கொஞ்ச நாளா இரணைமடுப் பிரச்சினை தான் அரசியல் அரங்கில பெரிய பிரச்சினை மாதிரி ஓடுது பாருங்கோ... உண்மையில் நான் பிடிச்ச முயலுக்கு மூண்டு கால் எண்டு நில்லாமல் உண்மையான பிரச்சினை என்னண்டு பாத்தால் எல்லாத்துக்கும் நல்ல முடிவு காணலாம்.. ஆனால்.. கோதாரி விழுந்த மாகாண சபை எண்டைக்கு வந்துதோ அண்டைக்கு பிடிச்சுது ஏழரை.. இப்ப பாருங்கோ.. கூட்டமைப்பில எம்.பி.மாருக்கு அதிகாரம் கூடவோ, மாகாண சபையில இருக்கிறவைக்கு அதிகாரம் கூடவோ எண்டதுதான் பிரச்சினையாம் அவைக்கிடையில...

இரணைமடு விசயத்தை வைச்சுக்கொண்டு மாகாண சபைக்காரரை தங்கட சொல்லுக் கேக்கிற நிலைக்கு கொண்டு வரவேணுமெண்டு எம்.பிமார் நினைக்கினம் எண்டு ஒரு கதை அடிபடுது.. ஆனால் பாருங்கோ "மயிர விட்டான் சிங்கன்" கதையில வாறது போல...

ஊ.ஆ ஐயா.. ஓமோம் அவர் தான் தன்னை சிறையில வைச்சிருக்கினம் எண்டு கவலைப்பட்ட விக்கினேசுவரன் ஐயா இருக்கிறார்எல்லே.. அவர் சொன்ன சொல்லக் காப்பாத்தவேணும் எண்டு பிடிவாதமாய் மாகாண சபையிலயும் கொஞ்சப் பேர் வில்லங்கப்படுறதாய் சொல்லுகினம்..

என்ன இருந்தாலும் எங்கட அரசாங்கம் நினைக்கிறதை செய்துமுடிக்கவேணும் எண்டு எங்கட தலைவர்மார் அக்கறையா இருக்கிறதால எல்லாம் கந்தறுந்து தற்கொலை தான் செய்யவேண்டி வரப்போகுது எண்டு வயல் விதைச்சு கயிற்றப்பட்டு உழைக்கிறவை அங்கலாய்க்கினமாம்..

இதுக்கிடையில இன்னொரு புதினம் கேள்விப்பட்டியளோ தெரியேல்ல.. உண்மையள் ஒரு நாளும் உறங்காது எண்டது போல.. சில சம்பவங்களும் நடக்கத்தான் செய்யுது.. எங்கட யாழ்ப்பாணத்துப் பேப்பர் கார எம்.பிக்கு நடந்த அவலத்தப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியளோ தெரியயேல்ல.

இப்ப சில நாளைக்கு முன்னம் கொழும்பில ஒரு கூட்டம் நடந்ததாம்.. எங்கட எம்.பிமாரின்ர கூட்டம் தான்.. அந்தக் கூட்டத்தில எங்கட பேப்பர் கார எம்.பியைப் பாத்து, நீங்கள் வியாபாரியள் எண்டத காட்டிப்போட்டியள் எண்டு தலைவர் சொல்லிப்போட்டாராம்.. ஓம் பாருங்கோ தேசியத் தலைவர் எண்டுதானே பேப்பர் கார எம்.பி கூட்டமைப்பின்ரை தலைவர் ஐயாவை சொல்லுறவர்.. ஆனால் பாருங்கோ அந்தப் பெரிய மனிசன் பேப்பர் காரத் தம்பிய இல்ல இல்ல எம்.பிய கண்டபடி திட்டிப்போட்டாராம்.

வவுனியாவில கூட்டமைப்பின்ர கூட்டம் எண்ட செய்திய முதல்ல போட்டது... பேப்பர் கார எம்.பியின்ர பேப்பராம்.. இதப் பாத்த தேசியத் தலைவர்(!) சீறிப்போட்டாராம்... ஆரக்கேட்டு அந்தச் செய்தியப் போட்டனீர்.. நீர் எங்கட கட்சியின்ர ஒரு எம்.பி. எப்பிடி பொறுப்பில்லாமல் நடக்க ஏலும்? நீர் ஒரு வியாபாரி எண்டதக் காட்டிப்போட்டீர், எண்டு கண்டபடி திட்டிப்போட்டாராம்.. ஐயா பேசேக்க தாய்க்கட்சியின்ர செயலாளர் ஐயா பேசாமல் இருப்பரே. அந்த மனிசனும் பேப்பர் கார எம்.பிய வாங்கு வாங்கினாராம்.. இதுக்கிடையில எம்.ஜி.ஆர் பாணியில.. தடக்குப்பட்ட பேப்பர் கார எம்.பி. உடனடியா தன்ர பேப்பரில வேலை செய்யிறவைக்கு போன் எடுத்து... ஆர் தந்த செய்தி எண்டு கேட்டு ஒரு எம்.பி யையும் காட்டிக்குடுத்திருக்கிறார்.. கிழக்கில இருந்து வந்த அந்த எம்பி" ஓம் பாருங்கோ அவர் தான்" முந்தி அவரும் கிழக்கில பேப்பரில வேலை செய்த மனிசன் தான்.. அவர் பதறியடிச்சு சத்தியமாய் நான் சொல்லேல்ல.. எண்டு அடம்பிடிச்சவராம்..

இதுக்கிடையில பேப்பர் கார எம்.பி சொன்னாராம்.. பேப்பரில அந்தச் செய்தியப் போட்டவரை ஆறு மாதத்துக்க நிப்பாட்டப்போறன் எண்டு.. நீர் நிப்பாட்டினால் என்ன விட்டால் என்ன அது உம்மட பிரச்சினை எண்டு தலைவர் திட்டின உடன கடுப்பாயிட்டாராம் பேப்பர் கார எம்பி.. அவர் தாய்க்கட்சியின்ர செயலாளரைப் பாத்து.. உங்கட செய்தி ஒண்டும் இனி மேல் எங்கட பேப்பரில வராது எண்டு சொல்லிப்போட்டு.. பேச்சாளரப் பாத்துச் சொன்னாராம்.. இனி ஐ..சே.. நீர் தாற செய்தி மட்டும் தான் போடுவன் எண்டாராம்..

இதுக்கிடையில.. முந்தி மாகாண சபைத் தேர்தலுக்கு முந்தி அந்தப் பேச்சாளரையும் அவரின்ர கட்சியில இருக்கிற மற்ற எம்பியையும் பாத்தும் இப்பிடித்தான் திட்டினவராம்.. உங்களப் பற்றி கட்டுக்கட்டாய் வைச்சிருக்கிறன்.. உங்களப் பற்றி எழுதப்போறன் இருந்து பாருங்கோ எண்டு...

பேப்பர் கார எம்பி.. கூட்டமைப்பில யாரோடயும் கொழுவுப்பட்டிட்டு உடனடியா தன்ர பேப்பரில வேலை செய்யிற ஆக்களுக்கு போன் பண்ணி அவையின்ர செய்தி வரப்படாது எண்டு கட்டாயமாச் சொல்லுறவராம்.. இப்பிடித்தான் இரணமடு விசயத்தப் பற்றி மேடையில கதைச்ச இணையத் தளக்கார எம்பிக்கும் நடந்திருக் குதாம் பாருங்கோ.. அந்த மனிசன்ர செய்தியும் போடப்படாது எண்டு சொல்லி வைச்சிருக்கிறாராம் எண்டால் பாருங்கோவன்..

என்னண்டால் பாருங்கோ.. "ஓடமும் ஒரு நாள் வண்டியில ஏறும்" வண்டியும் ஒரு நாள் ஓடத்தில ஏறும்... எண்டு தெரியாமலே சொன்னவை.. ஐயாக்கள் எந்த நேரம் கழுத்தறுப்பினம் எண்டது ஐயாக்களுக்கே தெரியாது பாருங்கோ..

என்ன இருந்தாலும் அந்த எம்.பியப் பாத்து வியாபாரி எண்டு அய்யா சொன்னதத் தான் பாருங்கோ தாங்க ஏலாமல் கிடக்கு.. உண்மையச் சொல்லத்தான் வேணும்.. அதுக்கு முகத்துக்கு நேரயோ...? ஆ.

---

UNESCO **அறிவித்த உலக நாடுகளின் சிறப்புக் கல்வித்தரம்!**

United Nations Educational, Scientific and Cultural Organization

1. பிழையின்றிப் படித்தல் - நியூசிலாந்து
2. குழந்தைப் பருவத்தில் கல்வி ஈடுபாடு - இத்தாலி
3. கணிதக் கல்வி - நெதர்லாந்து
4. விஞ்ஞானக் கல்வி - ஜப்பான்
5. பன்மொழிகளிலும் கல்வியறிவு - நெதர்லாந்து
6. கலை சம்பந்தப்பட்ட கல்விகள் - அமெரிக்கா
7. உயர்நிலைப் பள்ளிகளில் கல்வித்தரம் - ஜேர்மனி
8. ஆசிரியர் பயிற்சி - ஜேர்மனி
9. மேல்நிலைக் கல்வி - அமெரிக்கா
10. முதியோர் கல்வி - ஸ்வீடன்

---

# தமிழ்க்கல்வி:- இன்றைய சவால்கள்


பத்ரி சேஷாத்ரி

எங்கள் கிழக்கு பதிப்பகத்தில் எடிட்டோரியல் துறையில் வேலை செய்த/செய்யும் யாருமே தமிழ் இளங்கலை, முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் கிடையாது. எனக்குத் தெரிந்து, இதழியலில் வேலை செய்யும் பெரும்பான்மை ஆட்கள் வேறு துறைகளில் பட்டம் பெற்றவர்க்ள். பல புத்தகங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளோம். எங்கள் பதிப்பகத்துக்காக இவற்றைச் செய்துள்ள அனைவருமே தமிழல்லாது வேறு துறைகளில் பட்டம் பெற்றவர்கள். ஆக, தமிழில் பட்டம் பெற்றோர், மீண்டும் மீண்டும் பள்ளிக்கூடங்களில் தமிழாசிரியர்களாக அல்லது கல்லூரிகளில் பேராசிரியர்களாக மட்டும்தான் ஆகின்றார்கள்போல.

ஆனால் நான் மேலே சொன்ன துறைகள் அனைத்தும் - இதழியல், மொழிபெயர்ப்பு, புத்தகமாக்குதல் போன்றவை - தமிழ் சார்ந்தவை. நல்ல தமிழ் தெரிந்தவர்களால் இந்தத் துறைகளுக்கு மேலும் மெருகூட்ட முடியும். திரைப்படம், தொலைக்காட்சி நெடுந்தொடர்கள் ஆகியவற்றுக்கும் தமிழ் அறிந்தவர்கள் தேவை. திரைக்கதை, வசனம் ஆகியவற்றை எழுத படைப்புத் திறன் முக்கியம் என்றாலும் அவ்வாறு உருவாக்கப்பட்ட படைப்புகளைச் செப்பனிட தமிழறிந்த ஆட்கள் தேவை.

அதேபோலத்தான் கணினி மொழியியல், இயற்கை மொழி ஆய்வு ஆகிய துறைகள். தமிழ்த் துறை மாணவர்கள் இதழியல், எடிட்டிங், மொழிபெயர்ப்பு, கணினி மொழியியல் ஆகியவற்றைக் கற்றுக்கொண்டால் தமிழ்ச் சமூகத்துக்குச் சிறந்த பணியாற்ற முடியும். நல்ல, வேலைகளையும் பெற்று, நன்கு சம்பாதிக்கவும் முடியும். இப்படிப்பட்ட திறனுடன் மாணவர்களை உருவாக்க, பாடத்திட்டத்தில் மாறுதல்கள் தேவை.

சங்கத்தமிழ், இலக்கியக் கோட்பாடுகள் ஆகியவற்றை விடுத்து, உரைநடைத் தமிழ், கதைகள், நாடகம், திரைப்படம், விளம்பரத்துறை, ஊடகத்துறை, மொழிபெயர்ப்பு, கணினி மொழியியல் ஆகியவற்றைக் கொண்டுவந்து சுவாரஸ்யமாகப் பாடங்கள் இருக்குமாறு செய்யலாமே என்பது என் கருத்து.

தமிழர்களின் தொன்மையே ஒருவிதத்தில் அவர்கள் கழுத்தைச் சுற்றியுள்ள கருங்கல்லாக ஆகிவிட்டதோ என்பது என் எண்ணம். அந்த நீண்டகால வரலாற்றின் அனைத்துக் கூறுகளையும் எப்படியாவது மாணவர்களுக்குச் சொல்லித் தந்துவிடவேண்டும் என்ற பதற்றம் பேராசிரியர்களுக்கு இருக்கிறது. "சங்கத் தமிழில்"தான் ஆரம்பிக்கவேண்டும் என்று அவர்கள் அடம் பிடிப்பதும் இதனால்தான்.

இன்றைய தேவை என்று நான் பார்ப்பது தமிழைப் பிழையின்றி எழுதுதல், தமிழில் உலக விஷயங்கள் அனைத்தையும் கொண்டுவருதல், நாம் எதைச் சொல்ல விரும்பினாலும் அதைத் தமிழில் சொல்லக்கூடிய நிலையை அடைதல், உலக அறிவு அனைத்தும் தமிழில் எழுத்துகளாக, புத்தகங்களாகக் கொண்டுவரப்படுதல், தமிழர்கள் தங்களுக்குள் பேச, எழுத தமிழைத் தடையின்றிப் பயன்படுத்துதல், பொது ஊடகங்களில் புழங்கும் தமிழ் பிழையின்றி இருத்தல் ஆகிய இவையே.

இதற்குமேலாக, தமிழை விரும்பிப் பாடமாக எடுத்துப் படிக்கும் மாணவர்கள் தமிழின் தொன்மையை, தமிழின் இலக்கியச் சுவையை, தமிழ் இலக்கணத்தின் மேன்மையை, தமிழர்தம் பண்பாட்டை உணர்ந்துகொண்டால் போதும். மேலும், பண்பாடு என்பதை வரலாற்றுப் பாடமாகத்தான் சொல்லித்தரவேண்டும் தமிழ்ப் பாடமாக அல்ல என்பதும் என் கருத்து.

**- பத்ரி சேஷாத்ரி -**

# அன்பே வா!

- ஆரூர்தாஸ் — 4

**ரா**மாவரம் எம்.ஜி.ஆர். இல்லம். என்னை எதிர்பார்த்து வாசலில் எம்.ஜி.ஆர். பொங்கல் வாழ்த்து தெரிவித்தேன். உள்ளே அழைத்துச் சென்றார். சுவையும் சூடுமான சர்க்கரைப்பொங்கல், வெண்பொங்கல், அவியல், ஓலம், மெதுவடை வகையறாக்களை ஜானகி அம்மா பரிமாறினார்கள். கொண்ட மட்டும் உண்டு மகிழ்ந்தேன்.

வழக்கம்போல பொங்கல் அன்பளிப்பாக நூற்றி ஒரு ரூபாய் வழங்கினார். வாங்கி கண்களில் ஒற்றிக்கொண்டேன். ஹோலில் வந்து அமர்ந்தோம்.

(சிவாஜி தீபாவளி, பொங்கல் இரண்டையுமே கொண்டாடுவார். ஆனால் எம்.ஜி.ஆர். பெரியார் - அண்ணா கொள்கையைப் பின்பற்றி பொங்கல் விழாவை மட்டும்தான் கொண்டாடுவார்.)

எம்.ஜி.ஆர். சொன்னார்:- ஒரு சந்தோஷமான சேதி என்றேனே. அதைச் சொல்றேன். இப்போ நாம ராதாண்ணனுக்கு (எம்.ஆர்.ராதா) ஒரு படம் பண்றோம். அவருடைய நண்பர் வாசுன்னு ஒருத்தர் இருக்கார். அவர்தான் தயாரிப்பாளர். அவர் கலைவாணர் மற்றும் டி.எஸ்.பாலையாண்ணன், கே.ஏ.தங்கவேலு மாதிரி பழைய நாடக நடிகர்களுக்கெல்லாம் நண்பர். அவருக்கு உதவி செய்றதுக்காகத்தான் ராதாண்ணன் இந்த ஏற்பாட்டை பண்ணியிருக்கார். ஆரம்ப நிதியே அவரோட சொந்தப்பணம் தான்.

டைரக்ஷன் கிருஷ்ணன் பஞ்சு. அவங்களும் இந்தப் படத்துல பங்காளிகள். கிருஷ்ணன் பஞ்சு டைரக்ஷனில் ஏற்கனவே "ரத்னகுமார்", "பைத்தியக்காரன்" படங்கள்ளே நான் சின்னச் சின்ன வேடங்களில் நடிச்சிருக்கேன். ஹீரோவா நடிக்கிறது இதுதான் முதல் தடவை. அதனால் ஒரு மாறுபட்ட கதையா இருக்கணும் என்று விரும்புகிறேன். உங்ககிட்ட இப்போ உடனே ஏதாவது நல்ல கதை இருக்கா?




நான்:- (சற்று யோசித்து) இருக்கு. "அவுட்லைன்" வச்சிருக்கேன். அதுக்கு திரைக்கதையும் வசனமும் எழுதணும்.

எம்.ஜி.ஆர்:- அதையெல்லாம் நீங்க சீக்கிரம் எழுதிடுவீங்க. எனக்குத் தெரியும். இப்போ அந்தக் கதையை சுருக்கமாக எனக்குச் சொல்லமுடியுமா?

நான்:- நான் நினைத்து வைத்திருந்த அந்தக் கதையைச் சொன்னேன்.

அதைக்கேட்ட எம்.ஜி.ஆர். சொன்னார்:- கதை நல்லாயிருக்கு. நான் விரும்பின மாதிரி எனக்கு இது ஒரு மாறுபட்ட வேஷமா இருக்கும். சரி. இதுக்கு ஏதாவது டைட்டில் வச்சிருக்கீங்களா?

நான்:- நல்ல டைட்டில் இருக்கு. அதை நானே ரிஜிஸ்டர் பண்ணி வச்சிருக்கேன்.

எம்.ஜி.ஆர்:- அப்படியா? சொல்லுங்க என்ன அது?

நான்:" "பெற்றால்தான் பிள்ளையா?"

இதைக்கேட்ட மாத்திரத்திலேயே எம்.ஜி.ஆரின் முகம் மகிழ்ச்சியினால் மலர்ந்தது. அப்படியே என்னை இறுகக் கட்டிப்பிடித்துக்கொண்டு ஒரு தூக்குத் தூக்கினார். "ஜானு" என்று கூப்பிட்டார். அம்மா வந்தார்கள். ஆள் காட்டி விரலைக்காட்டினார். அவர் அறைக்குள் சென்றார். எம்.ஜி.ஆர். தொடர்ந்தார்.

எம்.ஜி.ஆர்:- இந்த டைட்டில் கதைக்கு மட்டுமல்லே எனக்கும் ரொம்ப பொருத்தமா இருக்கு. இதைவிட ஒரு நல்ல டைட்டில் கிடைக்கவே கிடைக்காது. எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு.

ஜானகி அம்மா வந்து ஒரு கவரை எம்.ஜி.ஆரிடம் நீட்டினார்.

"அதை நீயே உன் கையால் ஆசிரியர்கிட்டே கொடு". அம்மா கொடுத்ததை வாங்கிக்கொண்டேன்.

1964இல் சிவாஜியின் கமலாம்மா கையால் "புதிய பறவை"இற்கு முன் பணம். 1966இல் ஜானகி அம்மா கையால் "பெற்றால்தான் பிள்ளையா"வுக்கு முன்பணம். நான் கொடுத்து வைத்தவன்.

எம்.ஜி.ஆர். கூறினார்:- ஆயிரம் ரூபா இருக்கு. இது டைட்டிலுக்காக நான் உங்களுக்குக் கொடுக்கிற அன்பளிப்பு. இப்போ நீங்க நேரா ராதாண்ணன் வீட்டுக்குப்போய் அவரைப் பாருங்க. உங்களை எதிர்பார்த்து அவரும், கிருஷ்ணன் பஞ்சுவும், வாசுவும் காத்துக்கிட்டிருக்காங்க. புறப்படுங்க. வாழ்க.

அங்கிருந்து புறப்பட்டேன். வயிறு நிறைய சர்க்கரைப்பொங்கல். மனம் நிறைய மகிழ்ச்சி. சட்டைப்பை நிறைய பணம். கார் ஸ்டியரிங்கைப் பிடித்தேன். பரங்கிமலைச் சாலையில் ஓட்டினேன். பாட்டு வந்தது. பாடினேன்:-

"நான் பார்த்ததிலே அவர் ஒருவரைத்தான் நல்ல வள்ளல் என்பேன், நல்ல வள்ளல் என்பேன்"

இது வாலியின் அந்த பாட்டு அல்ல. என் சொந்தப்பாட்டு.



## வித்தியாச வின்ஸ்லெட்!

"**டை**ட்டானிக்" படத்தை பார்த்த ரசிகர்கள் யாரும், அதன் நாயகி கேத் வின்ஸ்லெட்டை, மறந்திருக்க முடியாது. பிரமாண்ட வெற்றிபெற்ற அந்தப் படத்தில் நடித்து, ரசிகர்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய, கேத் வின்ஸ்லெட்டின் புதிய அவதாரம் தான் இந்தச் செய்தி. ஏற்கனவே இரண்டு பேரை திருமணம் செய்து, இரண்டு குழந்தைகளுக்கு தாயாகி விட்ட கேத், தற்போது ரெட் ரொக்னோர்ல் என்ற நடிகரை, மூன்றாவதாக திருமணம் செய்து கொண்டுள்ளார்.

இதையடுத்து, விரைவில் மூன்றாவது குழந்தைக்கு தாயாகப் போகிறார். கர்ப்பமடைந்ததில் இருந்து அதிகம் வெளியில் வராமல் இருந்த கேத், சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக வந்திருந்தார். பிறகென்ன... புகைப்படக்காரர்கள், வளைத்து வளைத்து கேத் வின்ஸ்லெட்டின் வித்தியாசமான தோற்றத்தை படமாக எடுத்து தள்ளி விட்டனர்.

## முதலிடத்தில் கத்ரினா கைஃப்!



**ல**ண்டனில் இருந்து வெளியாகும் பிரபல வாரப் பத்திரிகை ஒன்று, உலக அளவில் உள்ள தற்போதைய நடிகைகளில், யார் அதிக கவர்ச்சியானவர் என்றொரு, வாக்கெடுப்பு நடத்தியது. அதில், முதல் மூன்று இடங்களை, இந்திய நடிகைகளே கைப்பற்றியுள்ளனர். முதல் இடத்தை, கத்ரினா கை..ப், இரண்டாவது இடத்தை, பிரியங்கா சோப்ரா, மூன்றாவது இடத்தை, தீபிகா படுகோனேவும் பிடித்துள்ளனர். இந்த செய்தி வெளியானதில் இருந்து, மேற்படி நடிகைகளுக்கு பொலிவுட்டில் இன்னும் மவுசு கூடியுள்ளது. அதிலும், கத்ரினாவுக்கு, ஹொலிவுட் சினிமா வாய்ப்புகளும் கிடைக்க இருக்கிறது. ஆனால், இதில் ஒரு ஆறுதல் இடம் கூட, தென்னிந்திய நடிகைகளுக்கு கிடைக்கவில்லை என்பது தான் சோகம்.

## நத்தார் கேக்: சில யோசனைகள்




◗ பொதுவாக கேக் செய்வதற்கு மிகவும் முக்கியமானது கோதுமை மா ஆகும். மற்ற எந்த மாவையும் பயன்படுத்தக் கூடாது.

◗ உலர்ந்த பழவகைகளை கேக்குகளுக்கோ, பிஸ்கட்களுக்கோ பயன்படுத்தும்போது அவற்றின் கொட்டை காம்புகளை நீக்கி விட வேண்டும். பருப்பு வகைகளை சேர்க்கும்போது அவற்றைச் சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ள வேண்டும்.

◗ இவற்றைக் கேக்கில் சேர்ப்பதற்கு முன்பு இவற்றின் மீது சிறிது மாவை தூவி வைக்க வேண்டும். விலை உயர்ந்த கேக்குகள் தயாரிக்கும்போது இப்படிச் செய்தால் பழவகைகள் கேக்குகளின் அடியில் தங்கியிராமல் கேக் முழுவதும் பரவி இருக்கும்.

◗ கேக் செய்வதற்கு அரைத்த சீனியைப் பயன்படுத்துவது நல்லது. அரைத்த மாப்போன்ற சீனியாக இருந்தால்தான் வெண்ணெயும் சீனியும் சுலபமாகக் குழையும்.

◗ கேக்குகளுக்கு வெல்லத்தைச் சேர்த்தால் நல்ல பழுப்பு நிறத்தை அளிக்கும். கேக் பார்ப்பதற்கும் அழகாகக் காட்சியளிக்கும்.

கேக் சரியாக வர...

◗ வெண்ணெயும் சீனியும் இலேசாகும் வரை குழைக்க வேண்டும். குழைப்பதற்கு அலுப்புப்பட்டால் கேக் சரியாக வராது.

◗ முட்டையை நன்கு அடித்து வெண்ணெய் கலவையில் ஊற்றிய பின்னும் மிகவும் நன்றாக அடிக்க வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டாலும் கேக் சரியாக வராது.


◗ குறைந்த அளவில் பேக்கிங் பவுடரைப் பயன்படுத்தினால் கேக் சரியாக அமையாது. கேக்கை குறைந்த வெப்பத்திலோ அல்லது அதிக வெப்பத்திலோ பேக் செய்திருந்தாலும் கேக் வராது.

◗ கேக்கின் மேலே முறுகலாக இருந்தால் அதிக வெப்பத்தில் பேக் செய்திருக்க வேண்டும்.


◗ பேக்கிங் பவுடர் அதிகமாக இருந்து அதிக சூடும் இருந்தால் கேக் மீது பள்ளம் உண்டானால் உலர்ந்த பழங்களை ஈரப்பசையுடன் பயன்டுத்தியிருக்கலாம்.


◗ அளவுக்கு அதிகமான சீனியைப் பயன்படுத்தினால் கேக் மொர மொரப்பாகவும் ஈரமாகவும் கனமாகவும் இருக்கும்.





# பறக்கும் படகு







படகு என்பது தண்ணீரில் மிதந்து செல்லும் வாகனம் . அந்தப் படகு எப்படிப் பறக்கும்? பறக்குதே... அதைத் தான் நீங்கள் படத்தில் பார்க்கிறீர்கள். இந்தப் பறக்கும் படகை நியூசிலாந்தைச் சேர்ந்த ரூடி ஹீமேன் என்ற பொறியியலாளர் உருவாக்கியிருக்கிறார். ஹோவர்கிரா'.ப்ட் என்ற நீரிலும் நிலத்திலும் செல்லும் படகைத்தான் இவர் பறக்க விட்டார்.

ஹோவர்கிரா'.ப்ட் படகு காற்றின் தொடர் அழுத்தத்தால் இயக்கப்படும் வாகனம். இதனைப் பல ஆண்டுகள் முயன்று சில சிறப்பு பொறியியல் முறைகளைக் கடைப்பிடித்து பறக்க வைத்துள்ளதாக ஹீமேன் கூறுகிறார். இரண்டுபேர் வரை செல்லக்கூடிய இந்தப் பறக்கும் படகு 100 கிலோ மீற்றர் வேகத்தில் 9 அடி உயரம் வரை பறக்குமாம்.


## கண்டுபிடி...! கண்டுபிடி...!

இங்கே 33 படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்தப் படங்களின் பெயர்களை வைத்து அதன் எழுத்துக்களை கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களின் வரிசைப்படி சரியான எழுத்துக்களை எழுதுங்கள். மொத்த எழுத்துக்களையும் ஒன்று சேர்த்துப் படித்துப் பாருங்கள். ஒரு திருக்குறள் கிடைக்கும்.




















## இரு படங்களிலும் வித்தியாசங்களை இனங்காண்போம்




## நீ......ண்ட படிக்கட்டு



உலகின் மிக நீண்ட படிக்கட்டு இது தான். தென் அட்லாண்டிக் பெருங்கடலில் அமைந்துள்ள செயின்ட் ஹெலெனா தீவில் இப்படிக்கட்டுகள் கட்டப்பட்டுள்ளன. 1829 ஆம் ஆண்டு ரயில் போக்குவரத்து நிறுவனம் துறைமுகத்திலிருந்து சரக்குகளை இறக்கி ஏற்றுவதற்காக இதைக் கட்டியது. 656 அடி உயரமும் 699 படிகளும் கொண்ட இந்தப் படிக்கட்டு தான் உலகின் பெரிய படிக்கட்டு என்று கூறப்படுகிறது.

# சிவன்கோவில் வளாகம் ஊர்திகளின் தரிப்பிடமா?

## மக்கள் கோரிக்கை

(குருநகர்)

யாழ்.காங்கேசன்துறை வீதி, சிவன்கோவில் வளாகம் ஊர்திகள் தரிப்பு பகுதியாகவும், சிற்றூர்திகள் நிறுத்தி வைக்கும் தரிப்பிடமாகவும் ஒரேவேளையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சிவன் கோவில் வளாகம் இந்து சமய மக்களின் வழிபாட்டுத்தலமாகப் புனிதம் பேணப்படவேண்டிய இடம் அதனை ஊர்திகளின் தரிப்பாகவும் நிறுத்துமிடமாகவும் பாவிக்கப்பட்டு வருவதானது கண்டிக்கத்தக்க ஒன்றாகக் கருதப்படுகிறது.

மேற்படி காரணங்களால் அந்தப்பகுதியில் எந்நேரமும், பயணிகள், வாகனங்களின் நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. ஆலய வழிபாட்டில் ஈடுபடும் மக்களின் நிலைப்பாட்டை குளப்பி வேடிக்கையாக்கும் கைங்கரியத்தால் அப்பகுதி மாசுபடுத்தப்பட்டு வருவதாக புகார் செய்யப்படுகிறது.

சிற்றூர்திகள் தரிக்க முற்றவெளிப்பகுதியில் இடம் ஒதுக்கப்பட்டிருந்தும் இங்கே நிறுத்தப்படுவதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேவேளை பிரயாணிகளை ஏற்றும் தரிப்பிடத்தை இப்பகுதியில் இருந்து முன்னோ பின்னோ நகர்த்திவிடவும் கோரப்படுகின்றது.(68)

# களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் பொலிஸாரினால் கண்டெடுப்பு

களவாடப்பட்ட மோட்டார் சைக்கிள் பொலிஸாரின் முயற்சியினால் உரிமையாளருக்கு கிடைத்துள்ளது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை கச்சேரி கிழக்கு ஒழுங்கைப் பகுதியில் உள்ள அரச அலுவலகம் ஒன்றில் வேலை செய்யும் ஊழியர் ஒருவர் அலுவலகத்திற்கு முன்பாக மதியம் 1 மணியளவில் NPWF 6597 இலக்கமுடைய மோட்டார் வண்டியை நிறுத்தி விட்டு உள்ளே சென்றுள்ளார்.

தனது அலுவல்களை முடித்துவிட்டு மதியம் 1.30 மணியளவில் வெளியே வந்து பார்த்தபோது மோட்டார் சைக்கிளை காணவில்லை.

தனது மோட்டார் ச்சைக்கிள் களவாடப்பட்டதை அறிந்த அவர் உடனடியாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றினைப் பதிவு செய்தார் முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மோட்டார் சைக்கிளைத் தேடிச்சென்றபோது குறித்த மோட்டார் சைக்கிள் துரையப்பா விளையாட்டரங்கிற்கு அண்மையில் கடந்த செவ்வாய்க்கிழமை காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்யப்படாமையால் நீதிமன்றத்தில் குறித்த மோட்டார் சைக்கிள் மற்றும் உரிமையாளர் ஆஜராகிய தன் பின்னர் மோட்டார் சைக்கிள் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது. (48)

# சமாந்தரப்பயணத்தால் விபத்து ஏற்படும் அபாயம்

மீசாலை தொடக்கம் சாவகச்சேரி வரையான பகுதிகளில் துவிச்சக்கர வண்டியில இரண்டிற்கு மேற்பட்டோர் சமாந்தரமாகப் பயணம் செய்வதனைக் காணமுடிகின்றது.

இரண்டிற்கு மேற்பட்டோர் பயணம் செய்யும் போது வாகனத்தினை செலுத்தும் சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதுடன், விபத்துக்களும் ஏற்படவாய்ப்புள்ளதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

பெரும்பாலும் பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகளே இவ்வாறு பயணம் செய்வதாகவும் வாகன சாரதிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் கவனமெடுப்பதன் மூலம் விபத்துக்கள் ஏற்படும் சந தர்ப்பங்கள் குறையும் என சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (130)

# பூநகரி வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர்

(முழங்காவில்)

பூநகரி அரசினர் வைத்தியசாலையில் கடந்த இருவருடங்களாக நிரந்தரவைத்தியர் இல்லாமல் நோயாளர் பட்ட இன்னல் நீங்க வழிபிறந்துள்ளது.

கடந்த வாரம் முதல் பூநகரியை பிறப்பிடமாகக் கொண்ட பஞ்சாட்சரம் கோகுலன் வைத்தியசாலை பொறுப்பு அதிகாரியாகக் கடமையைப் பொறுப்பேற்று செயற்பட்டுவருவதையிட்டு பூநகரி மக்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளனர்.

பல தடவைகள் வைத்தியர் இல்லாப் பிரச்சினையை சுட்டிக காட்டி செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (112)

# முல்லையில் பாம்புக்கடி மூவர் வைத்தியசாலையில்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாம்புக்கடிக்கு இலக்கான 3 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர்.முல்லைத்தீவு, மல்லாவிப் பகுதியில் பெண்கள் இருவரும் ஒட்டுசுட்டான் பகுதியில் விவசாயி ஒருவரும் கடந்த சனிக்கிழமை மாலை பாம்புக் கடிக்கு இலக்காகியுள்ளனர்.

மல்லாவிப் பகுதியில் பாம்புக் கடிக்கு இலக்கான பெண்கள் இருவரும் உடனடியாக மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இதேவேளை, ஒட்டுசுட்டான் பகுதியில் பாம்புக் கடிக்கு இலக்கான விவசாயி கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாசார பேரவையின் கலை இலக்கிய விழாவும் திருவுடையான் -04 மலர் வெளியீடும் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட மாகாண மீன்பிடித்துறை அமைச்சின் செயலாளர் இரா. வரதீஸ்வரன் மங்கள விளக்கேற்றுவதையும், விருந்தினர் ஒருவரால் மாணவருக்கு பரிசில்வழங்கப்படுவதையும் காணலாம். (18,90,48)

# பதிவிறக்கப் பெட்டகம்

மோனலிசா போன்ற உலகப் புகழ்பெற்ற ஓவியங்களை வரைந்த இத்தாலிய ஓவியர் லியோனார்டோ டாவின்ஸி நேரம் காலம் தெரியாமல் தனது பணியில் ஈடுபட்டிருப்பார். ஓவியம் வரைந்துகொண்டு இருக்கும்போது, திடீரென்று அதை நிறுத்திவிட்டுப் பல மணி நேரங்கள் அந்த ஓவியத்தையே பார்த்துக்கொண்டு நிற்பார். அவர் அப்படிச் சும்மா நிற்பதற்கான காரணம், டாவின்ஸிக்கு வேலை கொடுத்த மாதா கோவில் பாதிரியாருக்குப் புரியவில்லை. ஒருநாள் டாவின்ஸிடம் "வேலையை ஏன் பாதியில் நிறுத்தி விட்டுச் சும்மா நிற்கிறீர்?" என்று ஆர்வம் தாங்க முடியாமல் கேட்டு விட்டார். அதற்கு, "சும்மா நிற்கும்போதுதான் நான் நிறைய வேலை செய்கிறேன்" என்றார் டாவின்ஸி.

*** *** *** ***

அமெரிக்காவைச் சேர்ந்த மான்டானா பகுதியில் வசித்து வந்த பிரபல ஓவியரான சாள்ஸ் எம். ரஸ்ஸல் என்பவரை ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி கண்டார். "நீங்கள் வரைந்த ஓவியங்களில் எதை மிகச் சிறந்தது என்று கருதுகிறீர்கள்?" என்று நிருபர் கேட்டார். ஓவியர் சித்திரக் கூடத்தில் இருந்த தம்முடைய ஓவியங்களை எல்லாம் ஒரு கண்ணோட்டம் விட்டார். பிறகு பெருமூச்செறிந்து கொண்டே, "அதைநான் இன்னும் வரையவில்லை" என்று ஆதங்கத்துடன் கூறினார் ரஸ்ஸல்.

*** *** *** ***

தோமஸ் அல்வா எடிசனிடம், அவர் மனைவி, 'நீங்கள் ஓய்வு இல்லாமல், வேலை பார்த்து விட்டீர்கள். எங்கேயாவது போய், கொஞ்ச நாள் களைப்பாற வேண்டும்...' என்றாள்.

'எங்கே போவது?'

'எந்த இடத்திலிருந்தால், இந்த உலகத்தையே மறந்து விட முடியுமோ... அங்கே போகலாம்...'

'சரி. நாளை போகலாம்...' என்றார் எடிசன்.

மறுநாள் காலை, அவர் தன் ஆய்வு கூடத்திற்கே திரும்பி விட்டார்.

*** *** *** ***

குமரனும், கிருஷ்ணனும் சகோதரர்கள். குமரன் ஒரு சிறு கடை வைத்திருந்தான். அதில் எதிர்பாராதவிதமாக நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. கிருஷ்ணன் அரசாங்க வேலையில் இருந்தான். தனக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டதால், ஐம்பதாயிரம் ரூபா கடனாகத் தர வேண்டும் என்று குமரன் கேட்டான். அதற்குக் கிருஷ்ணன், "என் பெண்டாட்டியைக் கேட்டுச் சொல்கிறேன்" என்றான்.

"அண்ணன் முன்பு மாதிரி இல்லை. கடன் கேட்டால் பெண்டாட்டியைக் கேட்டுச் சொல்கிறேன் என்கிறார். ரொம்ப மாறி விட்டார்" என்று எல்லாரிடமும் சொல்லிப் புலம்பினான் குமரன். தனக்கு உதவி செய்ய அவர் விரும்பாததால்தான் இப்படிச் சொல்லிவிட்டார் என்று அவன் நினைத்தான்.

ஆனால், எதிர்பாராதவிதமாக கிருஷ்ணனின் மனைவி ஒரு நாள் வீட்டுக்கு வந்து ஐம்பதாயிரம் ரூபாயைக் குமரனிடம் கொடுத்துவிட்டுச் சென்றாள். தனது அண்ணனைத் தப்பாக நினைத்துவிட்டோமே என்று வருந்திய குமரன், ஒரு நாள் கிருஷ்ணனிடம் மன்னிப்புக் கேட்டான். அதற்குக் கிருஷ்ணன் சொன்னான்:

"என் பெண்டாட்டியிடம் கலந்து பேசி அவள் சம்மதத்தோடு உனக்குப் பணம் கொடுத்ததற்குக் காரணம், நாளைக்கு நீ கடனைத் திருப்பிக் கொடுக்காவிட்டால் அவள் என்னைத் திட்டமாட்டாள்"

*** *** *** ***

ஃபோர்ட் மோட்டார்ஸ் நிறுவனத்தில் நிர்வாகியாக இருந்த அயகோகா சொன்னார்:

"காரை வாங்க வருபவர் போனெட்டைத் திறந்து இன்ஜினைப் பார்த்தால் அவர் ஜெர்மன் காரர். காருக்குள் உள்ள சீற் முதலானவற்றைப் பார்த்தால் அவர் பிரிட்டிஷ்காரர். காரின் வடிவத்தையும் அழகையும் கவனித்தால் அவர் பிரெஞ்சுக்காரர். ஹோர்னை அடித்துப் பார்த்தால், இத்தாலியர். காரின் அளவையும் பார்த்து, அதன் விலையையும் பார்த்தால் அவர் அமெரிக்கர்"

*** *** *** ***

ஒருமுறை ரமணரைச் சந்திக்க சிலர் வந்திருந்தனர். அவர்களில் சிறுவன் ஒருவனும் இருந்தான்.

ரமணர் அவனிடம், "உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.


"ஒன்றும் வேண்டாம்" என்றான் சிறுவன்.

ரமணர், "ஓஹோ! நீ நம்மவன்" என்றார்.

"எனக்கு ஒன்றும் வேண்டாம் என்ற இந்த நிலையில் இவன் இருந்துவிட்டால் எல்லாமே இவனைத் தேடி வரும்" என்று அவனது உறவினர்களிடம் சொல்லி அனுப்பிவைத்தார் ரமணர்.

# சாதனை மாணவர்களின் உள்ளத்திலிருந்து...

## துரைசிங்கம் ஆதவன்



**யாழ்• இந்துக் கல்லூரி**

**உயிரியற்பிரிவு (தமிழ் மொழி மூலம்)** -3A

**மாவட்ட நிலை : 5**

**தேசிய நிலை: 50**

இப் பெறுபேற்றினைப் பெற்றமையை இட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இதற்கு எனக்கு ஒத்துழைப்புகளையும், ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்கள், சக மாணவர்களுக்கும், நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது தந்தை ராஜா துரைசிங்கம் பிரதம கணக்காளராகவும் தாயார் கீதா துரைசிங்கம் ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றனர். இவர்களின் அயராத ஒத்துழைப்பே இப்பெறுபேற்றுக்கு காரணமாகும். எதிர்காலத்தில் உயிரியல் துறையில் மேலும் கற்க ஆசைப்படுகின்றேன்.

மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை முற்று முழுதாக நம்பியிராமல், வகுப்பறைக் கல்வியிலும் கவனம் செலுத்தல் வேண்டும். ஆசிரியர்களின் உதவியுடன் கற்க வேண்டும். எல்லாவற்றிலும் சிறந்தது சுயகற்றலே.

தினமும் கற்ற விடயங்களை அன்றன்றே கற்க வேண்டும். மீட்டலும் அவசியம்.


## சண்முகலிங்கன் குருபரன்

**யாழ்• இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு (தமிழ் மொழி மூலம்)** -3A

**மாவட்ட நிலை : 4**

**தேசிய நிலை: 22**



வெற்றி என்பது எளிதல்ல தோல்வி என்பதும் நிரந்தரமல்ல. மாணவனின் சிறந்த ஆசான் அவனது தவறுகளே. பாடசாலையிலும், கல்வி நிலையங்களிலும் ஏறபட்ட சிறு சிறு தவறுகளை இனங்கண்டு திருத்துவதன் மூலம் வெற்றிக்கு வித்திடலாம். இந்தப் பெறுபேற்றிற்கு காரணமான ஆசிரியர்கள், பெற்றோர், சகோதரர்கள், சக மாணவர்கள் அனைவரிற்கும் நன்றிகள்.

நான் தரம் 5 புலமைப்பரிசிலில் 159 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தேன். தொடர்ந்து க.பொ.த சாதாரண தரத்தில் 9A பெற்று மாவட்ட நிலையில் - 4 ஆவதாக வந்தேன். எனது தந்தை ஓய்வு பெற்ற அதிபர், தாய் இல்லத்தரசி எனக்கு கலவியில் மட்டுமல்ல சதுரங்கம், மேசைப் பந்தாட்டம் போன்றவற்றிலும் ஈடுபாடு உண்டு. இவையெல்லாம் கல்லூரியில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் சிவஞான வைரவப் பெருமானின் திருவருளே புத்தகக் கல்வியை மட்டுமல்ல அனுபவக் கல்விக்கு முக்கியத்துவமளித்தால் கல்வியை மட்டுமல்ல வாழ்க்கையையும் ஜெயிக்கலாம்.

## ராஜசேகரம் ஜதுஷன்



**யாழ். இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு (தமிழ் மொழி மூலம்)** -3A

**மாவட்ட நிலை : 1**

**தேசிய நிலை: 3**

முயற்சித்தால் எதுவும் முடியாததல்ல. படிப்பதை கவனமாகக் கற்க வேண்டும்.

விண்வெளி சம்பந்தமாக கற்க வேண்டும், அத்துறையிலே சிறப்புப் பெற வேணடும் என்பதே எனது அவா. எனது தந்தை ஓய்வுபெற்ற கணித ஆசிரிய ஆலோசகர். தாய் வடிவாம்பிகை வீட்டுப் பெண். குடும்பத்தில் நான் ஒரே ஒரு பிள்ளை எனக்கு ஆன்மீகம், சித்திரத்தில் நாட்டமுண்டு.

புலமைப்பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப்பெற்று மாவட்டத்தில் 4 ஆவது நிலையை அடைந்தேன். க.பொ.த சாதாரண தரத்தில் 9A பெறுபேற்றைப் பெற்றேன்.

என் மகனின் விருப்பத்தை அவனின் பாதையில் விட்டு விடுவேன், அவனது சிந்தனைகளில் தடை போடவில்லை. கேடகும் புத்தகங்களை வாங்கிக் கொடுப்பேன். கணிதம் கற்பிப்பேன். அவ்வளவு தான்.அவன் தனியார் கல்வி நிலையங்களுக்கு சென்றது கிடையாது. சுய கற்றல் மூலமே இந்த நில்லயினை அடைந்தான் என்கிறார் இவரது தந்தை.


## சிவகுமார் மேகலாதன்

**யாழ். இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு (தமிழ் மொழி மூலம்)** -3A

**மாவட்ட நிலை : 5**

**தேசிய நிலை: 25**



இவ் வெற்றிக்கு காரணமாக இருந்த பெற்றோருக்கும் இறைவனுக்கும் ஆசிரியர்களுக்கும் சக நண்பர்களுக்கும் எனது நன்றிகள்.

எனது தந்தை வங்கியில் உதவி முகாமையாளராக கடமையாற்றுகிறார். தாய் வீட்டுப் பெண் எனது சகோதரி மருத்துவபீடம் புதுமுக மாணவி

நான் க.பொ.த சாதாரண தரத்தில் 8A 1B மாவட்ட நிலையில் முதலாம் இடத்தைப் பெற்றேன்.

அதிக நேரம் படிப்பதில்லை, கற்கும் விடயங்களை மனதில் நிறுத்திக் கொள்வேன்.

எனக்கு சதுரங்கம் விளையாடுவதில் ஆர்வமுண்டு. இது கல்விக்கு பெரிதும் உதவியது. பல பரிசில்கள், விருதுகளை சதுரங்கத்தில் பெற்றுளளன்.என்..

தொகுப்பு : க.உஷாந்தன்

# மாந்தை கிழக்கில் 71 கிராமங்களில் 171 வீதிகள் புனரமைக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 71 கிராமங்களின் 171 வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில் இருப்பதினால் அவ் வீதிகளினூடாக பயணிக்க முடியாதிருப்பதாக அக்கிராம மக்கள் மாந்தை கிழக்கு பிரதேச சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றிற்கு முறைப்பாடு செய்துள்ளனர்.

15 கிராம அலுவலர்களைக் கொண்ட இந்தக் கிராமங்களில் 2698 குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

இக்கிராமங்களில் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குச் சொநதமான 185 வீதிகளும், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 9 வீதிகளும் காணப்படுகின்றன. இவற்றில் பிரதேச சபைக்குச் சொந்தமான 23 வீதிகள் மட்டும் புனரமைக் கப்பட்டுள்ளன.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளமையினால், இந்த வீதிகள் மிகவும் மோசமான நிலையில் குன்றும்குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் மக்கள் தங்கள் பயணங்களை மேற் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆபாச இணையத்தளங்களை தேடியவர்களில் இலங்கையர் முதலிடம்

கூகிள் தேடுதளத்தில் 2013 ஆம் ஆண்டில் ஆபாச இணையத் தளங்களை தேடிய நாடுகளில் இலங்கை முதலிடத்தைப் பெற்றுள்ளதாக கூகிள் நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூகிள் நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களின் படி இநதப் தகவல் வெளியாகியுள்ளது. இவ்வாறு ஆபாசத்தளங்களைத் தேடிய நகரங்களில் நுகேகொட முதலிடத்திலும் ஹோமாகம மற்றும் கொழும்பு நகரங்கள் இரண்டாம், மூன்றாம் இடங்களிலும் உள்ளன.

2012 ஆம் ஆண்டும் இலங்கை இந்த விடயத்தில் முதலிடத்தில் இருந்தது. இரண்டாம் இடத்தில் இருந்த இந்தியா, திமோர், எத்தியோப்பியா, பங்களாதேஷ் நாடுகள் இம்முறை 5 ஆம் இடத்தில் உள்ளன.

# "திருட்டு ராஜாக்கள்" பார்த்தவர்களின் பணம், நகைகளை பறிகொடுத்தனர்

(கொழும்பு)

திருட்டு ராஜாக்கள் என்ற சிங்கள திரைப்படத்தை பார்க்க இரண்டு பெண்களை அழைத்துச் சென்ற நபர் ஒருவர், மயக்க மருந்து கலந்த குளிர் பானத்தை கொடுத்து, அவர்களிடம் இருந்த பணம் மற்றும் நகைளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளார்.

களுத்துறையில் உள்ள திரையரங்கம் ஒன்றில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. 48 மற்றும் 50 வயதான பெண்களிடம் இருந்தே இவ்வாறு பணமும், நகையும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் குடிரவரவு குடியகல்வு திணைக்களத்தில் வைத்து இந்தப் பெண்களுக்கு அறிமுகமானதுடன் இந்தப் பெண்களுக்கு அந்த நபருக்கும் இடையில் தொடர்புகள் இருந்து வந்துள்ளன.

குறித்த நபரிடம் இருந்து கிடைத்த தொலைபேசி அழைப்பொன்றை அடுத்து இந்தப் பெண்கள் திரைப்படம் பார்க்க சென்றுள்ளனர்.

படத்தின் இடைவேளையின் போது அந்த நபர் இந்தப் பெண்களுக்கு குளிர்பானங்களை கொடுத்துள்ளார்.

திரைப்படம் ஓடி முடிந்தும் இரண்டு பெண்கள் தமது ஆசனங்களில் மயங்கி கிடப்பதை திரையரங்கின் தொழிலாளர்கள் அவதானித்துள்ளனர்.

இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்த பின்னர், பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று பெண்களை நாகொட மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

சிகிச்சையின் பின்னர், வைத்தியசாலையில் இருந்து வெளியேறிய இந்தப் பெண்கள் பொலிஸாரிடம் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளனர்.

# தைப்பொங்கலன்று வெளியாகின்றது பேயா! நோயா! குறுந்திரைப்படம்



வாழைச்சேனை பேத்தாழையைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் கலாபூஷணம் தாழை செல்வநாயகத்தின் "பேயா! நோயா!" குறுந்திரைப்படம் தைப்பொங்கல் தினத்தன்று வெளியிடப்படவுள்ளது.

கிராமப் புறங்களிலும் நகர்ப் புறங்களிலும் இன்றும் மக்கள் மத்தியில் மூடப் பழக்க வழக்கங்கள் நிலவி வருகின்றன. மந்திர சூனியங்கள், பேயோட்டுதல், காய் வெட்டுதல், திருநீறு போடுதல் இன்னும் பல இவை போன்ற சம்பவங்கள் உள்ளன.

இப்பிரதேசத்தில் உள்ள கதிரவெளி, பால்சேனை, வாகரை, கண்டலடி, கல்குடா, பேத்தாழை போன்ற பிரதேசங்களில் வசித்து வரும் ஆதிக்குடிகளின் சந்ததியினர் மத்தியில் இன்னும் இந் நிகழ்வுகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

இச்சம்பவங்களை எடுத்துக் காட்டும் நோக்குடன் ஆதிவாசிகளின் பாரம்பரிய சடங்குகளில் ஒன்றான மொக்காட்டுப்பேய் சடங்கும் இப்படத்தில் காட்டப்படுகிறது.

மூடக்கொள்கைகளுக்கு சாடடையடி கொடுப்பது போல் இப்படம் உள்ளது. ஆட்கொல்லி வியாதியான புற்றுநோயால் பீடிக்கப்பட்ட ஒருவரை குணமாக்க முடியாது போக இறுதியில் வைத்திய சாலையில் குணமடைகிறார். இதுவே இப்படத்தின் கரு. பிரபல்யமான நாடக நடிகர்கள் இதில் பங்கேற்று நடித்துள்ளார்கள்.

கதை வசனம் இயக்கம் போன்றவற்றினை பிரபல எழுத்தாளர் கலாபூஷணம் தாழை செல்வநாயகம் செய்துள்ளார்.

எதிர்வரும் தைப்பொங்கலை அடுத்து இப்படத்தின் இறுவெட்டுக்கள் கவிஞர் வாகரை வாணனின் அனுசரணையுடன் வெளியிடப்படவுள்ளது.

# க.பொ.த. (உயர்தரம்) மாணவர்களுக்கான அலகு ரீதியான குறிப்புகள்

## இரசாயனவியல்

**விரிவியல்பு (Extensive Properties)**

தொகுதியின் அளவில் தங்கியுள்ள இயல்பு விரிவியல்பு எனப்படும். உதாரணம்: கனவளவு, வெப்ப உள்ளுறை, திணிவு, வெப்பக் கொள்ளளவு

**செறிவியல்பு (Intensive Properties)**

தொகுதியின் அளவில் தங்கியிராத இயல்புகள் செறிவியல்பு எனப்படும். உதாரணம் : வெப்பநிலை, செறிவு, அமுக்கம், அடர்த்தி, பிசுக்குமை, மூலர் கனவளவு, மூலர் வெப்பக் கொள்ளளவு, தன்வெப்பக் கொள்ளளவு.

**இரசாயனச் சமன்பாடுகளைச் சமப்படுத்தல்**

மூன்று முறைகள் உள்ளன.

1. கண்டறிதல் முறை (Inspection method)
2. கணிதமுறை (Mathematical method)
3. ஒட்சியேற்ற / தாழ்த்தல்முறை (Oxideation & Reduction Method)

**கணிதமுறை**

தாக்கிகளையும் விளைவுகளையும் அறிந்துள்ள பொதுப்பெருக்கங்களை ஒப்பிடும் முறையின் மூலம் சமன்பாட்டைச் சமப்படுத்தல் கணிதமுறை எனப்படும்.

உதாரணம்: $aCu + b\,HNO_3 \quad cCu(NO_3)_2 + d\,NO + eH_2O$

Cu அணுக்களைக் கருதுவோமாயின் $a = c$
H அணுக்களைக் கருதுவோமாயின் $b = 2e$
N அணுக்களைக் கருதுவோமாயின் $b = 2c + d$
O அணுக்களைக் கருதுவோமாயின் $3b = 6c + d + e$

a=1 ஆயின் c =1 அதனைப் பிரதியிடும்போது

$b = 2 + d$ ______(1)
$3b = 6 + d + e$ ______ (2)
b = 2e ஐ பிரதியின்போது
$2e = 2 + d$
$6e = 6 + d + e$
$2e - d = 2$ ______ (3)
$5e - d = 6$ ______ (4)
$3e = 4$
$e = 4/3$
$b = 2 \times 4/3 = 8/3$ $d = b - 2$
$= 8/3 - 2$
$= 2/3$

$Cu + 8/3\,HNO_3 \rightarrow Cu(NO_3)_2 + 2/3NO + 4/3\,H_2O$
3 ஆல்பெருக்கும் போது
$3Cu + 8HNO_3 \quad 3Cu(NO_3)_2 + 2NO + 4\,H_2O$

**திணிவுப் பின்னம்**

A, B ஆகியவற்றைக் கொண்ட ஒரு கலவையில் A யின் திணிவுப் பின்னம்

= A யின் திணிவு / (A யின் திணிவு + B யின் திணிவு)

உதாரணம் : Zn, Mg, Cu அடங்கும் கலப்புலோகமொன்றின் 5.0g இல் 1.00g mg அடங்கியுள்ளது. mg இன் திணிவுப் பின்னத்தைத் துணிக.

mg இன் திணிவுப் பின்னம் $= \frac{1.00g}{5.00g} = \frac{1}{5}$

**கனவளவுப் பின்னம்**

A,B ஆகியவற்றைக் கொண்ட கலவையில் A யின் கனவளவுப் பின்னம்

= A யின் கனவளவு / A, B கலவையின் மொத்தக் கனவளவு

உதாரணம்: $20.00cm^3$ $C_2H_5OH$ இற்கு மொத்தக் கனவளவு $100cm^3$ ஆகும். வரை நீர் சேர்க்கப்படுகின்றது. $C_2H_5OH$ இன் கனவளவுப் பின்னர் யாது?

$C_2H_5OH$ இன் கனவளவு பின்னம் $= \frac{20.00cm^3}{100cm^3}$
$= 1/5$

**பதார்த்த அளவு பின்னம் (மூல் பின்னம்)**

A, B ஆகியவற்றைக் கொண்ட கலவையில் A யின் பதார்த்த அளவு பின்னம்

= A யினது பதார்த்த அளவு / மொத்த பதார்த்த அளவு

உதாரணம்: 5 mol KCI, 3 mol NaOH உடன் கலந்துள்ள தொகுதியில் KCI இன் பதார்த்த அளவு பின்னம் யாது?

KCI இன் பதார்த்த அளவு பின்னம் $= \frac{5\,mol}{8\,mol}$
$= \frac{5}{8}$

**pph, ppt, ppm, ppb**

தரப்பட்ட திணிவு, கனவளவு, மூல் பின்னங்களை நூறின், ஆயிரத்தின், மில்லியனின், பில்லியனின் பகுதிகளைக் குறிப்பிடப்படுதல் முறையே pph, ppt, ppm, ppb எனப்படும்.

| | | | |
|---|---|---|---|
| pph $10^2$ | ppt $10^3$ | ppm$10^6$ ($mg\,dm^{-3}$) | pph $10^9$ ($\mu g\,dm^{-3}$) |

உதாரணம் :

1. 20.000g நீர் கரைசலில் 0.020g A எனும் திரவியம் அடங்கியுள்ளது.

i) திரவியம் A இன் திணிவுப் பின்னம் யாது?

$\frac{0.020\,g}{20.000g} = \frac{1}{1000}$

ii) இதன் பெறுமானத்தினை pph, ppt, ppm, ppb ஆகியவற்றில் தருக

pph இல் $\rightarrow$ $1/1000 \times 100 = 0.1$ pph
ppt இல் $\rightarrow$ $1/1000 \times 1000 = 1$ ppt
ppm இல் $=$ $1/1000 \times 10^6 = 10^3$ ppm
ppb இல் $=$ $1/1000 \times 10^9 = 10^6$ ppb

2) 20.0g நீர்க்கரைசலொன்றின் 40 mg கரையம் A காணப்படுகின்றது.

1) A இன் திணிவுப் பின்னத்தைக் காண்க.
2) மேலுள்ள பெறுமானத்தை
i. PPh ii) PPt iii) PPm iv) PPb என்பவற்றில் தருக.

**Answer**

1) A இன் திணிவுப் பின்னம் $= \frac{40 \times 10^{-3}\,g}{20g}$

2)

i) pph இல் $= 2 \times 10^{-3} \times 100 = 2.0 \times 10^{-1}$
ii) ppt இல் $= 2 \times 10^{-3} \times 1000 = 2$
iii) ppm இல் $= 2 \times 10^{-3} \times 10^6 = 2.0 \times 10^3$
iv) ppb இல் $= 2 \times 10^{-3} \times 10^9 = 2.0 \times 10^6$

### 2.1 பொருளுடைய இலக்கம்

2.11 பின்வருவனவற்றில் உள்ள பொருளுடைய இலக்கங்களின் எண்ணிக்கையினைத் தருக?

a) 73.000g b) 0.0503 kg
c) 6.300cm d) 0.80090m
e) $5.10 \times 10^{-7}$m f) 2.0001 s

2.12 பின்வருவனவற்றில் உள்ள பொருளுடைய இலக்கங்களின் எண்ணிக்கையைத் தருக.

a) 130.0kg b) 0.07389
c) 0.224800m d) 1008 S
E) $4.380 \times 10^{-8}$M f) $9.100 \times 10^4$ cm

2.13 கீழ்வரும் கணித்தல்களுக்கான விடையினைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக

a) $\frac{2.568 \times 5.8}{4.186}$ b) 5.41 - 0.398
c) 3.38 - 3.01 b) 4.18 - 58.16 x (3.38 - 3.01)

2.14 கீழ்வரும் எண்கணிதச் செய்கைகளுக்கான விடைகளைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக.

a) $\frac{5.61 \times 7.891}{9.1}$ b) 8.91 - 6.435
c) 6.81 - 6.736 d) 38.91 x (6.81 - 6.730)

2.15 கீழ்வரும் எண்கணிதச் செய்கைகளுக்கான விடைகளைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக?

a) $\frac{8.71 \times 0.0301}{0.056}$   b) 0.71 + 81.8

c) 934 x 0.00435 + 107   d) (847.89 - 847.73) x 14673

2.16 கீழ்வரும் எண்கணிதச் செய்கைகளுக்கான விடைகளைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக.

a) $\frac{0.871 \times 0.23}{5.871}$

b) 8.937 - 8.930

c) 8.937 - 8.930

d) 0.00015 x 54.6 + 1.002

2.17) பூமியின் சுற்றளவு 40, 000km ஆகும். இப்பெறுமானம் திட்டமாக 2 பொருளுடைய இலக்கங்கள் கொண்டது. இதனை விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் சரியான பொருளுடைய இலக்கங்களில் எழுதிக்காட்டுக.

2.18) பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான சராசரித் தூரம் 150,000.000 km என வானியலாளர்கள் கூறுகின்றனர். இப்பெறுமானம் திட்டமாக 3 பொருளுடைய இலக்கங்களைக் கொண்டது. இதனை விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் சரியான பொருளுடைய இலக்கங்களில் எழுதிக்காட்டுக.

2.19) இரண்டு கோளங்களில் ஒரு கோளத்தின் ஆரை 5.10 cm மற்றையதன் ஆரை 5.00 cm இரண்டு கோளங்களுக்குமிடையிலான கனவளவு வித்தியாசத்தினைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் எழுதுக. (கோளத்தின் கனவளவு $4/3\ \pi r^3$, $\pi = 3.1416$ r - ஆரை)

2.10) திண்ம உருளை ஒன்றின் குறுக்குவெட்டு ஆரை 1.500 cm ஆகும். இவ் உருளையின் 3.10 cm உயரத்திற்கும் இடையிலான கனவளவுப் பெறுமானத்தினைச் சரியான பொருளுடைய இலக்கங்களில் தருக. (உருளையின் கனவளவு $\pi r^2 l$, $\pi = 3.1416$, r - ஆரை l= நீளம்)

2.11) கீழ்வரும் அளவீடுகளைப் பொருத்தமான SI முன்னொட்டுக்களுடன் எழுதுக.

a) $5.89 \times 10^{-12}$s   b) $2.130 \times 10^{-9}$ m
c) 0.00721g   d) $6.05 \times 10^{3}$ m

2.12) கீழ்வரும் அளவீடுகளைப் பொருத்தமான SI முன்னொட்டுக்களுடன் எழுதுக

a) $4.851 \times 10^{-6}$ g   b) $3.16 \times 10^{-2}$ mg
c) $2.591 \times 10^{-9}$ g   d) $8.93 \times 10^{-12}$ g

2.13) விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டைப் பயன்படுத்தி மாற்றுக.

a) 6.15 ps to s   b) 3.781 μm to m
c) 1.546 $A^0$ to m   d) 9.7 mg to g

2.14) விஞ்ஞானமுறைக் குறிப்பீட்டைப் பயன்படுத்தி மாற்றுக.

a) 8.55 km to m   b) 1.98 ms to s
c) 2.54. cm to m   d) 6.923 mg to g

## ஏற்ற அடர்த்தி (Charge Density)

1 $dm^3$ கனவளவில் உள்ள ஏற்றத்தின் அளவு (C இல்) ஏற்ற அடர்த்தி எனப்படும்

$$\text{ஏற்ற அடர்த்தி} = \frac{\text{ஏற்றம் (C)}}{\text{கனவளவு } (dm^3)}$$

உதாரணம் : அயன்செறிவு 1 mol $dm^{-3}$ ஆகவுள்ள 1 mol $dm^{-3}$ $Fe^{3+}$ கரைசலின் ஏற்ற அடர்த்தியைக் காண்க.

1 mol நேர் (+) ஏற்றத்தின் அளவு = $+1.602 \times 10^{-19}$ C
$\times 6.022 \times 10^{23}$ C
= 1F (96485 C)

$$\text{ஏற்றத்தின் அடர்த்தி} = \frac{3\ F}{1\ dm^3}$$

$$= \frac{3 \times 96485\ C}{1\ dm^3}$$

$$= 289455\ C\ dm^{-3}$$

கனவளவிற்குப் பதிலாக திணிவும் பயன்படுத்தப்படலாம் திணிவு பயன்படுத்தின்

$$\text{ஏற்ற அடர்த்தி} = \frac{3\ F}{1\ kg}$$

$$= 289455\ C\ kg^{-1}$$

1) உப்பு $Fe_2(SO_4)_3$ நீரில் முற்றாகக் கரைகின்றது. இதனது நீர்க்கரைசலொன்றில் $SO_4^{2-}$ இன் அமைப்பு 28.8 ppm ஆகக் காணப்பட்டது.

(S =32, O = -16, Fe =56)

1) கரைசலின் $Fe^{3+}$ இன் செறிவை mol $dm^{-3}$ இல் காண்க

2) மேற்குறிப்பிட்ட கரைசலில் $Fe^{3+}$ அயனின் நேரேற்ற அடர்த்தியைக் கணிக்க ($Cdm^{-3}$ இல்)

**Answer**

1) $Fe_2(SO_4)_3 \rightarrow 2\ Fe^{3+}(aq) + 3\ SO_4^{2-}$
கரைசலில் $SO_4^{2-}$ இனது அமைப்பு = 28.8 ppm

$$28.8\ ppm = \frac{28.8 \times 10^{-3}\ gdm^{-3}}{96g\ mol^{-1}}$$

$= 3 \times 10^{-4}$ mol $dm^{-3}$
$SO_4^{2-} : Fe^{3+} = 3 : 2$

$\{Fe^{3+}_{(aq)}\} = 2 \times 10^{-4}$ mol $dm^{-3}$

2) நேரேற்ற அடர்த்தி $= 2 \times 10^{-4} \times 96485$ $Cdm^{-3}$
$= 19.2970$ $Cdm^{-3}$

**Ans 4**

பின்வரும் சக்திச் சொட்டெண் தொகுதிகளில் 4 f ஒபிற்றலிலுள்ள இலத்திரனொன்றுக்குப் பொருத்தக்கூடியது

1) n = 4, $l$=3, $m_l$ = +2 $m_s$ = -1/2

2) n = 4, $l$=3, $m_l$ = +4 $m_s$ = +1/2

3) n = 4 $l$=2, $m_l$ = -2 $m_s$ = -1/2

4) n = 3 $l$=2, $m_l$ = -1 $m_s$ = +1/2

5) n = 3 $l$=2 $m_l$ = -2 $m_s$ = -1/2

**Ans 1**

**தப்பல் வேகம் (Escape Valocity)**

பொருள் ஒன்றை புவியின் ஈர்ப்பிலிருந்து முற்றாக விடுபட்டு விண்வெளிக்கு உட்புக புவி மேற்பரப்பிலிருந்து எறிய வேண்டிய குறைந்தளவு வேகம் அதன் தப்பல் வேகம் எனப்படும்.

வாயு துணிக்கைகளின் இடைவேகம், புவியின் தப்பல் வேகத்திலும் கூடுமாயின் அது புவியின் வளிமண்டலத்திலிருந்து வெளியேறும்.


- ஐதரசன், ஈலியம் போன்ற பாரமற்ற வாயுக்களின் இடைவேகம் புவியின் தப்பல் வேகத்திலும் மிகக்கூடுதலானதாகையால் அவை புவியின் வளிமண்டலத்திலிருந்து வெளியேறியுள்ளன.

**பரவல்**

யாதாயினும் ஒரு வகை மூலக்கூறுகள், வேறோர் வகை மூலக்கூறுகள் அடங்கும் வெளியெங்கும் வியாபித்தல் பரவல் எனப்படும்.

பரவல் வேகம் திண்மம் < திரவம் < வாயு

வெவ்வேறு வாயுக்கள் வெவ்வேறு வேக வீதங்களில் பரவுமென பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. அமோனியா, ஐதரோ குளோரிக்கமில மூலக்கூறுகள் வளியினூடாகப் பரவி $NH_4Cl$ உருவாகும் விதம் பின்வரும் அமைப்பில் காட்டப்பட்டுள்ளது. HCl தோய்க்கப்பட்ட பஞ்சிற்கு அண்மையில் வெண்புகை தோன்றும்.



- சார் மூலக்கூற்று திணிவு குறைவான அமோனியா மூலக்கூறுகளின் பரவல் வேகவீதம் ஐதரோகுளோரிக் கமிலத்திலும் அதிகமானது என இதிலிருந்து தெளிவாகிறது.
- எனவே சார்மூலக்கூற்றுத் திணிவு குறைந்த மூலக்கூறுகளின் பரவல் வேகம் உயர்வானதாகும்.
- பரவல் வீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பரப்பளவு செறிவுப் படித்திறன் வெப்பநிலை சார் மூலக்கூற்றுப் பருமன்

**மூலக்கூற்றுச் சாலகங்கள்**

சில மூலக்கூற்றுச் சாலகங்கள் ஒத்த மூலக்கூறுகளிலானவை. வேறு சில பல்லின மூலக்கூறுகளிலானவை. இராட்சத மூலக்கூறை உருவாக்கும் மூலக்கூறின் முனைவுத் தன்மைக்கேற்ப அவற்றை முனைவில் மூலக்கூற்று சாலகம், முனைவு மூலக்கூற்று சாலகமென வகைப்படுத்த முடியும்.

அயடின் பளிங்குகள் ஒத்த அணுக்களினாலான, முனைவில் மூலக்கூற்றுச் சாலகத்திற்கு உதாரணமாகும். இது ஒரு பாரிய மூலக்கூறாகும். ஆகவே பல்வேறு காரணங்களினால் அயடின் மூலக்கூறு தற்காலிகமாக தூண்டி இரு முனைவை உருவாக்குகின்றது. அவ்வாறான தூண்டிய இரு முனைவு, தூண்டிய இருமுனைவுகளுக்கிடையே ஏற்படும் கவர்ச்சி மூலம் அயடின் சாலகம் உருவாகியுள்ளது.

# வட இலங்கை தனியார் பேருந்து சங்கம் வெள்ளிக்கிழமை சேவைப் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முழுமையான சேவை புறக்கணிப்பில் ஈடுபடப் போவதாக, சங்கத்தின் தலைவர் எஸ்.கெங்காதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முலலைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடும் பேருந்துகளே முழுநேர சேவை புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்த்தில் 5 மாவட்டங்களுக்கிடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் எம்மால் வழங்கப்பட்ட கோரிக்கையினை இதுவரை காலமும் வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் நடைமுறைப்படுத்தவோ அல்லது மாற்று நடவடிக்கை செய்வதறகு ஏற்பாடு செய்யவில்லை.

வவுனியாவில் இருந்து பரந்தன் ஊடாக பயணத்தினை மேற்கொள்ளும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், குறுந்தூர சேவையில் ஈடுபடும் உரிமையாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டும் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமையில் இருந்து வவுனியாவிலிருந்து பரந்தன் ஊடாக சேவையில ஈடுபடும் பேருந்துகள் தமது சேவைகளை மாங்குளம் அல்லது நெடுங்கேணி ஊடாக மேற்கொள்ள வேணடும.

இதனை மீறி இப்பேருந்துகள் பரந்தன் ஊடாக சேவையில் ஈடுபட்டால் ஏனைய 4 மாவட்டத்தில் இருந்து பரந்தன் ஊடாக சேவையினை மேற்கொள்ளும் பேருந்துகள் அனைத்தும் சேவைப் புறக்கணிப்பில் ஈடுபடுவதாக முடிவெடுக்கப்பட்டது.

இம்முடிவினை வடமாகாண ஆளுநர், வடமாகாண போக்குவரத்து அமைச்சர், பிரதிப் பொலிஸ்மா அதிபர், தனியார் போக்குவரத்து அமைச்சர், கொழும்பு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு உட்பட 5 மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கும் தெரியப்படுத்தப் பட்டது.ஆனால் இன்று வரைக்கும் இவ்விடயம் தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் பெரும் பாதிப்புக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ளது.

இதனால் மீளவும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு இடையில் சேவையில் ஈடுபடும் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இச் சந்திப்பில் வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கமோ அரசாங்க அதிபரோ எமக்கு எதுவித மாற்று நடவடிக்கையும மேற்கொள்ளததானால் எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முழுநேர சேவை புறக்கணிப்பில் ஈடுபடுவதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

# கிழக்கில் அதிக மழை

கிழக்கு மாகாணத்தில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலை மேலும் தொடரும் என காலநிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

மாலை, இரவு வேளைகளில் சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என அந்நிலையம் தெரிவித்துள்ளது. இதேவேளை திருகோணமலையிலிருந்து பொத்துவில் ஊடாக அம்பாந்தோட்டை வரையான கடற் பிரதேசங்களில் அவ்வப்போது மழை பெய்யக் கூடும்.

காற்றுதென்கிழக்கு மூலை நோக்கி வீசும் அதேவேளை காற்றின் வேகம் மணித்தியாலத்திற்கு 30 - 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்க கூடும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

# நாவிதன் வெளி பிரதேச சபையின் வரவு செலவுத்திட்டம் தோல்வி

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்டுப்பாட்டிலுள்ள நாவிதன்வெளி பிரதேச சபையின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு-செல்வுத் திட்டம் ஒரு மேலதிக வாக்கினால் தோல்வியடைந்துள்ளது.

பிரதேச சபை தவிசாளர் தலைவர் எஸ்.குணரட்னத்தினால் 2014ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று சபையில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக நான்கு பேரும் ஆதரவாக மூன்று பேரும் வாக்களித்தனர். இதனால் பிரதேச சபையின் 2014ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் ஒரு வாக்கினால் தோல்வியடைந்துள்ளது.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகிய கட்சிகளின் நான்கு உறுப்பினர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

எனினும், பிரதேச சபை தவிசாளர் உட்பட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மூன்று உறுப்பினர்கள் வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

# துப்பாக்கி ரவைகளுடன் இருவர் கைது

பதுளை, கெகெல்எல்ல பிரதேசத்தில் துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 5 மணியளவில் இந்நபரகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் சீன தயாரிப்பு ரவைகளுடன் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பதுளை மற்றும் யாஎல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். பதுளை பொலிஸார் இந்தச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# அனர்த்த முகாமைத்துவ முன்னெச்சரிக்கை ஒத்திகை

பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் பருத்தித்துறை J/401 பருத்தித்துறை கிழக்கு J/403, ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை மட்டும் உள்ளடக்கி இன்று பி.ப 3.00 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப்பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும். இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

# பணமோசடியில் ஈடுபட்ட பௌத்த பிக்கு “மீசையுடன்” கைது

இந்தியாவில் உள்ள புனித பௌத்த தலங்களுக்கு யாத்திரிகரை அழைத்துச் செல்வதாக கூறி 152 பேருக்கும் மேற்பட்டவர்களை ஏமாற்றி பணத்தைப் பெற்ற பிக்கு ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

52 இலட்சம் ரூபாவுக்கும் மேல் பெற்றுள்ளதாக கூறப்படும் இந்தப் பிக்கு தலைமறைவாகி இருந்ததுடன் சாதாரண உடையில் இருந்த நிலையில் அனுராதபுரம் பிராந்தியத்திற்கான குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான முன்னாள் பிக்கு முகத்தில் மாற்றம் தெரியும் வகையில் மீசை வளர்த்திருந்ததுடன் தலைமுடியையும் வளர்த்திருந்தாக பொலிஸார் தெரிவித்தனர்.

சூரியவெவ பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வீடொன்றில் மறைந்திருந்த நிலையில் இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் கைது செய்யப்படும் போது அவரிடம் இருந்த 9 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பணம், மோட்டார் சைக்கிள், மூன்று செல்போன்கள், 4 தொலைபேசி சிம் அட்டைகள், கடவுச்சீட்டு பெறுவதற்காக பிக்குகள் உட்பட ஏனைய நபர்களிடம் இருந்து பெறப்பட்ட 608 புகைப்படங்கள், அடையாள அட்டைகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர்.




# வேலை வாய்ப்புக்கண்காட்சி

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் நடாத்தப்பட்ட வழிகாட்டல் மற்றும் தொழிற்சந்தை 2013 கண்காட்சி கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக உற்பத்தித் திறன் மேபாட்டு அமைச்சர் பசீர் சேகுதாவூத் கலந்து கொண்டார்.

தொழில் உருவாக்கல்- மேம்பாடு மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவின் பணிப்பாளர் எச்.ஏ. ஹேமா பெரேரா- உதவி மாவட்டச் செயலாளர் எஸ். ரங்கநாதன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு அமைச்சின் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்துடன் இணைந்து நடாத்திய இச்சந்தையில் மட்டக்களப்பு மாவட்டம் மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து தனியார் வங்கிகள்- நிதி நிறுவனங்கள்- சந்தைப்படுத்தும் முகவர்கள்- நட்சத்திர ஹோட்டல்கள் உட்பட பல தொழில் நிறுவனங்கள கலந்துகொண்டன.

# கடலலையில் இழுத்துச்செல்லப்பட்ட சிறுவனைக் காப்பாற்றிய பொலிஸார்

திருகோணமலை மாவட்டம் உப்புவெளி அலஸ் தோட்டம் பகுதியில் கடல் அலையில் இழுத்துச் செல்லப்பட்ட வெளிநாட்டுச் சிறுவனை பொலிஸார் மீட்டுள்ளனர்.

அலஸ் தோட்டப் பகுதியில் இருக்கும் ஹோட்டல் ஒன்றுக்கு அருகில் பெற்றோருடன் நேற்றுமுன்தினம் மாலை கடலில் நீராடிக் கொண்டிருந்த சிறுவன் அலையில் இழுத்துச் செல்லப்பட்டார்.

அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த உப்புவெளி பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் உடனடியாக செயற்பட்டு சிறுவனைக் காப்பாற்றியுள்ளனர்.

செக் குடியரசு நாட்டைச் சேர்ந்த 07 வயதான ஹாஜேத் செபஸ்தியன் என்ற சிறுவனையே பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.





## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................


பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்

# தாய்லாந்தில் மீண்டும் வெடித்தது; அரசிற்கு எதிரான போராட்டம்



தாய்லாந்தில் மீண்டும் அரசுக்கு எதிரான போராட்டம் நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளது.

தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தில் கடந்த ஒரு மாதகாலமாக எதிர்கட்சிகள் ஊழல் மற்றும் பல குற்றச்சாட்டுகளை முன்வைத்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இதையடுத்து தங்கள் பதவியை எதிர்க்கட்சி எம்.பிக்கள் இராஜினாமா செய்தனர், நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தல் நடத்த பிரதமர் யிங்லக் ஷினவத்ரா முன்வந்தார்.

இருப்பினும் பிரதமர் தனது பதவியிலிருந்து விலக வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் மன்னரின் 86ஆவது பிறந்தநாளை ஒட்டி நிறுத்தப்பட்டிருந்த போராட்டம், மீண்டும் தொடரும் என அறிக்கை விடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஜனநாயகக் கட்சி காலவரையற்ற போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததன் பேரில், தலைநகர் பாங்கொங்கில் ஆயிரக்கணக்கானோர் நேற்று முன்தினம் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து போராட்டக் குழுத் தலைவர் தாங்க்ஸ்பான் கூறுகையில், இங்கு நடைபெறும் பேரணி அரசுக்கும், பிரதமருக்கும் நெருக்கடியை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.


இதையடுத்து வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி தேர்தலை நடத்த அரசு முயற்சி மேற்கொண்டுள்ளது.

மேலும், தேசிய சீரமைப்புக்கான திட்டத்தை கடந்த 21ஆம் திகதி அறிவித்ததுடன் அனைத்து கட்சிகளும் ஒத்துழைக்கும்படி பிரதமர் வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால், அரசின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்த எதிர்க்கட்சிகள் தேர்தலை புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளன.

உலகச் செய்திகள்

# மோடியின் சூறாவளிப்பிரசாரம்; 250 கூட்டங்களில் பேசத்திட்டம்



பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி சூறாவளிப் சுற்றுப்பயணமாக நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பாக 250 பொதுக் கூட்டங்களில் பேச திட்டமிட்டுள்ளார். அவரை அழைத்து பொதுக் கூட்டம் நடாத்த எல்லா மாநில பா.ஜ.க. தலைவர்களும் தீவிரமாக உள்ளனர்.

பா.ஜ.க.வுக்கு குறைந்த பட்சம் 200 தொகுதிகளில் வெற்றியை ஈட்ட வேண்டும் என்ற இலட்சியத்துடன் நரேந்திர மோடி ஆதரவு திரட்டி வருகிறார். மேற்குவங்கம், கேரளா, ஒரிசா மற்றும் வடகிழக்கு மாநிலங்களுக்கு சென்று பொதுக் கூட்டங்களில் பேசவும் மோடி திட்டமிட்டுள்ளார்.

இதுவரை பொதுக் கூட்டங்கள் மூலம் சுமார் 2 கோடி பேரை மோடி சந்திதுள்ளார். நாடாளுமன்ற தேர்தலுக்குள் சுமார் 25 கோடி வாக்காளர்களிடம் ஆதரவு திரட்ட வேண்டும் என்பது மோடியின் இலட்சியமாக உள்ளது.

உத்தரபிரதேசம், பீகார் ஆகிய இரு மாநிலங்களிலும் சாதி வாக்குகளே வெற்றியை நிர்ணயிப்பதாக உள்ளது. எனவே இந்த இரு மாநிலங்களிலும் "நரேந்திர மோடி பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்" என்ற கோஷத்தை எழுப்ப பா.ஜ.க.வினர் திட்டமிட்டுள்ளனர்.

# 40 தொகுதிகளிலும் வெற்றிபெற கடுமையாக பாடுபடவேண்டும்



(சென்னை)

நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றி பெற கடுமையாக பாடுபட வேண்டும் என்று தி.மு.க.வினரிடம் கட்சியின் பொருளாளர் மு.க. ஸ்ராலின் வலியுறுத்தியுள்ளார்.

செங்கல்பட்டில் இடம்பெற்ற கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்:


தி.மு.க. ஆட்சியில் மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தினோம். பல அரிய திட்டங்கள் தீட்டப்பட்டன. ஆனால், அ.தி.மு.கவினர் ஆட்சிக்கு வந்ததும் அந்தத் திட்டங்களை கிடப்பில் போட்டுவிட்டனர். இலங்கைத் தமிழர்களுக்காக மத்திய அரசிடம் தி.மு.க. சார்பில் பல கோரிக்கைகள் வைக்கப்பட்டன. ஆனால், அதற்கு மத்திய அரசு செவிசாய்க்கவில்லை. தமிழர்களின் எண்ணம், உணர்வுகளுக்கு எப்போதும் குரல் கொடுக்கும் ஒரே இயக்கம் தி.மு.க.தான்.

தமிழகத்தில் தற்போது தினமும் கொலை, கொள்ளை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. இதைத் தடுக்க ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. காஞ்சிபுரம் மாவட்டத்தில் பல்வேறு அரசியல் கொலைகள் தொடர்ந்து நடக்கின்றன. இதைத் தடுக்க பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை.

கூட்டணி பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அதை கருணாநிதி பார்த்துக்கொள்வார். நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. அரசுக்கு மக்கள் பாடம் புகட்டுவர்.

காங்கிரஸ் கட்சியுடனான கூட்டணியை தி.மு.க. முறித்துக் கொண்டது, இப்போது எடுத்த முடிவு அல்ல. மத்திய அரசில் இருந்து விலகும்போதே எடுத்த முடிவுதான் என்றார்.

# செயற்கை இதய அறுவைச் சிகிச்சை



உலகின் முதல் செயற்கை இதய மாற்று அறுவைச் சிகிச்சையை பிரான்ஸ் மருத்துவர்கள் வெற்றிகரமாக செய்துள்ளனர். பிரான்ஸை சேர்ந்த 75 வயது முதியவருக்கு 5 ஆண்டுகள் இயங்கக்கூடிய செயற்கை இதயம் பொருத்தப்பட்டுள்ளது.


பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த உயிரி மருந்தியல் நிறுவனமான கார்மட் இந்த செயற்கை இதயத்தை வடிவமைத்துள்ளது. இந்த இதயம் லித்தியம்-அயன் பற்றரி மூலம் இயங்கக்கூடியது. பற்றரியை உடலின் வெளிப்பகுதியில் அணிந்து கொள்ள வேண்டும்.

உயிரி பொருள்களுடன் மாட்டின் திசுக்களும் கொண்டு செயற்கை இதயம் உருவாக்கப்பட்டுள்ளதால், இதனை உடல் ஏற்றுக்கொள்ளாமல் நிராகரிப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. பிளாஸ்டிக் போன்ற செயற்கை இழைகள் பயன்படுத்தப்படாமல் மாட்டின் திசுக்கள் பயன்படுத்தப்பட்டதால், இரத்தம் உறைந்து கட்டியாவதும் தடுக்கப்படுகிறது.

இந்த முதல் செயற்கை இதய மாற்று அறுவைச் சிகிச்சை பாரிஸில் உள்ள ஜார்ஜஸ் போம்பிளெட மருத்துவமனையில் நடைபெற்றது என 'டெலிகிராப்' செய்தி வெளியிட்டுள்ளது.

# மக்களை காப்பாற்றச் சென்ற விமானம் மீது தாக்குதல்

## அமெரிக்கா கடும் கண்டனம்



தெற்கு சூடானில் மக்களை காப்பாற்றச்சென்ற விமானத்தின மீது போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கடும் கண்டனம் தெரிவித்துள் ளார்.

தெற்கு சூடானில் ஜனாதிபதி சல்வா கீரின் ஆட்சியை கைப்பற்றும் நோக்கத்தில், அங்குள்ள புரட்சி படையினர் போராட்டம் நடாத்தி வருகின்றனர்.

புரட்சிப் படையினரின் பிடியில் உள்ள போர் நகரத்தில் அவை தரையிறங்க முயன்ற போது, அமெரிக்க போர் விமானங்களின் மீது துப்பாக்கிச் சூடு நடாத்தியும், குண்டுகளை வீசியும் புரட்சிப் படையினர் ஆவேசத் தாக்குதல் நடாத்தினர். இதில் 4 அமெரிக்க வீரர்கள் படுகாயம் அடைந்தனர்.

இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று முன்தினம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆயுத பலத்தைப் 'பயன்படுத்தி தெற்கு சூடானின் ஆட்சியை கைப்பற்ற நினைப்பவர்களின் இத்தகைய செயற்பாடுகள் அமெரிக்காவும், சர்வதேச சமுதாயமும் அளித்து வரும் நீண்டகால ஆதரவை இழக்கும் நிலைக்கு தெற்கு சூடானை தள்ளிவிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# வீசாமோசடி தேவ்யானிக்கு கோடிக்கணக்கான சொத்துக்கள்



அமெரிக்காவில் வ்சா மோசடி சர்ச்சையில் சிக்கியுள்ள தேவ்யானிக்கு, கோடிக்கணக்கில் சொத்து இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அமெரிக்காவில் இந்திய தூதரகத்தில் பணியாற்றி வந்த தேவ்யானி என்ற பெண் அதிகாரி மீது, வீசா மோசடி செய்ததாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த விவகாரத்தில் அமெரிக்க அதிகாரிகள், தேவ்யானியை கைது செய்தது, அவரை நடத்திய விதம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின.

இதேவேளை, தேவ்யானி, ஆதர்ஷ் வீட்டு வசதி திட்டத்தில் முறைகேடாக வீடு ஒதுக்கீடு பெற்றுள்ளதாக பரபரப்பு தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆதர்ஷ் வீட்டு வசதி சங்க விதிமுறைப்படி, சொந்த வீடு இல்லாத அதிகாரிகள் தான் அரசு ஒதுக்கீட்டின் கீழ் வீடுகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

ஆனால் தேவ்யானிக்கு சொந்தமாக வீடுகள், நிலங்கள் இருந்த போதும் அவருக்கு ஆதர்ஷ் வீட்டு வசதி சங்கத்தில் வீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதர்ஷ் ஊழல் தொடர்பாக விசாரித்த குழு தாக்கல் செய்துள்ள அறிக்கையில், இந்த தகவல் இடம் பெற்றுள்ளது.

இதுதவிர மகாராஷ்டிராவில், எட்டு இடங்களிலும், கேரள மாநிலம் எர்ணாகுளத்தில் இரண்டு இடங்களிலும், உத்தரபிரதேச மாநிலம் கவுதம புத்தர் நகரில் ஒரு இடத்திலும் சொத்துக்கள் உள்ளன.

இதன் மூலம் அவருக்கு ஆண்டு தோறும் 1.26 இலட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இந்தத் தகவலை கடந்தாண்டு அவர் தாக்கல் செய்துள்ள வருமான வரி தாக்கல் அறிக்கையில் தெரிவித்துள்ளார். இந்தத் தகவல்கள் அனைத்தும் வெளியுறவு அமைச்சக இணையத்தளத்தில் இடம் பெற்றுள்ளதாக மகாராஷ்டிரா பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

# காங்கிரசுடன் இணைந்து ஆட்சி; ஆம் ஆத்மி கட்சி அறிவிப்பு

## பா.ஜ.க. கடுமையான சாடல்

டில்லியில் காங்கிரசுடன் இணைந்து ஆம் ஆத்மி ஆட்சி ஆட்சியமைக்கவுள்ளது. ஆம் ஆத்மி கட்சியின் இந்த முடிவை பா.ஜ.க. கடுமையாக சாடியுள்ளது.

டில்லியில் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நிலையில் எந்தக்கட்சி ஆட்சி அமைக்கும் என்ற இழுபறி நிலைமை கடந்த 10 நாட்களுக்கும் மேலாக நீடித்து வந்தது.

இந்நிலையில் காங்கிரஸ் ஆதரவுடன் நிபந்தனை களுடன் ஆட்சி அமைக்கப்போவதாக நேற்று ஆம் ஆத்மி கட்சி அறிவித்தது. ஆம் ஆத்மியின் இந்த அறிவிப்பு குறித்து காங்கிரஸ் வரவேற்றுள்ளது.

நிபந்தனையில்லா ஆதரவு வழங்கிவருவதாக ஆம் ஆத்மி கட்சியினர்தான் வதந்திகளை பரப்பி வருகின்றனர். மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அக்கட்சி நிறைவேற்றும் என எதிர்பார்ப்பதாக டில்லியின் முன்னாள் முதல்வர் ஷீலா தீட்சித் தெரிவித்துள்ளார். இதேவேளை, காங்கிரஸ் ஆதரவுடன் ஆம் ஆத்மி ஆட்சி அமைப்பது மக்கள் தீர்ப்புக்கு துரோகம். வாக்களித்த மக்களுக்கு ஆம் ஆத்மி கட்சி துரோகமிழைகிறது என்று டில்லி பா.ஜ.க சட்டசபைத் தலைவர் ஹரஷ்வர்தன் சாடியுள்ளார்.

# அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை துரிதகதியில் நிர்மாணப் பணிகள்



அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையின் உட்கட்டுமானப் பணிகளை அடுத்த மாத இறுதிக்குள் நிறைவு செய்வதற்கான நடவடிக்கையினை துரிதப்படுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார்ந்தோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டைக்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் உட்கட்டுமானப்பணிகளை பார்வையிட்டதுடன் துறைசார்ந்தோருடனும் கலந்துரையாடினார்.

இதன்போது கைத்தொழிற்பேட்டைக்கான 65 ஏக்கரில் முதற்கட்டமாக 25 ஏக்கருக்கான கட்டுமானப்பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன்பிரகாரம் உள்ளக வீதிகள், வெள்ளநீர் வாய்க்கால்கள், வாகனத்தரிப்பிடம், தீயணைப்பு பிரிவு, மற்றும் மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன், தொழிற்பேட்டைக்கு தேவையான நீர்வசதி, மின்சாரம், போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சர் துறைசார்ந்தோருடன் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் அங்கு முன்னெடுக்கப்பட்டு வரும் பல்வேறு கட்டுமானப்பணிகளைப் பார்வையிட்ட அமைச்சர், அடுத்த மாத இறுதிக்குள் அனைத்து கட்டுமானப்பணிகளையும் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு துறைசார்ந்தோருக்குப் பணிப்புரை விடுத்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கவுள்ள மேற்படி கைத்தொழிற்பேட்டைக்கான கட்டுமானப்பணிகளுக்கு இலங்கை மற்றும் இந்திய அரசுகள் நிதியுதவி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது கைத்தொழில் அபிவிருத்தி சபையின் உதவிப் பணிப்பாளர் சிவகெங்காதரன் உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் உடனிருந்தனர்.

## காணி உரிமை...

கிடைத்துள்ளன. இவற்றில் 22 ஆயிரம் முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது எனவும் அசோக பீரிஸ் கூறியுள்ளார்.

## மாணவர்கள்...

அந்த சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். இந்த நடவடிக்கையை முறியடிப்பதற்காக பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை அறிவுறுத்துவதற்கான செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பெற்றோர்கள் தமது பிள்ளைகள் குறித்து அவதானமாக இருக்குமாறு போதைபொருள் கட்டுப்பாட்டு சபை கேட்டுக்கொண்டுள்ளது.

# கிளி. கண்ணகிநகர் கொலை; சந்தேகநபர் விளக்கமறியலில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, கண்ணகி நகரில் குடும்பஸ்தர் ஒருவரை அடித்துக் கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யபட்ட சந்தேக நபரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

மேற்படி பிரதேசத்தில் மரக்காலையில் வேலை செய்து வரும் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 7 ஆம் திகதி அடித்துக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு நால்வர் விடுதலை செய்யப்பட்டதுடன், ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தார். அதன்போது நீதிபதி சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று மேற்படி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பொலிஸாரினால் நீதிமன்றத்தில் கொலைக்கான சான்றுப் பொருட்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

இதன்போது, நீதிபதி எம்.ஐ. வகாப்தீன் மேற்படி சந்தேகநபரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# வன்னி கவிஞர்களுக்கு 'காவிய பிரதீப்' விருதுகள்

(கொழும்பு)

தேசிய ஒற்றுமைக்கான இலங்கை கவிஞர்களின் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட 24 ஆவது விருது வழங்கும் நிகழ்வில் வன்னியைச் சேர்ந்த இரு இளம் கவிஞர்களுக்கு காவிய பிரதீப் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு 7 இல் அமைந்துள்ள மகாவலி கேந்திர நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கடந்த காலப்பதிவுகளை வெளிப்படுத்திய வன்னியூர் சு.செந்தூரன் எழுதிய "நிலாவைத் தேடும் வானம்" என்ற கவிதை நூலுக்கும் யோ.புரட்சி எழுதிய "இடம்பெயர்ந்த ஊரில் இடம்பெயராத நாய்" என்ற கவிதை நூலுக்குமே இந்த விருதுகள் கிடைத்துள்ளன.

மேற்படி விருது வழங்கும் நிகழ்வு வருடாவருடம் தேசிய ரீதியில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மனித...

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமையினை தொடர்ந்து அந்த பகுதிக்கு மறுதினம் சனிக்கிழமை மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் சென்று பார்வையிட்டதோடு அவர் முன்னிலையில் மனிதப் புதை குழிகள் தோண்டும் பணிகள் இடம்பெற்றன.

இதன் போது 10 இற்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ஒரு சில மனித எலும்புக்கூடுகள் துண்டு துண்டுகளாக மீட்கப்பட்டது. பல முழுமையாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மனித எலும்புக்கூடுகள் தொடர்ச்சியாக கண்டுபிடிக்கப்பட்டு வருவதினால் சட்ட வைத்திய நிபுணரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ள வேண்டும் என மன்னார் மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி மன்னார் நீதவானின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

இந்த நிலையில் சட்ட வைத்திய நிபுணருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் மனிதப் புதை குழி தோண்டப்பட்டு முழுமையாக குழியினுள் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளை நேற்று மாலை 3.30 மணியளவில் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்த நிலையில் நீதவானின் உத்தரவிற்கமைவாக அநுராதபுர சட்ட வைத்திய நிபுணர் வைத்தியரெட்ணவும் நேற்று மாலை சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்தார்.

மனித எழும்புக்கூடுகளை பார்வையிட்ட சட்ட வைத்திய நிபுணர் குறித்த மனித எச்சங்கள் வீதிக் கரைகளில் இருப்பதினால் வீதியில் அகழ்வு பணிகளை மேற்கொள்ளவும். அருகில் உள்ள காடுகளை அகற்றி பணிகளை தொடர வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிலையில் குறித்த வீதியில் அகழ்வு பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரிக்கு உத்தரவிட்டதோடு குறித்த பகுதிகளில் உள்ள காடுகளை துப்புரவு செய்ய போதியளவு ஊழியர்களை தயார்படுத்துமாறும் மன்னார் பொலிஸ் அத்தியட்சகர் லக்சிறி விஜயசேனக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் குறித்த மனிதப் புதைகுழிகள் காணப்படுகின்ற இடத்தில் அகழ்வுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டதோடு நேற்று மாலை முதல் சனிக்கிழமை வரை குறித்த பகுதிக்கு உரிய பாதுகாப்புக்களை வழங்குமாறும் மனித எச்சங்கள் அகழும் வரை திடீர் என ஏற்படக்கூடிய மழை, வெயில் ஆகியவற்றில் இருந்து அவற்றை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## போராட்டத்துக்கு...

கொண்டார். கடந்த சுமார் 6 வருடங்களாக போதனா வைத்தியசாலையில் பரியோவான் முதலுதவிப் படை மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தொண்டர்களாக பணியாற்றி வந்தனர். இந்நிலையில் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி கடந்த பத்து நாட்களாக குறித்த தொண்டர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை மேற்கொண்டதன் மூலம் வைத்தியசாலை நிர்வாகத்தினரும், சிகிச்சைக்காக வரும் நோயாளர்களும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கி வந்தனர்.

இந்நிலையில், இப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முகமாக நேற்று வைத்தியசாலைக்கு சென்ற அமைச்சர், போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொண்டர்களுடன் கலந்துரையாடியது மட்டுமல்லாது வைத்தியசாலை நிர்வாகத்தினதும், பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினதும், சுகாதார அமைச்சினதும் நடைமுறைப் பிரச்சினைகள் தொடர்பாக அவர்களுக்கு எடுத்து விளக்கினார்.

இதன்பிரகாரம் வைத்தியசால்லயில் காணப்படும் ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக முதற்கட்டமாக 68 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும், ஏனையோரது நியமனங்கள் தொடர்பாக ஜனவரி 2 ஆம் திகதி அமைச்சரவையில் கலந்துரையாடி சாதகமாக பரிசீலிக்கவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியதுடன், அதுவரையில் போராட்டத்தை கைவிட்டு வைத்தியசாலையினதும் நோயாளர்களினதும் நலன்களை கருத்தில் கொண்டு தொண்டர்கள் பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அதனொரு அங்கமாக பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் முகமாக தொண்டர்களுக்கு பானம் வழங்கிவைத்தார்.

எதிர்வரும் வியாழக்கிழமை ஒருதொகுதியினருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதுடன், ஏனையோருக்கு ஜனாதிபதியுடன் கலந்துரையாடியும் சிறப்பு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்தும் அவர்களை தற்காலிகமாக பணிக்கு அமர்த்துவது தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்படுமென்றும் தற்காலிகமாக இத் தொண்டர்கள் பணியாற்றும் போது மூன்று வருட அவகாசம் வழங்கப்பட்டு அதற்குள் இவர்கள் தங்களது கல்வித்தகைமையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

இதன்போது யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் திருமதி பவானி பசுபதிராஜா, வைத்தியசாலை அபிவிருத்திக் குழு செயலாளர் இரா. செல்வவடிவேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

அத்துடன், குறித்த விடயம் தொடர்பாக அங்கு வருகைதந்திருந்த ஊடகவியலாளர்களுக்கும் அமைச்சர் கருத்துரை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இன நல்லிணக்கத்தை...

தெரிவித்துள்ளார். மண்டேலாவின் செயற்பாடுகள் இல்லையெனில் தென்னாபிரிக்காவில் நல்லிணக்கத்தை எதிர்பார்த்திருக்க முடியாது. எதிரியுடன் பேசுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்கி கொண்டதன் மூலமே பிரச்சினைக்கு தீர்வைக்காண முடிந்தது. அதனை ஒருபோதும் மாற்றமுடியாது என்றும் ஜியோப் குறிப்பிட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற உண்மையை கண்டறியும் விசாரணைகளின் போது கொலை செய்யப்பட்ட ஒருவரின் தாயை பார்த்து டுடு ஆண்டகை, கொலை செய்தவரை மன்னிப்பீர்களா? என்று கேட்டபோது அந்த தாய் ஆம் நான் எல்லாவற்றையும் மறந்து அவரை மன்னிப்பேன். ஏனெனில் தென்னாபிரிக்காவில் இன்று தேவையானது சமாதானமே என்று குறிப்பிட்டார்.,

எனவே இலங்கையிலும் இன்று அதுவே தேவையாக உள்ளது. மன்னிப்பு என்ற விடயமே எதற்கும் தீர்வை தரும். போர்க்குற்றங்கள் மற்றும் ஏனைய குற்றங்களுக்காக சர்வதேசத்தின் விசாரணைகளுக்கோ அல்லது ஏனைய சட்ட அம்சங்களுக்கோ செல்ல தேவையில்லை

தென்னாபிரிக்காவில் உள்ளக ரீதியில் அமைக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் விசாரணைகளின்போது இந்த அனைத்து விடயங்களுக்கும் தீர்வுகள் காணப்பட்டன.

எல்லா பிரச்சினைகளுக்கும் உள்ளூரில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் தீர்வுகள் காணப்பட்டன. இன்று தென்னாபிரிக்கா சமாதானமாக இருக்கிறது என்று ஜியோப் தெரிவித்துள்ளார்,

தென்னாபிரிக்காவில் ஆட்சி மாற்றங்களுக்காக பல சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்றன. அதில் பல சுற்றுக்கள் தோல்வியடைந்தன.எனினும் தொடர்ந்தும் அயராது மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் அடிப்படையிலேயே தென்னாபிரிக்காவில் தீர்வுகள் காணப்பட்டன.

மண்டேலாவும் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். இந்த விடயங்களை இலங்கையால் ஏன் நடைமுறைப்படுத்த முடியாது என்று ஜியோப் கேள்வி எழுப்பினார்.

இலங்கையை பொறுத்தவரையில் நடுநிலையாளர்களை அல்லது சமாதானம் தொடர்பாக நல்லிணக்கம் தொடர்பாக பேசுபவர்களை குறி வைத்து விமர்சனம் செய்வது, கட்டுரை எழுதுவது போன்ற அம்சங்கள் நிறுத்தப்பட வேண்டும். அவையே சமாதான முன்னெடுப்புக்களுக்கு பாதமாக அமைந்துவிடுகின்றன. உண்மை மற்றும் நல்லிணகத்தை கண்டறியும் முன்னர் இலங்கையில் வரலாற்றை திரும்பிப் பார்க்க வேண்டும். இதன்போது உண்மையை உணர்ந்து கொள்ள முடியும்.


இலங்கையை பொறுத்தவரை உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களை உரிய முறையில் செயற்படுத்த வேண்டும். இதன்போது குறைகள் காணப்படுமாயின் சர்வதேச விமர்சனங்களையும் அழுத்தங்களையும் தவிர்க்கமுடியாது.

இலங்கையை பொறுத்தவரை சில விடயங்கள் தற்போது உரிய முறையில் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே எதுவும் பிழையாக நடக்கிறது என்று கூறுவதற்கு தமக்கு தகுதியில்லை என்றும் தென்னாபிரிக்க உயர்ஸ்தானிகர் ஜியோப் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் உண்மை மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான உதவி கோரப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தென்னாபிரிக்கா உலக தமிழர் பேரவை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் தொடர்புகளை கொண்டிருக்கிறது. இதன் ஒரு கட்டம் எதிர்வரும் ஜனவரியில் இடம்பெறும் என்றும் ஜியோப் எதிர்வுகூறியுள்ளார்.

# கட்சியின் மறுசீரமைப்பு புதுமுகங்கள் வருகையால் உற்சாகம்

## நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின்



எமது கட்சியின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுவரும் நிலையில், பல புதிய முகங்களின் வரவுகள் எமக்கு பெரும் மகிழ்ச்சியைத் தருவதுடன் அது எமது நடை முறை சாத்தியமான அரசியல் பயணத்திற்கு பாரிய உந்து சக்தியாகவும் அமைந்துள்ளதாக ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்) தெரிவித் துள்ளார்.

நேற்று ஈ.பி.டி.பியின் யாழ். அலுவலகத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், மற்றும் நெடுந்தீவு மக் கள் பிரதிநிதிகளுடன் இடம் பெற்ற சந்திப்பொன்றின் போது கருத்துத் தெரிவித்த நாடாளு மன்ற உறுப்பினர்,

எமது கட்சியை புனரமைத்து அதன் செயற்பாடுகளை விரி வாக்கஞ் செய்ய வேண்டும் என் பது எமது தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது நீண்ட கால நோக்கமாக இருந்து வந் தது. இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் நாம் கட்சிப் புனர மைப்புப் பணிகளை ஆரம்பித் துள்ளோம்.

புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்த நாள் முதல் தொட ர்ந்து பல புதிய முகங்கள் கட் சிக் கூட்டங்களில் கலந்து கொண்டு பல்வேறு கருத்துக் களையும் ஆலோசனைகளை யும் எமக்கு வழங்கி வருகின்ற னர். இது எமக்கு பாரிய பலத்தை அளித்து வருகிறது.

இந்த வகையில் எ்திர்வரும் காலங்களில் எமது மக்கள் நலன்சார்ந்த பணிகளை மேலும் விரிவுபடுத்துவ்தற்கு இம் மக்க ளது ஒத்துழைப்புக்கள் எமக்கு பெரிதும் உந்துசக்தியாக அமை யும் என்ற நம்பிக்கை எமக்கு ள்ளது. புதுமுகங்களின் வருகை எமது கட்சிக்கு வலிமை சேர்க் கிறது என்றும் அவர் .மேலும் தெரிவித்தார்.

# மருந்துக்கடைகளை குளிரூட்ட அறிவுறுத்தல்

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பார்மசிகள் அனைத்தையும் குளிரூட்டல் செய்யுமாறு சுகாதார அதிகாரிகளினால் அறிவுறுத்தல் செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில மருந்து வகைகள் குளிரூட்டப்பட்ட இடங்களிலேயே பாதுகாக்கப்படவேண்டுமாதலால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது. குடாநாட்டில் உள்ள பெரும்பாலான பார்மசிகளிள் குளி ரூட்டப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. சில மருந்துகள் குளிரூட்டிப்பெட்டிகளில் வைக்கப்படுகின்றன.

ஆனால் பார்மசிகளைக் குளிரூட்டிய நிலையில் வைத்திருக்கு மாறு அறிவுறுத்தும் அதிகாரிகள் மாவட்டத்தில் உள்ள அரச வைத்தி யசாலைகளில் காணப்படும் மருந்தகங்களைப் பற்றி அக்கறை செலுத்துவதில்லை என சில பார்மசி உரிமையாளர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர். அம்மருந்தகங்கள் குளிரூட்டப்படாத நிலையிலேயே காணப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எந்தவித குளிர் சாதனமுமின்றி இயங்கிவரும் அரச வைத்திய சாலைகளில் உள்ள மருந்தகங்களில் நோயாளர்களுக்கான மருந்து கள் அதிகளவில் வழங்கப்படுகின்றன. அவற்றை கவனத்தில் கொள் ளாது தனியார் பார்மசிகளை மட்டும் குளிரூட்டி வைத்திருங்கள் எனக்கூறுவது பொருத்தமற்றது என அவற்றின் உரிமையாளர்கள் பலர் தெரிவித்துள்ளார்கள்.

மிக விரைவில் பார்மசிகளைக் குளிரூட்டப்பட்டவையாக மாற்றிக் கொள்ளுமாறு அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுவதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. (137)

# தினசரி ஒன்பது பேர் மரணம்; வீதி விபத்துக்களில் சிக்கி

(கொழும்பு)

நாடு முழுவதும் இடம்பெறும் வீதி விபத்துக்களில் தினசரி ஒன்பது பேர் மரணமடைகின்ற னர். அத்துடன் பலர் அங்கவீன மடைகின்றனர்.

30 வருட யுத்தத்தினால் வலது குறைந்தவர்களைப் பார்க்கினும் கூடுதலானோர் தற்போதைய வாகன விபத்துக்களால் அங்க வீனர்களாவதாக கண்டி பெரியா ஸ்பத்திரியின் அங்கமுறிவு சத் திரசிகிச்சை நிபுணரான டாக்டர் காமினி எதிரிசிங்க தெரிவித் துள்ளார்.

ஒரு நாளில் பல்வேறு வயது மட்டத்தினருள் ஒன்பது பேர் வரை மரணிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். வருடாந்தம் வாகன விபத்துக்களில் 2500 பேர் வரை மரணிக்கின்றனர். அத்துடன் 10,000 பேர் வரை அங்கவீனமா கின்றனர்.

யுத்தத்தில் வருடாந்தம் 4000 பேர் அங்கவீனர்களாகினர். வாகன விபத்துக்களால் அங்க வீனமானோர் இதனைவிடக் கூடுதல் என்றும் அவர் தெரிவித் துள்ளார். யுத்தம், டெங்கு ஆகி யவற்றால் ஏற்பட்ட சேதத்தையும் தாண்டி வாகன விபத்துக்கள் முதலிடம் வகிக்கின்றன.

# இந்திய புலமைப்பரிசில் இலங்கை மாணவர்களுக்கு

(கொழும்பு)


இலங்கையை சேர்ந்த 180 மாணவர்களுக்கு இந்தியாவில் உள்ள சில பிரதான பல்கலைக் கழகங்களில் கற்பதற்கான புல மைப் பரிசில்களை வழங்க உள் ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித் துள்ளது.

பொறியியல், விஞ்ஞானம், வர்த்தகர், பொருளியல் விஞ் ஞானம், வணிகம், மனித வளம் ஆகிய துறைகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்த புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

பட்டப்படிப்பு, பட்டப்பின் படி ப்பு, கலாநிதி பட்டம் ஆகிய வற்றை வழங்குவதற்காகவே இந்த புலமைப் பரிசில்கள் வழங்கப்படுவதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித் துள்ளது.

# யாழ்.மாநகரசபைத் தொண்டர்களுக்கு சேவைக்கால அடிப்படையில் நியமனம்

## ஆணையாளர் பிரணவநாதன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையில் பணி யாற்றிய தொண்டர்களுக்கு சேவைக் கால அடிப்படையில் கல்வித் தகைமையின் இறுக்கம் தளர்த்தப்பட்டு நிரந்தர ஊழி யர்களாக உள்வாங்கப்படுவார் கள் என மாநகர ஆணையாளர் செல்லத்துரை பிரணவநாதன் தெரி வித்துள்ளார்.

இது தொடர்ப ாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாநகர சபையில் 150 பணியாளர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேற்றைய தினம் நேர்முகத்தேர்வு நடைபெறுவதற் கான ஏற்பாடுகள் செய்யப்பட் டன. இதற்காக பத்திரிகைகளில் மாநகர சபையினால் வெளியி டப்பட்ட விளம்பரங்களில் கல் விப் பொதுத்தராதரப் பரீட்சை சித்தி பெற்றவர்கள் உள்வாங்கப் படுவார்கள் எனவும் அறிவுறுத் தப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஏற்கனவே யாழ். மாநகர சபையில் நிரந்தர நியமனம் கோரி போராட்டம் நடத்திய மாநகர சபையின் தற் காலிக சுகாதாரத் தொண்டர்கள் தங்களுக்கு இல்லாமல் வெளி நபருக்கு நியமனங்கள் வழங்கப் படவுள்ளதாக கருதி நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்ட னர்.

இருந்தும் மாகாண ஆளுந ரின் அதிகாரத்தின் மூலம் பொதுச் சேவை ஆணைக்குழுவினால் எதிர்பார்த்த கல்வித் தகைமை யினை விட குறைந்த கல்வித் தகைமை உடையவர்களையும் உள்வாங்குவதாக தீர்மானித்தி ருந்தோம்.

ஆகவே இது தொடர்பாக அறிந்திராத சுகாதாரத் தொண் டர்கள் போராட்டத்தில் ஈடுபட முனைந்தனர். எனினும் அவர்க ளுக்கு சேவைக்கால அடிப்ப டையில் நியமனம் வழங்கப்படும் என யாழ். மேயர் யோகேஸ்வரி பற்குணராசாவினால் இதன் போது விளக்கமளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தப் போராட்டம் கைவிடப்பட்டது என் றார்.

எனினும் சுகாதாரத் தொண் டர்களுக்கான நேர்முகத்தேர்வு நேற்று நடைபெறவிருந்த போதும் அவர்கள் போராட்டத்தில் ஈடு பட்டமையினால் பிறிதொரு நாளில் நேர்முகத் தேர்வு நடை பெறுமென அறிவிக்கப்பட்டுள் ளது.

# வலி.மேற்கின் உட்கட்டுமானம் தாமதமற்ற நடவடிக்கை வேண்டும்

## எதிர்க்கட்சித்தலைவர் வேண்டுகோள்

(வலி.மேற்கு)

வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட உட்கட்டுமான அபி விருத்தியை முன்னெடுக்க சபை மட்டுமின்றி பொது மக்களும், பொது அமைப்புக்களும் முன் வரவேண்டும்.

வலி.மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட பல உட்கட்டுமானங் கள் போதுமான நிதி ஒதுக்கீடு இன்றி இடை நடுவில் தொக்கி யுள்ளன.

எனவே நிதி கிடைக்கப் பெற்ற நெல்சிப் (புறநெகும) நிதியை முழுமையாக பயன் படுத்தி புதிய மீன்சந்தையை புதிய இடத்தில் அமைக்க பூரண ஒத்துழைப்பினை வழங்குவேன்.

இவ்வாறு வலி.மேற்கு பிர தேசசபையின் எதிர்க்கட்சித் தலைவர் சிவகுரு பாலகிருஸ் ணன் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச அபிவி ருத்தி ஊடாக மக்களின் தேவை களை முன்னெடுத்தல் எனும் தலைப்பில் எதிர்க்கட்சித் தலை வர் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) மேலும் தெரிவிக்கை யில்,

சங்கானையும், சுழிபுரமும் இணைந்த நகரத்திட்டமிடலுக் காக தயார்படுத்தி வருகின் றோம். இதன் முதற்கட்டமாக சங்கானை பிரதேச சபைக்குட் பட்ட அபிவிருத்தி திட்டங்களை நாம் வலயப்படுத்த வேண்டும்.

இதில் எந்த தேவைகளை முன்னுரிமைப்படுத்தவேண்டும். எதற்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதனை ஆராய வேண்டும்.

சங்கானை மீன் சந்தை புதிய இடத்தில் அமைவதால் நகர திட்டமிடலுக்கு முதற்படியாக அமையும். இத்திட்டம் முன் னகர்த்தப்படவேண்டும் என் பதனை கடந்த 5 மாதங்களுக்கு முன்னரே நான் அதற்கான நியா யப்படுத்தல்களை நாடாளுமன்ற உறுப்பினரும், வலி.மேற்கு பிர தேச ஒருங்கிணைப்புக்குழு தலைவருமான முருகேசு சந்திர குமாரின் கவனத்திற்கு கொண் டுவந்தேன்.

இதன் ஊடாக கிடைக்கப் பெற்ற அனுமதி அதன் பின்னர் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அனுமதி கிடைத்தது. இதன் பின்னர் இத் திட்டம் காலதாமதம் அடையா மல் முன் உபாய திட்டத்தின் ஊடாக முன்னெடுத்து பிரதேச அபிவிருத்தியை கொண்டு செல்ல சபையின் தவிசாளர் முன்வரவேண்டும்.

இதனைத்தொடர்ந்து வலி. மேற்கின் ஏனைய தொடர் அபி விருத்தி தொடர்பில் கவனத்தில் எடுக்கப்படும் எனவும் சி.பால கிருஸ்ணன் (ஜீவன்) தெரிவித் தார்.

# இலங்கையர்களுக்கு ஆபத்து இல்லை

தென் சூடானில் மோதல்கள் ஏற்பட்டுள்ள நிலையில் அங்குள்ள இலங்கை பிரஜைகள் மிகவும் பாதுகாப்பாக இருப்பதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் அவர்களை இலங்கைக்கு அழைத்து வரும் எந்த தேவையும் இப்போது எழவில்லை எனவும் அமைச்சு குறிப்பிட் டுள்ளது. தென் சூடான் ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்றும் நோக்கில் புரட்சிப் படையினர் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதுடன் கடந்த சில தினங்களில் இடம்பெற்ற தாக்குதல்களில் சுமார் 500 பேர் உயிரிழந்தனர்.

தென் சூடானில் சுமார் 75 இலங்கை பிரஜைகள் தொழில் புரிந்து வருகின்றனர். எவ்வாறாயினும் தொழில் வாய்ப்பை பெற்று தென் சூடான் செல்வது தொடர்பில் அவதானத்துடன் இருக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கேட்டுக்கொண் டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 டிசம்பர் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.